சுதந்திரன்

விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1998 ஆனி திங்கள் 1-ம் நாள் (15—6—67) வியாழக்கிழமை ரபி.அவ் 6 | [illegible]த்தகம் 20
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலைபேசி எண்-3411 த. பெ. 1183 | [illegible]

## புயலுக்குமுன் அமைதி

மத்தியக் கிழக்கில் போர் ஓய்ந்தது. ஆனால் கொந்தளிப்பு தணியவில்லை. ரஷ்யாவும் அதன் சார்பு நாடுகளும் அரபு நாடுகளுக்குப் பெருமளவில் ஆயுதங்களை வழங்க முன்வந்துள்ளன. இஸ்ரேலுடன் ராஜீயத் தொடர்பைக் கைவிட்டது அதற்கான ஆரம்ப ஏற்பாடாகும். மீண்டும் பயங்கர யுத்தம் ஏற்படுவதே இதன் விளைவாக இருக்க முடியும். எனவே இப்பொழுது ம.கிழக்கில் நிலவும் சமாதானம் புயலுக்கு முன் தோன்றும் அமைதியாகும். இது நீறு பூத்த நெருப்பு.

யுத்தத்தில் அரபு உலகம் தோல்வி கண்டது. ஆனால் அதை விடப் பெருந் தோல்வி அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் கிடைத்தது. பெருமளவுக்கு அரபு மக்களின் வெறுப்பையும், எதிர்ப்பையும் தேடிக் கொண்டதே இந்த யுத்தத்தில் இவ்விருவல்லரசுகளும் கண்ட தோல்வி.

அரபு உலகிலே இவ்விரு வல்லரசுகளின் செல்வாக்கை அழிக்க விரும்பியது ரஷியா. இந்த விருப்பம் இப்போரில் நிறைவேறியுள்ளது. இது ரஷியா கண்ட ஒரு வெற்றி.

அரபு நாடுகள் தோற்றதெனினும், அரபுதேசியம் தோற்கவில்லை. பாரசீக வளை குடா முதல் அட்லாண்டிக் பெருங்கடல் வரை எழுச்சி பெற்றுள்ள அரபுதேசியத்தை உலகில் எந்த சக்தியாலும் தோற்கடித்து விட முடியாது.

நாசரின் ராஜிநாமா அரபு தேசியத்தை வீறு கொண்டெழச் செய்தது. அரபு உலகமே நாசரை முழு மனதுடன் ஆதரிக்கிறது என்பதை அவரது ராஜிநாமா எடுத்துக் காட்டி விட்டது.

அரபுகளுக்குத் தோல்வியைத் தேடிக் கொடுத்த பிறகுமா நாசருக்கு இத்தனை செல்வாக்கு என்று உலகம் வியந்தது. அவரது மகத்தான செல்வாக்குக்கு ஒரே காரணம் அரபு தேசயத்தின் சின்னமாக அவர் விளங்குவதே.

மத்தியக் கிழக்கில் நிரந்தர அமைதி நிலவ வேண்டுமென்றே உலகம் விரும்புகிறது. அதற்கு பாலஸ்தீன அகதிகள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

12 இலட்சம் அரபிகள் இஸ்ரேலிலிருந்து அநாதைகளாக வெளியேறியதைக் கண்டு அன்று உலகமே கண்ணீர் விட்டது. அந்த அகதிகள் 20 ஆண்டுகளாக அகதிகள் முகாம்களில் படும் கஷ்டங்கள் உள்ளத்தை உருக்கும் சோகக்கதையாகும்.

அவர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்க வேண்டும் அதுவரை இஸ்ரேல்—அரபு மோதல் நீடிக்கும். அத்துடன் சிரியா அரசாங்கத்தை விழத்தும் முயற்சியையும் மேலை வல்லரசுகள் கைவிட வேண்டும். இதுவே ம. கிழக்கில் நிரந்தர அமைதி நிலவுவதற்கான ஒரே வழி.

இஸ்ரேல் ஒரு குட்டிவல்லரசாக முயற்சி செய்வதும், பிற நாடுகளிலுள்ள யூதர்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதற்காக அரபுப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதும் அரபு உலகத்துக்கு ஆத்திரமூட்டும் செயலாகும். இஸ்ரேல் நீடித்து நிலைத்து நிற்க வேண்டுமானால் இந்தப் போக்கைக் கைவிட்டு அரபு நாடுகளின் நல்ல நண்பனாக வாழ வேண்டியது அவசியமாகும்.

# அணுகுண்டு இஸ்ரேலிடம் இருக்கிறது? நாசருக்கும் கிடைக்கும்

இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது. புது டில்லி ராஜீய வட்டாரங்களிலும் இதே வதந்தி அடிபடுவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாகக் கூறப்படுவதால் தானும் அணு ஆயுதங்களைப் பெறுவதற்கு ஐக்கிய அரபுக் குடியரசு முயற்சி செய்வதாகவும், அநேகமாக சீனாவிடமிருந்தே ஐ. அ. குடியரசு அணு ஆயுதங்களை வாங்கக் கூடுமென்றும் ராஜதந்திர வட்டாரங்கள் ஹேஷ்யம் கூறின.

எதிர் காலத்தில் மத்தியக் கிழக்கில் அணு ஆயுத யுத்தம் ஏற்படக் கூடிய அறிகுறிகள் தோன்றியுள்ளன என்று சர்வதேச விவகாரங்களை நுணுக்கமாக அவதானிக்கும் விஷயம் தெரிந்தவர்கள் கூறுகின்றனர்.

இஸ்ரேல் ஏற்கனவே அணுகுண்டு வைத்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலத்த வதந்தி அடிபடுகிறது.

புது டில்லி ராஜீய வட்டாரங்களிலிருந்து கிடைத்த ஒரு செய்தியை அடிப்படையாகக் கொண்டே இந்த வதந்தி அடிபடுவதாக அறியப்படுகிறது.

இந்த யுத்தத்தில் இஸ்ரேல் தோல்வி அடைந்திருக்குமானால் அது அணு ஆயுதங்களை உபயோகித்திருக்கக் கூடுமென்று அவதானிகள் கருதுகின்றனர். இஸ்ரேலுக்கு அணுகுண்டு எங்கிருந்து கிடைத்திருக்கலாம் என்பதற்கு இதுவரை எதுவித தகவலுமில்லை.

அணு ஆயுதப் போர் வருங்காலத்தில் ஏற்படக் கூடுமென்று எதிர்பார்த்து அரபு நாடுகளும் அணுகுண்டு பெறும் விஷயத்தில் அக்கறை காட்டுவதாகவும் ஜனாதிபதி நாசர் அணு ஆயுதங்களைப் பெற முயற்சி செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

நாசரின் இந்த முயற்சிக்குக் காரணம் இஸ்ரேலிடம் அணு ஆயுதம் இருப்பது தானாம்.

நாசர் சீனாவிடமிருந்தே அணு ஆயுதங்களைப் பெறக் கூடுமென்று நம்பப்படுகிறது.

சீனப் பிரதமர் சூ-என்-லாய் சில அணு ஆயுதங்களை நாசருக்குக் கொடுப்பதற்கு இசைந்திருப்பதாகவும் ஏற்கனவே பேச்சு வார்த்தைகள் நடந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

# பொலீசு நிலையங்களில் தமிழில் வாக்குமூலம்

## பாராளுமன்றத்தில் கேள்வி

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் வாக்குமூலங்கள் முழுவதும் தமிழிற் பதிய போதிய வசதிகள் இல்லாதது குறித்தும், வசதிகள் செய்து கொடுக்கப்படுமா என்றும் கிளிநொச்சித் தொகுதி எம். பி. இம் மாதம் 19ந் திகதி பாராளுமன்றம் கூடும் பொழுது பிரதமரைக் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

இம் மாதம் 19ந் திகதி பாராளுமன்றம் கூடும் பொழுது பிரதம மந்திரியிடம் பின்வரும் கேள்விகளை பண்டிதர் திரு. இரத்தினம் எம். பி. கேட்பார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பொலீஸ் நிலையங்களில் தமிழிற் கொடுக்கப்படும் வாக்கு மூலங்கள் முழுவதையும் தமிழிற் பதிவு செய்ய வசதிகள் இல்லையென்பதை அவர் அறிவாரா?

தமிழிற் கொடுக்கப்படும் வாக்கு மூலங்களைத் தமிழிற் பதிவதற்கு போதிய வசதி இல்லாததையும், இப்போது சிங்களத்தில் பதிவனவு மான பொலீசு நிலையங்கள் எவை என்று அவர் கூறுவாரா?

பொலீசு நிலையங்களிலே தமிழிற் கொடுக்கப்படும் வாக்குமூலங்களைத் தமிழிற் பதிவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடன் அவர் செயற்படுத்துவாரா?

# அசீசுக்கு அடுத்தவர் யார்?

பொதுச் சேவைக் கமிஷனில் உறுப்பினராக கடமையாற்றி வரும் ஜனாப் ஏ. எம். ஏ. அசீஸ் அவர்களின் பதவிக் காலம் அண்மையில் முடிவடைவதாகத் தெரிகிறது. அவருக்குப் பின்னர் அப் பதவிக்கு யார் நியமிக்கப்படக் கூடும் என்பது பற்றி பலவித ஹேஷ்யங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

ஜனாப் அசீஸ்தொடர்ந்து அப்பதவியை வகிக்க விரும்பவில்லையென்றும் அப்பதவிக்கு புதியவர் ஒருவர் அரசாங்கத்தால் நியமனம் செய்யப்படக்கூடும் என்றும் சொல்லப்படுகிறது. முன்னாள் தொழில் கமிஷனர் திரு. இராஜநாயகம் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. சிறீஸ்கந்தராஜா ஆகிய இருவர்களில் ஒருவர் அப்பதவிக்கு நியமனம் செய்யப்படலாம் என்று பேசிகொள்ளப்படுகிறது.

# உள்ளே

20 ஆண்டுகளாக வளர்ந்த இஸ்ரேல் — அரபு தகராறின் பின்னணி 8ம்9ம் பக்கம்.

லண்டனில் வெளியாகும் ஜே. ஆரின் புத்தகம் (காற்றுடி) 8ம் பக்கம்.

# சுதந்திரக் கட்சிக்குள் குமுறல்

சுதந்திரக்கட்சியின் வருடாந்த மாநாட்டை கடந்த இரண்டரையாண்டுகளாக கூட்டாத தை பெரட்டி கட்சியின் தலைவர்கள் மேல் பின் வரிசை உறுப்பினர்களும் தொண்டர்களும் வெறுப்பும் ஆத்திரமும் அடைந்துள்ளார்கள் என்று தெரிகிறது.

குறித்தபடி அடுத்த மாதம் கூட மாநாடு நடைபெறுமா என்பதில் அவர்கள் ஐயம் கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாடு 1964 ம் ஆண்டு டிசம்பருக்குப் பின் இது வரை நடைபெற வில்லை யென்பது தெரிந்ததே. பல முறை மாநாட்டைக்கூட்ட திகதிகள் குறிக்கப்பட்டன, எனினும் கடைசி நிமிடத்தில் ஒவ்வொரு சாக்கு போக்குச் சொல்லி மாநாடு பிற்போடப்பட்டுவருகிறது.

இது சுதந்திரக் கட்சியின் சாதாரண உறுப்பினர்களுக்கு ஐயத்தையும் ஆத்திரத்தையும்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதல்வற் காண் படலம்

## (2)

மகனுக்குத் தெரியாமலே மகனுடைய வாழ்க்கை முறையை ஆராய விரும்பிய சின்னையர் தமது வருகை பற்றி மகனுக்கு அறிவிக்கவில்லை. கொழும்புச் சர்வகலாசாலை இருக்கும் இடமும் அவருக்குத் தெரியவில்லை. தமது நிலையை ரயிலால் இறங்கிய ஒருவருக்குத் தெரிவித்தார். ராக்ஸி மூலம் போவதே நல்லது என்றும் 'பஸ்' மூலம் போய் இடம் பிடித்துக் கொள்வது கொழும்புக்குப் புதியவர்களுக்கு இயலாது என்றும் அந்த ஒருவர் ஆலோசனை கூறினார். சிக்கனத்தை விரும்பும் சின்னையருக்கு அது விருப்பம் இல்லாத போதும் அந்தநேரத்தில் பின்பற்றக் கூடியது அது தான் என முடிபு செய்தார்.

கொழும்பு ரயிலால் இறங்கியதும் பஞ்சதந்திரமும் தெரிந்த ஒருவரை நீங்கள் பார்க்க விரும்பினால் அதிக தூரம் செல்லத் தேவையில்லை. ராக்ஸிச் சாரதியைப் பார்த்தால் போதும் அவர்கள் பஞ்ச தந்திரத்தையும் படித்துவிட்டுத் தச தந்திரம் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பிரபலத்தை விளக்கும் செய்திகள் சிலவற்றைத் தெரிந்து கொள்ளுங்கள். 'முன்பு ஒரு முறை மத்தியான யாழ்தேவியில் இளம் தம்பதிகள் இருவர் யாழ்ப்பாணத்திலிருந்து வர... இடையிடை தாமதித்து வரும் இயல்புடைய யாழ்தேவி தாமதித்துக் கோட்டைக்கு வர... அவர்கள் இறங்கி 'பஸ்' இல்லாமல் தவிக்க ராக்ஸிக்கா




ரன் ஒருவன் உதவுபவன் போல் 'ராக்ஸி'யில் ஏற்றிச் சென்று பாதிவழியில் இயந்திரக் கோளாறு என்று கூறிக் கணவனை இறங்கி ராக்ஸியைத் தள்ளச் சொல்ல... அவர் அப்படியே செய்ய... அந்தச்சாரதி பெண்ணை மட்டும் கொண்டு சென்று நகைகளையும் கழற்றி ......' இப்படி ஒரு செய்தி.

'ராக்ஸிக் காரர்கள் சிலர் தவறான மீட்டர் உபயோகித்து அதிக பணம் கொள்ளையடிக்கிறார்கள்'

இப்படி ஒரு செய்தி.

'ராக்ஸிக்காரர்கள் இடம் தெரியாதவர்களை அதிகதூரம் ஏமாற்றிச் சென்று கொள்ளையடிக்கிறார்கள்'

இப்படி ஒரு செய்தி

'ராக்ஸிக் காரன் ஒருவன் பதினாயிரம் ரூபாவை இறங்கும் போது மறந்து போய் ராக்ஸிக்குள் விட்ட பிரயாணியிடம் நேர்மையாகக் கொண்டு போய்க் கொடுத்தான்'

இப்படியும் ஒரு ஆச்சரியமான செய்தி.

இந்தச் செய்திகளில் மூன்றாவது செய்திக் குரிய ராக்ஸிக காரன் குடுமியும் வேட்டி சால்வையுமாக நின்ற சின்னையரைக்கண்ட போதே தான் ஏமாற்றுவதற்குத் தகுந்த அப்பாவி கிடைத்தாரென்று தன்னுள் மகிழ்ந்தான்.

'ஐயாங் எங்கேபோறதுங்?' என்றான ராக்ஸிசாரதி.

'யூனிவேசிற்றிக்கு' என்றார் சின்னையர். சின்னையரைலேசில் விட்டுவிட மனமில்லாத ராக்ஸி சாரதி கோல்பேஸிற்குச் சென்று கோல்பேஸ் வழியாக இரத்மலானை சென்று பின் பாமன்கடை சென்று பின்பு சர்வகலாசாலையில் கொண்டு போய்ச் சேர்த்தான். நேரே தொட வேண்டிய மூக்கைத் தலையைச் சுற்றித்தொட்ட ராக்ஸிச் சாரதியின் தந்திரத்தை அறியாத சின்னையர் கொழும்புக் கோட்டையிலிருந்து கொழும்பு சர்வகலாசாலை அதிக தூரம் என்ற முடிவுக்கு வந்தார்.

சர்வகலாசாலை தொடங்குவதற்கு நேரம் இருந்தபடியால் சர்வகலாசாலை வாயிலில் நின்றார் சின்னையர். மாணவர் கூட்டம் கூட்டமாகச் செல்ல ஆரம்பித்தனர். அவர்களுக்குச் சின்னையர் காட்சிப்பொருளாக விளங்கினார். அதிக அறிவும் ஆடம்பர உடையும் உடைய பேராசிரியர்களே மாணவர்களின் விமர்சனத்துக்கும் ஏளனப் பேச்சுக்கும் ஆளாகும் இக் காலத்தில் சின்னையர் எம் மாத்திரம். அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாத சின்னையர் தம்முடைய மகனை அந்தக் கூட்டத்தில் ஆராய்ந்து கொண்டிருந்தார். இடையில் அவருடைய சிரேஷ்ட புதல்வன் நாதன் தன் அன்புக் காதலியான மாணவி ஒருத்தியுடன் சம்பாஷித்துக் கொண்டு வந்தான்.

காலையில் தேநீர் குடியாத காரணத்தால் 'கிர்... கிர்...' என்று புகைந்த சின்னையரது வயிறு இந்தக் காட்சியைக் கண்டதும் 'பகீர்' என்றது. கொழும்பு போன்ற நகரங்களில் வாழ்பவர்கள் நடித்து நடித்தே பழகியவர்களாதலால் எந்த உணர்ச்சியையும் அடக்கிப் புன்முறுவல் காட்டுவார்கள். நகரங்களுக்கு அப்பால் வாழ்பவர்களுக்கு உணர்ச்சிகளை மறைத்து நடிக்குங் கலை தெரியாது.

சின்னையருக்கு வந்தது கோபம். சிறிப்பாய்ந்தார். 'என்னடா குமரியோடை கதை?' என்று கத்தினார். இவருடைய அலறலைக் கேட்ட மாணவி ஓட்ட மெடுத்தாள். தகப்பனை அந்த நேரத்தில் அவ்விடத்தில் எதிர் பாராத நாதனுக்கு வாயில் வார்த்தைகள் வரவில்லை. செய்வதறியாது நின்றான்.

இதற்கிடையில் அவனுடைய நண்பர்கள் சூழ்ந்து கொண்டனர். அவர் யார் என்று அவனை ஆங்கிலத்திற் கேட்டனர். காற்சட்டையும் சப்பாத்துமாக நின்ற நாதனுக்குக் குடுமியும் அழுக்கு வேட்டியுமாக நின்ற சின்னையரைத் தந்தை யென்று கூறுவது அந்தஸ்துக்கு ஏற்றதாகப் படவில்லை. தன்னுடைய நண்பர்களிடம் அந்த முதியவர் தன்னுடைய தூரத்து உறவினர் என்றும் சிறிது பைத்தியம் என்றும் கூறினான். அவரை உறவினர் வீட்டிற்சேர்த்து விட்டுப் பின்னர் வருவதாகவும் கூறினான். நண்பர்கள் சென்றார்கள்.

'சொல்லன்ரா மறுமொழியை' சின்னையர் மீண்டும் கத்தினார்.

'அப்பு இது யூனிவேசிற்றி 'வாசல்' இங்கை நிண்டு சத்தம் போடக் கூடாது. முதல் நான் தங்கி இருக்கும் இடத்துக்குப் போவம். வாருங்கோ' என்றான். இருவரும் பம்பலப்பிட்டிக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறினார்கள்.

பெரும்பாலான மனிதர்கள் சூழ்நிலையினால் மாற்றப்படக் கூடியவர்கள். அத்தகையோரில் ஒருவன் தான் கொக்குவில் சின்னையரின் மகன் நாதனும்.

சின்னையரின் கட்டுப் பாட்டில் வளர்ந்த நாதன், சர்வகலாசாலைக்கு வந்ததும் பார்த்தவர்கள் வேறு மனிதனோ என்று ஐயுறும் அளவிற்கு மாறி விட்டான். சர்வகலாசாலையில் சேர்ந்த புதிதில் யாருடனும் சேராது இருந்த நாதனை வலிந்து சேர்த்துக் கொண்டான் மூர்த்தி என்ற நண்பன்.

மூர்த்தி ஒரு செல்வனின் மகன். அவனுடைய பெற்றோர் காதலித்துத் திருமணம் செய்தவர்கள். பெற்றோரைப் போலக் காதல் திருமணம் செய்ய வேண்டும் என்பது மூர்த்தியின் விருப்பம். சொந்த மோட்டார் வண்டியிலேயே சர்வகலாசாலைக்குப் போய்க் கொண்டிருந்த அவனுக்குக் காதலி மிக எளிதிற் கிடைத்து விட்டாள். கொழும்பில் எளிதிற் கிடைக்காத பொருள் வீடு. எளிதிற் கிடைக்கக்கூடிய பொருள் காதல். அதிலும் சொந்த மோட்டார் வண்டி உள்ளவர்களுக்குக் காதலி கிடைப்பது எளிதிலும் எளிது. காதலி கிடைத்த பின்புதான், தான் முழுமனிதனாகி யதாக அவன் நம்புகிறான். அப்படிப்பட்டவன் தன் கொள்கையைப் பின் பற்றும் படி நாதனுக்குக் கூறினான்.

# யுத்தம் வேண்டாம் —'கிளே' முழக்கம்

**இராணுவத்தில் சேருவதற்கு இணங்குமாறு நீக்ரோ விளையாட்டு வீரர்களின் தூதுகோஷ்டி யொன்று கடந்தவாரம் பிரபல குத்துச் சண்டை வீரரான முகம்மதலியைக் (காஸியஸ் கிளே) கேட்டுக் கொண்டது. அந்த வேண்டுகோளையும் அவர் நிராகரித்து விட்டார்.**

**இராணுவத்திற் சேர மறுத்ததற்காக அமெரிக்க அரசாங்கம் அவர் மீது தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது அவர் தமது சாட்சியை எடுத்துக் கூறினர்**

'என்னை யாரும் நிர்ப்பந்தித்து இஸ்லாத்தில் சேர்க்கவில்லை. நானும் உலகில் என்னைப் போன்ற மக்களும் மானத்துடனும், மரியாதையுடனும், சுதந்திரத்துடனும், தன நம்பிக்கையுடனும் வாழ வேண்டுமானால் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்வதைத் தவிர வேறு வழியில்லை. பழமையான பல சம்பிரதாயங்களின் விளைவினால் இனத்தாலும் நிறத்தாலும், ஜாதியாலும் மனித சமுதாயம் சீரழிந்து போய்க்கொண்டிருப்பதைத் தடுக்க வல்லது இஸ்லாம் மார்க்கம் ஒன்றுதான் என்பதை என் அனுபவத்தினாலும், ஆராய்ச்சியினாலும், நன் குணர்ந்தே நான் இஸ்லாத்தைத் தழுவினேன்.

'நான் எப்போது முஸ்லிம் ஆனேனே அந்த வினாடியிலிருந்து முற்றிலும் புதிய மனிதனாகிவிட்டேன். என் உள்ளத்தில் மட்டுமல்ல என் உடலிலும் புதிய சக்தி தோன்றி விட்டது. உலக அரசியல்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட உண்மையான சுதந்திரத்தை நான் முஸ்லிம் ஆகிய வினாடியிலிருந்துதான் அனுபவிக்கிறேன்; ஆனால் என்னுடைய உள்ளுணர்ச்சியையும் உறுதியையும் வேறு மதத்தைச் சேர்ந்த உங்களால் உணர முடியவில்லையே என மிகவும் வேதனைப்படுகிறேன். அதை எவ்விதம் உங்களுக்கு விளக்கிக் காட்டுவது என்பது எனக்குப் புரியவில்லை.'

'என்னுடைய மத உணர்ச்சியின் காரணமாக இதுவரை 50 லட்ச டாலர்களை நான் வீணாக செலவிட்டதாகவும், இன்னும் ஒரு கோடி டாலரை செலவிட வேண்டி நேரிடும் என்றும் பணத்தை வைத்து என் உணர்ச்சியை (முஸ்லிமல்லாத) மக்கள் மதிக்கிறார்கள். எவ்வளவு வைராக்கியத்தை நான் என் மார்க்கத்தின் மீது கொண்டிருந்தால் இவ்வளவு பணத்தையும் செலவிட்டது அண்மையில் சிறைதண்டனை கிடைத்தாலும் அனுபவிக்க தயாராக இருக்கிறேன் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். என் உள்ளத்து உணர்வுக்கு ஒரு கோடி டாலரல்ல, பல கோடி டாலரும் சமமாக நான் கருதவில்லை.'

என்னை ஒரு கிரிமினல் குற்றவாளியாக நடத்துகிறார்கள்; நான் என்றுமே கிரிமினல் வழிகளில் சென்றவனல்ல; ஒரு தடவை கூட ஒழுங்கீனத்துக்கு ஆளானவனல்ல; ஒரு முறைகூட சிறைவாயிலை நான் மிதித்தவன் அல்ல; இருந்தும் என்னை அவ்விதம் எண்ணுவதோ, நடத்துவதோ நியாயமானதல்ல.

நான் என்றைக்கு இஸ்லாத்தில் சேர்ந்தேனோ அன்றே என் தனிமை ஒருமை எல்லாம் போய்விட்டது. நான் இன்று உலகில் வாழும் 75 கோடிக்கும் மேற்பட்ட முஸ்லிம்களில் ஒருவனாக இருக்கிறேன். என்னுடையது மட்டிலுமல்லாமல் என் சகோதர முஸ்லிம்கள் அனைவரின் கண்ணியத்துக்கும் உறுதிக்கும் நானும் பொறுப் பேற்றவனாக இருக்கிறேன்; அவ் விதமே பொறுப்புடன் நடப்பேன்; கிரிமினல் கண்ணோட்டத்துக்கு என்னை உள்ளாககாதீர்கள் என தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்'

பொதுவாக யுத்தத்தின் மீது எனக்கு நம்பிக்கையில்லை. ஒன்று மார்க்கத்துக்காகச் செய்யும் புனிதயுத்தமாக இருக்க வேண்டும்; அல்லது பிறந்த நாட்டை அன்னியர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காக உள்ள தியாக யுத்தமாக இருக்க வேண்டும். இதில் பங்கு கொள்வது மனித தர்மத்தைச் சேர்ந்ததாகும்.

இதைவிடுத்து அரசியல் பிரச்சினைகளுக்காக, நடத்தப்படும் எந்த யுத்தங்களையும் என் மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அது இறைவனுக்கும் அவன் கட்டளைகளுக்கும் மாறுபட்ட செயலாகும் என்று என் உள்ளம் கூறுகிறது'.

# பழமுதிர் சோலை அழகனின் ஊர்வலம்

**(எஸ். அரியரெத்தினம் அடிகள்)**

வானத்து வெள்ளிகளை எண்ணினும்-அந்த
வார்கூட்டந்தன்னை எண்ணலாமோ?
ஞானத்தின் தலைவனைச் சூழ்ந்தவர்-உலக
நாற் பெருஞ்சேனை யெனலாமோ?

பக்தியிசை பெய்தங்கு வந்தார்-அவர்
பரமனின் புகழ்பாடி நின்றார்
சித்தத்தில் சிவனையே வைத்தார்-அந்தத்
தெருவெலாம் தெய்வமணம் தெளித்தார்

உடலெலாம் சிலிர்க்கு மோர் உணர்வு-எனை
ஓர் நொடியிற் பற்றவே நின்றேன்
கடல்போல திரண்டவர் கண்ணில்-தெய்வக்
காதலைக்கண்டு நான் பணிந்தேன்

ஆடுகிற பூங்கொடி போல-பெரும்
அலைமோதி வரும் மக்கள் திரள்பார்த்து
மாடத்தில் நின்று இளம் மங்கையர்-தம்
மை விழி அகல நிலம் பார்த்தார்!

சிற்றிடையொடிவது போல-சில
சேய் மொழிநங்கையர் நடந்தார்
முற்றிய அந்தப் பெருந்திரளில்-அவர்
முழுநிலா போலஎழில் செய்தார்

நெற்றியைத் திருநீற்றால் மூடி-அந்த
நிறத்தினிற் தலைகாட்டும் பெரியோர்
முற்றிய பக்தியின் வடிவாய்-பழ
முனிவர்கள்போல நிறை செய்தார்

காவடி தூக்கிச் சிலர்வந்தார்-எழிற்
கலாபமயில் ஆடஅவர் நடந்தார்
தேவடியார் அந்தத் திருநகர்-பெருந்
தெரு வெலாம் அடைக்கவே சென்றார்

பிற மதத்தவ னென்றாலும்-என்னுள்
பெருகியதோர்வித உணர்ச்சி
இறைவனை நோக்கியென் நெஞ்சை-மேலும்
இழுக்கவே செய்ததிக் காட்சி!

● மதுரை சித்திரைத் திருவிழா அழகர் ஊர்வலம் கண்ட அன்பர் தமது இறை அனுபவத்தைப் பாடியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: அறிஞர் அண்ணவை தந்தை செல்வா சந்தித்தால் என்ன பேசிக் கொள்வார்கள்?

ப: தமிழ் மொழி வளர்ச்சிக்கான திட்டம்பற்றிப்பேசிக் கொள்வார்கள்.

ஃ

சி. பத்மாதேவி,
மன்னிங்பட்டினம்.

கே: சிலர் புதுக்கட்சிகளை நிறுவிக் கொண்டு தமக்கு மக்களின் ஆதரவு இருப்பதாகக் கூறுகின்றார்களே?

ப: கட்சிகளை அமைப்பதற்கும் ஆதரவு இருப்பதாகக்கூறுவதற்கும் இந் நாட்டில் அனைவருக்கும் உரிமை உண்டு. விரும்பினால் நீங்களும் அவ்வாறு செய்யலாம்.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: குயுக்தியாரே, தயவு செய்து ஒரு ஆயிரம் ரூபாய் கடன் தருவீர்களா?

ப: நீங்கள் ஒரு லோபி! கேட்கிறது ஒரு இலட்சம் அல்லது ஒரு கோடி என்றுகேட்டாலென்ன? இதிலும் கஞ்சத்தனமா?

கே: சுதந்திரன் குடும்பப் பத்திரிகையா அல்லது அரசியல் பத்திரிகையா?

ப: இரண்டும்.

ஃ

டி. செல்லையா
கொழும்பு-3

கே: சில பத்திரிகைகள் பாராளுமன்றம்' என்று எழுதுகின்றன. ஒரு பத்திரிகை 'நாடாளுமன்றம்' என்கிறது. இவ்விரண்டில் எது சரி?

ப: இரண்டுமே பிழை. 'ஈழாளுமன்றம்' என்பது தான் சரி.

ஃ

சா. யோகராசா
களுவாஞ்சிகுடி

கே: குயுக்தியாரே! தங்களுக்குக் கல்வி மந்திரி பதவி கிடைத்தால் உடனடியாக என்ன செய்வீர்கள்?

ப: உடனடியாக ஒரு பாட்டு எழுதிக் கொடுத்து மாணவ மாணவிகளுக்கு அதனைப் பாடும்படி சுற்று நிருபம் விடுவேன்.

ஃ

ஆர். கே. திருகோணசுந்தரம்
புதுவட்டகொடை

கே: கேரளத்திற்கு இலங்கை அரசு அரிசி அனுப்புமாமே?

ப: கேரளத்துக்கென்ன? பல வெளிநாடுகளுக்கு ஒரு காலத்தில் அரிசி ஏற்றுமதி செய்த நாடுதான் இலங்கை. இன்றும் அனுப்பத்தயார். ஆனால் இலங்கையிடம் கேட்க மாட்டேன் என்று கேரளம் பிடிவாதம் பிடிக்கிறதே.

கே: மாவட்ட சபைகள் வந்தால் தமிழர்களில் அனேகர் தம் தொழில்களை இழப்பார் என ஜி. ஜி. கூறுகிறரே! உண்மையா?

ப: வெறும் கப்ஸா! நம்பாதீர்கள். மாவட்ட சபைகள் தமிழ்ப் பகுதிகளில் மட்டுமின்றி சிங்களப் பகுதிகளிலும் நிறுவப்படவிருப்பதால், தமிழர் ஒதுக்கப்படமாட்டார்கள்.

கே: இஸ்ரேல் — ஐ. அ. கு. தகராறில் இலங்கை எப்பக்கம்?

ப: சமாதானத்தின் பக்கம்!

கே: இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் உதவி தொடர்ந்து இருக்குமா?

ப: தொடர்ந்திருக்கும். இல்லையேல் அரபுகள் இஸ்ரேலை அழித்துவிடுவர்.

கே: இன்னும் ஒரு வருடத்தில் தமிழகத்திலும் கேரளத்தைப் போன்று அரிசித் தட்டுப்பாடேற்படுமென ஒரு அரசியல் வாதி கூறுகிறரே நடக்குமா?

ப: நடக்காது—அவர் அரசியல் வாதியா? அரிசி வாதியா?

கருணாநிதி
தலவாக்கொல்ல

கே: ஈழத்திலும் ஒரு திராவிட முன்னேற்ற கழகம் உருவாகி இருக்கிறதாமே உண்மையா?

ப: மூன்று தி. மு. கழகங்கள் இருந்ததாகவும் பின்னர் அவை ஒன்றாக இணைந்ததாகவும் சிறிது காலத்துக்கு முன்பு கூறப்பட்டது. ஏனே தெரியவில்லை! தாங்கள் இருப்பதாகவே இக்கழகங்கள் காட்டிக் கொள்வதில்லை.

ஃ

மு. மோகனசுந்தரம்
காத்தான்குடி

கே: ஏய் குயுக்தியாரே 'நீங்கள் மாத்திரம்தானே கேள்விக்கு பதில் சொல்கிறீர். ஏன் சுதந்திரனில் மூன்று பேர் வாயைப் பிழந்து கொண்டு இருக்கிறர்கள்?

ப: அவர்கள் ரசிகர்கள்.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை

கே: மனிதனுக்கும், பேய்க்குமுள்ள வித்தியாசமென்ன?

ப: மனிதனுக்குள்ளது ஸ்தூல சரீரம் (பளுவுள்ள உருவம்) பேய்க்குள்ளது சூட்சம சரீரம்(பளுவற்ற மிதக்கும் ஓர் இலகுவான உருவம்)

ஃ

பழனி
ரெட்டபாதை

கே: ஓர் ஆசிரியை மாணவர்களைக் கண்டதும் எரிந்து விழுகிறர். ஏன்?

ப: ஏதோ ஒன்றில் ஏமாற்றமடைந்திருப்பார். அதற்கு ஒரு மாணவனும் காரணமாயிருக்கலாம்.

கே: காதலரோடு சேர்ந்து வாழ முடியாமல் போய்விடுமோ என்று வாடுகிறேன். ஆறுதலாக ஒரு வார்த்தை சொல்வீர்களா?

ப: ஆறுதல் வார்த்தையால் பயனில்லை. காதலிக்கத் துணிவு இருந்தால் சேர்ந்து வாழவும் துணிவு இருத்தல் வேண்டும். எனவே துணிவு பெறுக.

ஃ

எஸ். ஏ. மக்கள்தாசன்
உருத்திரபுரம்

கே: திரு. பொன்னம்பலம் மேதினக் கூட்டத்தில் தமிழரசை எதிர்க்கவில்லை என்று பேசினர் ஆனல் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டசபை மசோதாவை எதிர்க்கிறரே. இது பேச்சுக்கும் செயலுக்கும் முரண்பாடல்லவா?

ப: அவர் எதிர்க்கவில்லை என்று கூறினல் எதிர்க்கவில்லையென்றும் அர்த்தம்— எதிர்க்காமல் இருக்கவில்லையென்றும் அர்த்தம்— எதிர்க்கவோ ஆதரிக்கவோ இல்லையென்றும் அர்த்தம். அதில் இன்னும் அர்த்தங்கள் உண்டென்றும் அர்த்தமாகும். ஆகவேதான் மா. ச. மசோதாவை எதிர்கிறர்.

சு. மனோகரன்
இறத்தோட்டை

கே: அரபு—இஸ்ரேல் நாடுகளிடையே தற்போது ஏற்பட்டுள்ள தகராறுக்குக் காரணம் என்ன?

ப: பாலஸ்தீனப் பிரச்சினைதான் காரணம். இது 20 வருடங்களாக இருக்கின்றது. இப்பிரச்சினை தீர்ந்தால் தகராறு தீர்ந்துவிடும்.

கே: நடுநிலைமை நாடெனக் [illegible] அரபு நாடுகளை ஆதரிப்பது சரியா?

ப: நடுநிலைமை என்றால் எல்லாவற்றிற்கும் நடுமையத்தில் நிற்பதன்று. நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் நடுமையம் எது? இந்தியா சமாதானத்தைவிரும்பும் நாடு.

கே: 'தமிழக அரசு' என்று சென்னை மாநிலத்துக்குப் பெயர் சூடும் பிரேரணை டில்லி பாராளுமன்றத்தில் தோல்வியுற்று விட்டதே இது சம்பந்தமாக அடுத்து எடுக்கக் கூடிய, எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கை என்ன?

ப: தோல்வியடையவில்லை. டில்லிப் பாராளுமன்றமே இன்னும் அந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளவில்லை. காங்கிரஸ் கட்சி அதற்கு இணங்கினலன்றி பாராளுமன்றத்தில் நிறைவேருது - அரசியற் சட்டத்திலும் அவசியமான திருத்தத்தைச் செய்ய முடியாது. இதற்கெல்லாம் முன்பு ஜனதிபதியும் இதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டுமாம். சென்னை அசெம்பிளியில் இது பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுவதுதான் அடுத்த நடவடிக்கையாம்.

ஃ

கு. யசோதா
பேராதனை

கே: மாவட்டசபையை எதிர்க்கும் பொ.வும் அவரின் கட்சியும் மாவட்ட சபையை ஏற்றுக் கொண்ட தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்து ஆதரவு கொடுப்பது ஏன்?

ப: அதில் தவறில்லை. ஏனெனில் முன்னுக்குப்பின் முரணனதுதான் அவரது அரசியல்.

கே: தமிழ் பிரதேசங்களின் முக்கிய உள்ளூராட்சி மன்றங்களை மாற்றி அமைத்து அவைகளுக்கு உயர் அந்தஸ்து வழங்குவதை பொ. எதிர்ப்பது ஏன்?

ப: அது மக்களிடையே பொறுப்பாட்சி மனப்பான்மை வளர்க்க உதவுமென்பதுதான் அவர் எதிர்க்கக் காரணம்.

கேயெஸ்
அக்கரபத்தனை

கே: குயுக்தியாரே, நீங்கள் 23-5-67 ல் 'தாழையூர் நாகராஜன்' கேட்ட கேள்விக்கு கொடுக்கப்பட்ட பதிலில், அமுதசுரபி கிடைத்தால் அண்ணவுக்கு அனுப்பி வைப்பதாக எழுதியுள்ளீர்களே, ஏன் அதை நமது பிரதமரிடம் கொடுக்கக் கூடாதா?

ப: நமது நாட்டிலே ஒரு கொத்து அரிசி சும்மா (தர்மமாக) கொடுக்கிறர்கள். இரண்டு கொத்து 'சும்மா' கொடுக்கப் போவதாகவும் கூறுகிறர்கள். தர்மமாக வாரி வழங்கும் அளவுக்கு அரிசி மிகுந்திருக்கும் போது அமுதசுரபியால் நமது பிரதமருக்கு என்ன பிரயோசனம்? ஆகையாற்தான் அதை அண்ணவுக்கு வழங்குவேன் என்றேன்.

ஃ

சி. வா. சின்னத்தம்பி
சுகதுடி வடக்கு

கே: மாவட்ட சபை பிரச்சினை எப்போது தீரும்?

ப: தற்போதைய எதிர்க் கட்சி எதிர்க் கட்சியாக இருக்கும் வரை இதைப் பிரச்சினையாக்கிக் கொண்டே இருப்பார்கள்.

கே: ஒரு கொத்து அரிசியை அரசாங்கம இலவசமாய் கொடுப்பதன் நோக்கம் என்ன?

ப: இரண்டு கொத்து அரிசியை 50 சதத்துக்கு விற்பதை விட ஒரு கொத்து அரிசி இலவசமாக வழங்குவது இலாபகரமாக இருப்பதுதான் காரணம.

ஃ

ஆர். கண்ணன்
நீர்கொழும்பு

கே: நம்பியவனை நயவஞ்சகம் செய்யும் ஆளை எப்படி அழைப்பது?

ப: நம்பாதவனுக்கு நன்மை செய்யும் பரோபகாரி என்று அழையுங்கள்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு-12



நடமாடிகள்!

நடமாடும் வைத்தியசாலைகளை அரசாங்கம் ஏற்படுத்தும்.

—செய்தி.

—நடமாடும் நோயாளிகள் பெருகும் போது நடமாடும் வைத்தியசாலைகளும் அவசியந்தானே!

நடிகையின் மானம்!

அமெரிக்கப் பத்திரிகையொன்றில் தனது அனுமதியின்றி நிர்வாணப் படங்களை வெளியிட்டதற்காக ஹாலிவூட் நடிகையொருத்தி அப்பத்திரிகையிடம் நஷ்ட ஈடு கோரியுள்ளாள்.

—செய்தி

—நஷ்டஈடு கிடைத்தவுடன் தமது மானம் மீண்டு விடும் என்று அந்த நடிகை கருதுகிறரோ?

புகைச்சல்?

யாழ்பாணத் தியேட்டர்களில் இனி புகைக்க முடியாது

—செய்தி

—ஆனல் தமிழ் படங்களைப் பார்த்து விட்டு புகைந்து கொண்டு இருக்கத்தடையிருக்காதே!

காகித ஆடைகள்!

ஒரு முறை அணிந்த பின் தூரவிட்டெறியக் கூடிய காகித ஆடைகளில் மேலைநாட்டுப் பெண்கள் ஆர்வங் கொண்டுள்ளனர்.

—செய்தி

—ஒவ்வொரு முறையும் திருமணம் செய்த பின் தமது கணவர்களை தூரவிட்டெறியும் பெண்கள் காகித ஆடையில் ஆர்வம் காட்டுவதில் புதுமை என்ன?

மயக்கம்: ஒரு மயக்கம்

தவறணைகளில் கலால் அதிகாரிகளால் திடீர் சோதனை நடத்தப்படும்.

—செய்தி

—சோதனைக்கு செல்லும் அதிகாரிகள் திடீர் திடீரென்று 'மயங்கும் நிலையை' அடையாமல் இருந்தால் அதுவே பெரிய காரியம்!

இது ஒரு பிரச்சினையா?

பண்டார நாயக ஞாபகார்த்த மண்டப அமைப்பில் மாறுதல் செய்யப்படும்.

—செய்தி

—பண்டாரநாயக்காபின் பற்றி வந்த கொள்கைகளையே அவரைப் பின் பற்றுவதாக கூறுபவர்கள் மாற்றியமைக்கும் போது, [illegible] அமைப்பை மாற்றுவது [illegible] பெரிய பிரச்சினையா?

இதோ ஒரு
தலைசிறந்த வாய்ப்பு!

சு
த
ந்
தி
ர
ன்

★ நியாயமான கட்டணத்தில்...
★ குறித்த நேரத்தில்...
★ கவர்ச்சியான அமைப்பில்...
★ திறமையான வேலைப்பாட்டுடன்...
★ சகல அச்சுவேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுப்போம்.

அச்சகம்

சுதந்திரன் அச்சகத்துக்கு நீங்களும் ஒரு சந்தர்ப்பத்தை ஏன் கொடுக்கக் கூடாது?

20 ஆண்டுகளாக பணியாற்றி வரும் அச்சகம்.

194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சட்டங்களை திருத்துக

## தொழிலாளருக்கு நீதி வழங்க தமிழரசு எம். பி. வற்புறுத்து

"தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கத் தக்கதாக இப்போதிருக்கும் தொழிற் சட்டங்கள் அமையவில்லை. ஒரு தோட்டத்தொழிலாளிமீது சிறியதொரு குற்றத்தைச் சுமத்தி தோட்ட முதலாளி நினைத்த நேரத்தில் நீக்கிவிடக் கூடிய முறையில் இன்றுள்ள சட்டங்கள் இருக்கின்றன. இந்நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பும் விமோசனமும் அளிக்கும் வகையில் தொழிற்சட்டங்களை விரிவாகத் திருத்தியமைக்க வேண்டும்" தொழிற் சட்டங்களைத் திருத்தியமைப்பது பற்றி இம்மாதம் 3ந் திகதி பாராளுமன்றத்தில் தனிநபர் தீர்மானம் ஒன்றை பிரேரித்துப் பேசியபோது கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் இப்படிக் கூறினர்.

அவர் தமது பேச்சில்மேலும் கூறியதாவது:—

தோட்டத் தொழிலாளர்களுட்பட சகல தரங்களையும் சேர்ந்த தொழிலாளர்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கமாகவும் எல்லா விதமான கைத்தொழிற்பிணக்குகளையும் விரைவாகத் தீர்த்து வைக்கும் பொருட்டு சக்திமிக்க அமைப்பொன்றினை நிறுவும் நோக்கமாகவும் காலத்திற் கொவ்வாதனவும் பழமைவாய்ந்தனவுமான இந்நாட்டின் தொழிற் சட்டங்களைத் திருத்தியமைப்பதற்கு உடனடியாய் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென இச்சபை கருதுகிறது" எனும் இந்தப் பிரேரணையை நான் மகிழ்ச்சியுடன் பிரேரிக்கின்றேன்.

'தொழிற் சங்கங்களில் ஈடுபட்ட கௌரவ உறுப்பினர்களுக்குத் தொழிலாளர்கள் படும் கஷ்டங்கள் நன்கு தெரியும். இங்கு பல தொழிற்சங்கத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் இந்தக் காலத்தில் தொழிலாளிகள் அனுபவிக்கும் இன்னல்களை விரிவான முறையில் எடுத்துரைக்க வேண்டிய அவசியமில்லை (இடையீடு) ஒரேயொருவர் மாத்திரம் இப்போது இங்கு இருக்கின்றார் என்று கௌரவ நல்லூர்ப் பிரதிநிதி (வைத்திய கலாநிதி ஈ. எம். வீ. நாகநாதன்) சொல்கின்றார். இப்பிரேரணை விவாதிக்கப்படும் பொழுது ஏனைய தொழிற் சங்கத் தலைவர்கள் இங்கு இல்லாதிருப்பது துக்கப்படத் தக்கதாகும்.

'நான் இங்குசிறப்பாகத் தோட்டத் தொழிலாளர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கத் தக்கதாக இப்போதிருக்கும் சட்டங்கள் அமையவில்லை. ஒரு தோட்டத் தொழிலாளியை சிறியதொரு குற்றத்தைச் சாட்டி தோட்ட முதலாளி நினைத்த நேரத்தில் நீக்கிவிடக் கூடிய நிலையில் இந்தக் காலச்



சட்டங்கள் அமைந்திருக்கின்றன. நான் ஒரு தோட்டத்துக்குச் சென்றபோது ஒரு சிறிய குற்றம் செய்து விட்டதாகச் சொல்லி இருபத்து நான்குமணித்தியாலத்துக்குள் தொழிலாளர்களைத் தோட்டத்திலிருந்தே அப்புறப்படுத்திவிட்ட அளவுக்கு நிலைமை இருந்ததை அறிந்தேன்.

அவ்வித அதிகாரம் தோட்ட முதலாளிமார்களுக்கு இருக்கின்றது, இந்த இருபதாம் நூற்றாண்டில், சமதர்மம் பேசும் இக் காலத்தில் இலங்கையிலும் ஒரு சமதர்ம ஆட்சி நடக்கவேண்டுமென்று கூறப்படும் இந்தக் காலத்தில், தொழிலாளர்கள் எதேச்சாதிகாரமாக நடத்தப்படுவதை நாம் பொறுக்க முடியாது. எனவே, அவர்களுக்கு நியாயம் கிடைக்கத் தக்கதாகவும் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படக் கூடியதாகவும் இப்பொழுதுள்ள சட்டங்கள் திருத்தப்படவும் புதிய சட்டங்கள் வகுக்கப்படவும்வேண்டும்.

'எனக்குத் தெரியும், தொழிற் சங்கத் தலைவர்களுக்கு கூடத் தெரியும், ஒரு தொழிலாளி, முதலாளியுடன் பிணக்குண்டு வழக்குக் கொணர்ந்தால் அதற்கு ஒரு முடிவு காண இந்தத் தொழில் நீதிமன்றங்கள் இரண்டு மூன்று ஆண்டுகள் எடுக்கின்றன. ஓர் ஏழைத் தொழிலாளி இந்தக் கால எல்லைக்குள் எந்த விதமான வருவாயுமின்றி உத்தியோகம் கிடைக்குமோ கிடைக்காதோ நஷ்ட ஈடு கிடைக்குமோ கிடைக்காதோ என்று கவலையுடன் ஏங்கி, ஏங்கிக் கஷ்டப்படுவதை நாம் காண்கின்றோம் இந்நிலை வருந்தத் தக்கது. இதனை நாம் இவ்விதமே விட்டுவிட்டால் எங்கள் கடமையை நாங்கள் நல்ல முறையிற் செய்யாதவர்களாகிறோம், இந்தச் சபை அவ்வித குறையை நீக்க முயலவில்லை என்பதையும் அது காட்டுகின்றது.

**பாராளுமன்றம்**

### நடவடிக்கையெடுங்கள்

'எனவே, ஒரு தொழிலாளிக்கு இரண்டு மூன்று மாதங்களில் நியாயம் கிடைக்கக் கூடிய முறையிலே இத்தொழில் நீதிமன்றங்கள் அமைய வேண்டும். அவை அப்படி இயங்க முடியாவிட்டால் ஒரு சக்தி வாய்ந்த நீதிமன்றத்தை நாம் உருவாக்க வேண்டும். எனக்குத் தெரியும் பல இடங்களில் தொழிலாளர் பலர் வருடக்கணக்காகவருந்திக்கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டு காலமாக நியாயம் வழங்கப்படாத தொழிலாளிகள் எங்களிடம் வந்து முறையிடுகின்றார்கள். எனவே அவர்களுக்கு விரைவில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது மனிதாபிமானமுள்ள ஒவ்வொருவரதும் கடமையாகும். அத்துடன் விமோசனம் கிடைக்கக் கூடிய முறையிலே தொழிற்சட்டங்களை விரிவாகத்திருத்தியமைத்து தொழிலாளர்களுக்கு உடனுக்குடன் நீதி கிடைக்கக்கூடியதாகவும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடியதாகவும் விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

# தொழிற் தகராறு விசாரணையில் தாமதம்

## இராசதுரை கண்டனம்

"தொழில் நீதிமன்றங்களுக்கு செய்யப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்யவும் விளங்கவும் தீர்ப்பைப் பெறவும் பல வருடகாலம் செல்கின்றது. இந்த இடைக்காலத்தில் தொழிலாளர் குடும்பங்கள் நடுத்தெருவில் அலையவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்த நிலை மாறவேண்டும். தொழில் நீதிமன்றங்களுக்கு செல்லும் விசாரணைகள் குறைந்தது ஐந்து மாதங்களுக்குள் நடைபெற்று தீர்ப்பு வழங்க வேண்டியது நீதிமன்றங்களின் கடமையாகும்" இவ்வாறு பாராளுமன்றத்தில் தொழிற் சட்டங்களைத் திருத்துவது பற்றிய கிளிநொச்சிப் பிரதிநிதியின் பிரேரணையை ஆதரித்துப் பேசிய மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

கிளிநொச்சிப் பிரதிநிதி அவர்களது இந்தப் பிரேரணையை ஆமோதிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தொழிலாளர்களுடையகுறைகளைப் பற்றி இந்தச் சபையிலே பேசுவதற்கு ஏராளமான அரசியற் கட்சிகள் இருந்த போதிலும் உண்மையில் தொழிலாளர்களுடைய குறைகள் உரிய காலத்தில், உரிய நேரத்தில் தீர்க்கப்படுவதாகத் தெரியவில்லை. சிறிய குற்றங்கள்—அவைகள்குற்றங்கள் என்று நினைப்பதற்குக்கூட முடியாதவை—உருவாக்கப்பட்டு, தொழிலாளர்கள் தண்டிக்கப்படும்போது, அவர்கள் தங்கள் முறைப்பாட்டை டது செய்து, தண்டனையிலிருந்து விடுபட முடியாதவாறு இன்றைய சட்டங்கள் அமைந்திருக்கின்றன' குறிப்பாக ஏகாதிபத்தியக் காலத்தில் கடைபிடிக்கப்பட்ட தொழிற்சங்க நீதிகள் இன்றும் அமுலிலிருக்கின்றன என்பது வெளிப்படை.

### மாற்றம் இல்லை!

இந்தச் சட்டங்கள் தொழிலாளர்களுக்குப் போதிய பாதுகாப்பை அளிக்கவில்லை. நிரபராதிகளான தொழிலாளர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படின் தண்டனையிலிருந்து அவர்களுக்கு இச்சட்டங்கள் விமோசனம் அளிக்கவில்லை.

எனவே இச்சட்டங்கள் மாற்றியமைக்கப்படல் வேண்டும் என்று இந்தச் சபையிலே பல தடவைகள் வற்புறுத்தப்பட்ட




போதிலும் இவ்விடயத்தில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படவில்லை.

தொழில் நீதிமன்றங்களுக்குச் செய்யப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்யவும் விளங்கவும் தீர்ப்பைப் பெறவும் பல வருட காலம் செல்கின்றது. இந்த இடைக்காலத்தில் தொழிலாளர்குடும்பங்கள் நடுத்தெருவில் அலைய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அன்றாட உணவுகூட கிடைக்காத நிலையில் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இது வேண்டுமென்றே அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமையாகும்.

### தொழிலாளர் படும் கஷ்டங்கள்

தொழிலாளர்கள், தாம் தண்டிக்கப்பட்ட நிலையைத் தொழில் நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லும் பொழுது குறைந்தது 2, 3, 5 மாதங்களுக்குள்ளாக விசாரணை செய்து தீர்ப்பு வழங்க வேண்டியது நீதிமன்றங்களின் கடமையாகும். ஆனல் தொழில் நீதிமன்றங்கள் தொழிலாளர்களை இழுத்தடித்து அவர்களைப்

(14-ம் பக்கம் பார்க்க)



பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது

**கமலா பீடி**

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

**கமலா ஸ்டோர்ஸ்,**
நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு-11
தந்தி: தாமரை
தொலைபேசி: 3597—6322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டில் சாவி: தலையில் சிவப்பு கைக்குட்டை


**"போலிஸ் இன்ஸ்பெக்டர் தோரதெனியும் நானும் முதலாவது எதிரி வீராசாமி வசித்து லயின் அறைக்குச் சென்றோம். அப்பொழுது காலை 6-30 மணி இருக்கும். இன்பெக்டர் இந்த சிவப்புக் கைக்குட்டையும் கொண்டுவந்திருந்தார்.**

**வீராசாமியின் அறைக்கதவு மூடப்பட்டு, பூட்டு போடப்பட்டிருந்தது. இன்ஸ்பெக்டர், கைக்குட்டையில் முடிந்திருந்த சாவியை அந்தப் பூட்டின் துவாரத்தில் நுழைத்து திறக்கினர்"**

மேற்கண்டவாறு போப்துரை கொலை வழக்கு விசாரணையின் போது சாட்சியமளித்த ஸ்டெலன்பர்க் தோட்டக் கணக்கப்பிள்ளை சுப்பையா கூறினர்.

### எதிரிகள்

(1) வீராசாமி
(2) வேலாயுதன்
(3) ஐயன் பெருமாள்
(4) ரெங்கசாமி
(5) முனியாண்டி
(6) மாரிமுத்து வேலாயுதன்



ஸ்டெலன்பர்க் தோட்டப்பாதை இது. பாதையின் வளைவில் போப்துரையின் காரை நிறுத்துவதற்காக பாதைக்கு, குறுக்கே கட்டைகள் போடப்பட்டிருப்பதையும், கட்டைகளை அகற்றுவதற்காக துரை காரை நிறுத்தியதையும் படத்தில் காண்க! இது தான் துரையை கொலைக் செய்த இடம்

போப்துரை கொலை வழக்கு விசாரணை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் சூட்ஸ் அவர்கள் முன்னிலையில் தொடர்ந்து நடைபெற்றது.

ஸ்டெலன்பர்க் தோட்டத்தின் டீமேக்கர் ஆர். எல். லூடுவைக் தொடர்ந்து வாக்குமூலம் அளித்தார். எதிரிகளின் சார்பில் ஆஜரான திரு. ஆர். எல். பெரேராகே. வி. சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

### எதிரிக்கு மீண்டும் வேலை

லூடுவைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது கூறியதாவது:—

'அக்டோபர் கடைசியில் தோட்டத்திலிருந்து விலகும்படி முதலாவது எதிரி வீராசாமிக்கு, வேலை நீக்க அறிவிப்பு கொடுக்கப்பட்டது. லேபர் கண்ட்ரோலரும், அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதியும் திரு. போப் துரையைப் பேட்டிகாண்பதற்காகவந்திருந்தனர். இதன் விளைவாக முதலாவது எதிரி தொடர்ந்து தோட்டத்தில் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

# பெரிய கங்காணி மீது தொழிலாளர் புகார்

ஸ்டெலன்பர்க் தோட்டத்தில் மேல் கணக்கில் செல்லையாவும் பணியக் கணக்கில் சுப்பையாவும் கணக்கப் பிள்ளைகளாகக் கடமையாற்றுகின்றனர். சுப்பையா, பெரிய சங்காணியரான தாட்டனுடன் வசித்தாரா என்பது எனக்குத் தெரியாது.

### விபத்து என்று நினைத்தார்

காசிம் (தேயிலைத் தொழிற்சாலைக் காவலாளி.) அன்று இரவு சுமார் 11.45க்கு வந்து துரை படுகாயமடைந்து பாதையில் கிடப்பதாகக் கூறினார். துரை தாக்கப்பட்டார் என்று அவர் கூறவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்று நான் கேட்கவுமில்லை. துரைக்கு ஏதோ திடீர்விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று நான் நினைத்தேன்.

நான் காசிமுடன் சென்றேன். தச்சுவேலை பாஸின் மகன் அர்லேசிசும் மற்றும் சிலரும் வழியில் எங்களுடன் சேர்ந்து கொண்டனர். நாங்கள் எல்லாம் ஐந்து பேர் சென்றோம்.

### துரைக்கு நாற்காலி

துரை விழுந்து கிடந்த இடத்துக்கு நாங்கள் சென்றோம். என் கையில் 'டோர்ச்' லைட் இருந்தது. ஆனால் நிலவொளி பிரகாசமாயிருந்ததால் நான் 'டோர்ச்'சை அடிக்கவில்லை.

நாங்கள் துரையுடன் பேசினோம். அவர் பதிலளிக்கவில்லை. அவர் நினைவிழந்திருந்தார்.

அவரை அப்படியே தூக்கிச் செல்ல முயற்சி செய்தோம். முடியவில்லை. எனது வீட்டிற்குச் சென்று ஒரு நாற்காலியைக் கொண்டு வரும்படி அங்கிருந்த ஒருவரிடம் கூறினேன்.

தோட்டப்பாதையில் இரு வளைவுகள் உண்டு. முதல் வளைவில்தான் துரை விழுந்துகிடந்தார். அந்த வளைவிலிருந்து தேயிலைத் தொழிற்சாலைக்கு சுமார் 300 யார் இருக்கும்.

### கடிகாரத்தைக் கண்டேன்

நாற்காலி கொண்டு வரும் வரை நான் அந்த இடத்தில் காத்திருக்கவில்லை. நான் பெரிய கிளார்க்கருக்கு விஷயத்தைத் தெரிவிப்பதற்காகச் சென்றேன். கிளார்க்கர் தான் தோட்டத்தில் துரைக்கு அடுத்தபடியாகப் பெரிய அதிகாரி. அவர் பெயர் வேலுபிள்ளை.

துரை காயப்பட்டுக் கிடந்த இடத்திலிருந்து ஓர் அடி அல்லது இரண்டடி தூரத்தில் பாதையில் கிடந்த ஒரு கைக் கடிகாரத்தை நான் கண்டேன்'

(கோர்ட்டாரின் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அப்பொழுது கடிகாரம் ஓடிக் கொண்டிருந்ததா என்பதைத் தான் கவனிக்கவில்லை என்று சாட்சி கூறினர்.)

சாட்சி தொடர்ந்து கூறியதாவது:—

'நான் அந்தக் கடிகாரத்தைப் பொறுக்கி எடுத்து சட்டைப் பையில் போட்டுக் கொண்டேன். கடிகாரத்தின் கண்ணாடி மூடி அதில் இருக்கவில்லை. நான் வேறு பொருட்களைத் தேடிப்பார்ப்பதற்காகச் சுற்றும்முற்றும் பார்க்கவில்லை. சிவப்புக் கைக்குட்டையையோ நீல நிறக் கைக்குட்டையையோ நான் பார்க்கவில்லை.

கூடியவிரைவில கிளார்க்கருக்கு அறிவிக்க வேண்டுமென்று [illegible] டேன். தேயிலைத் தொழிற்சாலையிலிருக்கும் டெலிபோனிலிருந்து நான் டாக்டருக்குத் தெரிவித்திருக்கலாம். நான் அவசரப்பட்டுக் கொண்டிருந்தேன். தொழிற்சாலைக்கு மீண்டும் ஓட வேண்டுமென்பதைப் பற்றி நான் நினைக்கவேயில்லை.

### சான்ட்துரை வந்தார்

நான் முதலில் கிளார்க்கரின் பங்களாவுக்குச் சென்று, பின்னர் அங்கிருந்து துரைபங்களாவுக்குச் சென்றேன். நான் திரும்பவும் சம்பவம் நடந்த இடத்துக்கு வரவில்லை. துரையை நாற்காலியில் அங்கு கொண்டு வரும்வரை நான் பங்களாவிலேயே இருந்தேன்.

துரையைக் கொண்டு வந்து பங்களாவில் படுக்கையில் வைத்தார்கள். நான் பங்களாவுக்குச் சென்ற பிறகு, மேஜர் சான்ட்துரை, மாவட்ட வைத்திய அதிகாரி, புஸெல்லாவ போலிஸார் ஆகியோரைக்கண்டேன்.

டெலிபோன் செய்தி கிடைத்து முதலில் வந்தவர் மேஜர் சான்ட் துரைதான்.

# போப்துரை கொலை வழக்கு

அவர் 10அல்லது 15நிமிடத்திற்குப் பின்னர் காரில் வந்தார். சார்ஜன்ட் குலதுங்காதான் முதலில் அங்கு, வந்த போலிஸ் அதிகாரி.

கோர்ட்டாரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் ஸ்டெலன்பார்க்தோட்டத்திலிருந்து சுமார் 1 றரை மைல் தூரத்திலுள்ள டெல்டா என்னும் தோட்டத்தில் சான்ட் துரை இருக்கிருரென்றும், அவர் வந்து என்ன செய்தாரென்பது தனக்குத் தெரியாதென்றும் அவர் வந்து 1 றரை அல்லது 2மணி நேரத்துக்குப் பிறகு போலிஸார் வந்திருக்கலாமென்றும் கூறினர்.

### கைக்குட்டை கண்டேன்

கேள்வி:— நீங்கள் பங்களாவுக்குப் போனதற்கும் போலிசார் வந்ததற்குமிடையே காசிமைச் சந்தித்துப் பேசினீர்களா?

பதில்:— பேசியிருப்பேன் ஞாபகமில்லை. சார்ஜன் வந்தபொழுது கடிகாரத்தை அவரிடம் கொடுத்தேன்.

இரவு 2அல்லதுஇரண்டரை மணிக்கு சார்ஜன்ட்குலதுங்கா கையில் சிவப்புக் கைக்குட்டை இருப்பதை முதன் முதலாகக் கண்டேன். அதே சமயத்தில் நீல நிறக் கைக்குட்டையையும் கண்டேன். அவர் கையில் வேறு எதையும் நான் காணவில்லை. இந்தக் கம்புத் தடிகளை அப்பொழுது நான் கவனிக்கவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு நாளும் நான் போப்துரையைப் பார்த்திருக்கிறேன். இந்த நீல நிறக் கைக்குட்டையை அவர் அணிந்திருந்ததை நான் பார்க்கவில்லை.

கோர்ட்டாரின் கேள்வி:— சிவப்புக் கைக்குட்டை அன்றிரவு சம்பவம் நடந்த இடத்தில் விழுந்து கிடந்திருக்குமாறுல் நிலா வெளிச்சத்தில் நீங்கள் அதனைப் பார்த்திருக்க முடியுமா என்று ஜூரர்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றனர்.

பதில்:- அதனை நான் நன்ருகத் தேடியிருந்தால், அல்லது அது விஷயத்தில் கவனம் செலுத்தியிருந்தால் நான் அதனைப் பார்த்திருப்பேன். அதனை நான் கவனிக்கவில்லை"

### காரியதரிசி சாட்சியம்

அடுத்து, பி. எம். வேலுச்சாமி சாட்சிக் கூண்டுக்கு அழைக்கப்பட்டார்.

அவரை அரசாங்கத் தரப்பு வழக்கறிஞர் திரு. கிரொஸட் தம்பையா குறுக்கு விசாரணை செய்தார்.

வேலுச்சாமி தனது வாக்கு மூலத்தில் கூறியதாவது:-

'நான் இந்தியாவில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவன்

1939-ல் அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசியானேன் மார்ட்டின் சில்வா கூட்டுக் காரியதரிசியானர்.

சங்கம் அநேகமாக 1939ல் நிறுவப்பட்டது. 1941ல் அதன் தலைமைக்காரியாலயம் கண்டி, திருகோணமலை வீதி 54ம் எண் கட்டிடத்தில் இருந்தது.

### 25,000 அங்கத்தினர்

இச் சங்கத்தில் சுமார் 25,000 அங்கத்தினர் இருந்தனர். சந்தா வருடத்துக்கு 50 சதம் அல்லது மாதம் 5 சதமாகும்.

1940 வாக்கில் இச் சங்கத்தின் கிளையொன்று ஸ்டெலன்பார்க் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அத் தோட்டத் தொழிலாளர் சுமார் 300 பேர் சங்கத்தில் சேர்ந்தனர்.

மெய்யப்பன் என்னும் தொழிலாளியை எனக்குத் தெரியும். அவர் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நிர்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறைசேரி தலைமை பதவி திரு இராஜேந்திராவுக்கு?

## எத்த திரிக்கும் கயிறு

'நிதி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும், திறைசேரிக் காரியதரிசியுமான திரு. ஜினதாச சமரக்கொடியை 'அந்தப் பதவியிலிருந்து அகற்றி, அந்தப் பதவிக்கு தேசியமய சேவை அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியான திரு. எம். இராஜேந்திராவை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகப் பிரதமமந்திரி வாக்குறுதி கொடுத்திருப்பதாக கூறப்படுகிறது. திரு. இராஜேந்திரா உள்ளூராட்சி மன்ற அமைச்சர் திரு. திருச்செல்வத்தின் சகோதரராவர்.

திரு. இராஜேந்திராவை சிறிது காலத்துக்கு வெளிநாட்டுக்கு அனுப்பி, பின்னர் அவரை திறைசேரிக் காரியதரிசியாக நியமிப்பதற்கு உத்தேசித்திருப்பதாகவும் பிரதமர் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

திறைசேரியிலிருந்து திரு. ஜினதாச சமரக்கொடியை அகற்றும்படி தமிழரசுக் கட்சி ஏற்கனவே பிரதமரிடம் கோரியிருந்தது.'

மேற்கண்டவாறு ஒரு செய்தியை எத்த(4-6-67) வெளியிட்டுள்ளது.

## சிங்கள இதழ்களில்...

### சங்கம் கரைகிறது

'முழு தோட்டப் பகுதியும் தொண்டமானினதும், செல்வநாயகத்தினதும் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருப்பதுடன், சில யு. என். பி. எம். பி.கள் பகிரங்கமாகத் தொண்டமானின் சங்கத்துக்கும் செல்வநாயகத்தின் சங்கத்துக்கும் உதவிசெய்வதால் இன்று யு. என். பியின் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் தோட்டப் பகுதியில் கரைந்து போய் விட்டது என்று தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் வத்தேகாமம் மாவட்டப் பிரதிநிதி திரு. பியசிரி கண்டியில் நடைபெற்ற இச் சங்கத்தின் ஆண்டு விழாக் கூட்டத்தில் கூறினர்.

### கள்ளக் குடியேற்றத்தை தடுக்க முடியவில்லையாம்

'மலை நாட்டுப் பாராளுமன்றத் தொகுதிகளுக்குக் கள்ளக் குடியேற்றக்காரர்களின் வருகை பெருமளவு அதிகரித்துள்ளது. இந்த கள்ளக் குடியேற்ற ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு அரசாங்கத்தால் முடியாதிருப்பதாலும், குடியேற்ற, வெளியேற்ற திணைக்களத்தினதும், போலிஸாரினதும் இலகுவான கொள்கையாலும் இக் கள்ளக் குடியேற்றத் தொத்து நோய்க்கு முழு மலை நாடும் சிக்கியுள்ளது! இவ்வாறு எத்த (7-6-67) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

''மலை நாட்டுத் தோட்டப் பகுதிகளில் கள்ளக் குடியேற்றக்காரர்கள் இருக்கிருர்கள் என்று தகவல் கிடைத்தவுடன், அது பற்றி உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்தால் முடியவில்லை. இதன் விளைவாக அவர்களை மலை நாட்டில் குடியேற்றும் 'இரகசிய ஸ்தாபனம்' தன் வேலையைத் தடங்கலின்றிச் செய்துகொண்டிருக்கிறது.

கள்ளக் குடியேற்றக்காரர்களை இந் நாட்டுக்குக் கொண்டு வந்து, குறைந்த சம்பளத்தில் பல நிறுவனங்களில் அவர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கும் இரகசிய ஸ்தாபனங்கள் மலை நாட்டில் அரசாங்கக் காணிகளில் அவர்களைக் குடியேற்றுவதற்கும் பின் நிற்பதில்லை. அத்துடன் அவர்களுக்கு உணவு முதலிய வசதிகளையும் இந்த ஸ்தாபனமே செய்து கொடுக்கிறது." என்று எத்த மேலும் கூறுகிறது.

### மற்றொரு வானொலி

'மவுபிம' (கம்யூனிஸ்ட் வார ஏடு 6-6-67ந் திகதி கீழ்க்காணும் செய்தியைப் பிரசுரித்துள்ளது:-

'ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு அரசாங்கம் நிறுவப் போகும் ஒரு வானொலிச் சேவைக்காக அமெரிக்காவிலிருந்து மட்டுமல்ல மேற்கு ஜெர்மனியிலிருந்தும் உதவி கிடைக்குமென்றும் தெரிகிறது.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வானொலி கூட்டுத்தாபனம் இருக்கும் போது தொடர்ந்து பதவியிலிருக்கும் பொருட்டு இந்த உபாயத்தைக் கையாளுகின்றனர். இந்த சேவைக்கு மேற்கு ஜெர்மனி 900,000 ரூபாய் கொடுப்பதற்கு இணங்கியுள்ளது.

எமக்குத் தெரிந்த வரையில் இந்த சேவைக்குச் சம்பந்தப்படுத்தி 9 மாகாணங்களிலும் 9 வானொலி நிலையங்கள் நிறுவப் போவதாகவும், அமெரிக்கர்களுக்குச் சொந்தமான 'ரேடிபியூஷன்' சேவையும் அவசியமானல் இத்துடன் இணைத்துக் கொள்ள உத்தேசித்திருப்பதாகவும் தெரிகிறது.

—எத்த (7-6-67)

### பயிற்சி வகுப்புகள்

''தமிழ், ஆங்கிலம் மூலம் அரசாங்க சேவையிற் சேர்ந்த எல்லா அரசாங்க ஊழியர்களுக்கும் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள் அவர்கள் பரீட்சை எழுதிய மொழியிலேயே நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வட, கிழக்கு மாகாணங்களிலிருந்து நாட்டின் இதரபகுதிகளுக்கு அனுப்பப்படும் தமிழ் கடிதங்களுக்கான பதிலை ஒரு தமிழ் பிரதியுடன் சேர்த்து அனுப்ப வேண்டும் என்று திறைசேரி முடிவு செய்துள்ளது.

வட, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க ஊழியர்களின் சம்பளப் பட்டியலும் தமிழிலேயே தயாரிக்கப்படும்.''

—எத்த(4-6-67)

# 'கள்ளக் கடத்தல் மோசடிக்கு பொலீஸ் உடந்தையா?

## துரைரத்தினம் எம். பி. முழக்கம்

கள்ளக் கடத்தல் இலங்கையின் எந்த மூலையில் நடைபெற்றாலும் சரி, கண்டு பிடிக்கப்பட்டு அதில் சம்பந்தப்பட்டோர் தண்டிக்கப்படவேண்டும். இதில் அரசாங்கத்துக்கு ஒவ்வொருவரும் ஆதரவு கொடுக்க வேண்டும். வல்வெட்டித்துறையில் மட்டும்தான் கள்ளக் கடத்தல் நடைபெறுகிறதாகக் கூறி பட்டினம் முழுவதையும் களங்கப்படுத்த சிலர் முயற்சிக்கிருர்கள். இதை வன்மையாகக் கண்டிக்கிறேன். கள்ளக் கடத்தலின் அடித்தளம் கொழும்பில் தான் இருக்கிறது. இந்த அடித்தளம் தகர்த்தெறியப்பட வேண்டும். கள்ளக்கடத்தல் காரருக்கும் பொலீசாருக்கும் இரகசிய உறவு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே இது பற்றி ஆராய்ந்து, இந்த மோசடியை கண்டு பிடிக்க ஒரு விசாரணைக் கமிஷன் நிறுவும்படி பிரதமரைக் கேட்டுக் கொள்கிறேன்" இவ்வாறு இம்மாதம் 3-ந் திகதி பாராளுமன்றத்தில் பேசிய பருத்தித்துறை பிரதிநிதி திரு. துரைரத்தினம் கூறினர்


அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

'நான் பிரதமரை ஒன்று கேட்க விரும்புகிறேன். 8-4-67ல் வல்வெட்டித்துறையில் நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோகத்தின் போது அதே ஊரைச் சேர்ந்த சிவஞானசுந்தரத்திற்கு ஏற்பட்ட மரணம் கொலை என்று பருத்தித்துறை நீதிபதி தீர்ப்பளித்த பின், கொலை காரணமாக வழக்கம் போல் ஒருவரிலோ பலரிலோ கொண்டுவரப்படும் குற்றச்சாட்டுகள் ஏன் இன்றுவரை எடுக்கப்படவில்லை.

'கடந்த சில தினங்களாக பொலீஸார் இந்த வழக்கைத் தொடர்வார்களோ என்று ஐயுறும்படியான சம்பவங்கள் நடப்பதை அடிக்கடி காண்கிறேன். எல்லோருடைய நன்மையின் பொருட்டும் நாங்கள் வழக்குத் தொடரும் வழக்கமான நடவடிக்கையை எடுப்பது நல்லது என்று எண்ணுகிறேன். இந்த விஷயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதைப் பிரதமர் கவனிப்பாரா?

### பொலிசார் லஞ்சம்

'இத்துடன் ஒரு விசாரணைக் குழுவும் தேவையென்று நான் சொல்ல வேண்டியிருக்கிறது. நாங்கள் முன்னரே பிரதமருக்கு இதனைக் கூறியிருக்



கிறோம். நீதிமன்றத்திற்குக் கொண்டுவர முடியாத சில விஷயங்கள் இருக்கின்றன. உதாரணமாக ஏப்பிரல் 8-ம் திகதி நடைபெற்றதும் நான் சமுகமளித்ததும் ஆகிய கூட்டத்தில் ஒரு பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஐந்தோ ஆறு கள்ளக் கடத்தல்காரரிடம் தலா ரூபா 250 அடிக்கடி பெற்றுக்கொள் வதாகக் குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டன. இன்ன அந்தப் பகுதிக்குச் சென்றதும் பொலீஸ் உத்தியோகத்தர்கள் அங்கு சென்றதும் முன்னரிலும் பெருத்துவருவதையும் நான் அறிவேன்.

'நாங்கள் இவ்விஷயத்தில் ஆழ்ந்து கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பொலீஸ் இன்ஸ்பெக்டர் பொருட்கள் நாட்டின் உள்ளேயும் நாட்டுக்கு வெளியேயும் கடத்தப்படும் இரவுகளில் தெருக்களிற் சன நடமாட்டத்தை இல்லாமற் செய்வதற்காக ஒவ்வொரு கடத்தல் காரரிடமும் தலா 250 ரூபா வாங்குவதாக அக்கூட்டத்தில் பேசிய பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டிருப்பதால் அரசாங்கம் இவ்விஷயத்தில் கவனம் எடுக்கவேண்டும் என்று விரும்புகிறேன்.

### மோசடியில் பெரும் புள்ளிகள்

'பொலீசார் பெரும் புள்ளிகளின் நலன்களைக் காப்பாற்ற விரும்புவதால் நிரபராதிகளான மக்கள் மிகவும் கஷ்டத்துக்கு ஆளாகிருர்கள். பொலீஸ் தலைமை அதிகாரியும் வேறு சில பொலீஸ் உத்தியோகத்தரும் வல்வெட்டித்துறைப் பட்டினம் முழுவதையும் களங்கப்படுத்த முயற்சி செய்கிருர்கள். நான் 11 வருஷங்கள் இந்தப் பட்டினத்தில் வசித்துவருவதால் இதற்கொல்லாம் நான் உடன்படவில்லை. உயர்தர உத்தியோகத்தர் சிலர் கூட இந்த மோசடியில் ஈடுபடுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். பிரதமமந்திரி அவர்கள் இவ்விஷயத்தின் அடிவேர் வரைக்கும் ஆராயும்படி கேட்டுக் கொள்கிறேன்.

'இந்த முழு இயக்கம் புறக்கோட்டையில் இருந்தால் என்ன, லண்டனில் இருந்தால் என்ன, அதன் இயல்பு தேசியமாய் இருந்தால் என்ன, சர்வதேசியமாய் இருந்தால் என்ன அந்த மோசடியை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென எண்ணுகிறேன்.

### அடித்தளத்தை தகர்த்த வேண்டும்

'இன்னுமொன்றை நான் கூறுகின்றேன். மேலெழுந்தவாரியாகத் தண்டிப்பதில் பயனில்லை. நான் ஏன் இவ்வாறு கூறுகிறேன் என்றால் இவ்விஷயங்களில் என்ன நடப்பது என்று எனக்குச் சிறிது தெரியும். செல்வாக்கு வாய்ந்த பிரசைகள் நடத்தும் கொழும்பில் — புறக்கோட்டையிலுள்ள அடித்தளத்தை நீங்கள் தகர்க்க வேண்டியிருக்கிறது. அவர்கள் சுதேசிகளாய் இருந்தால் என்ன, விதேசிகள் இல்லாமல் இருந்தால் என்ன, பதிவு செய்யப்பட்டவர்களாய் இருந்தால் என்ன, கௌரவ பிரதமர் அவர்கள் இவ்விஷயத்தின் எல்லா அம்சங்களையும் ஆராயுமாறு விரும்புகிறேன்.

சில மாதங்களுக்கு முன் கொழும்பு துறைமுகத்தில் ஒரு பொலீஸ் வள்ளம் வெள்ளோட்டம் விடப்பட்டு 4 மணி நேரத்தில் மூழ்கிவிட்டது. இதிலும் பிரதமர் கவனம் செலுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

### அவர் யார்?

ஒரு பேர்போன நடுத்தரக் கள்ளக்கடத்தல் குழுவில் ஒரு

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழியில் போலிஸ் தாக்குதல்

## பஸ் கண்டக்டர் படுகாயம்

## எம். பி. யின் துரித நடவடிக்கை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இ. போ. ச. பஸ் ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில் கண்டக்டர் ஒருவரும் பஸ்பிரயாணி ஒருவரும் பொலிஸாரினுல் காரணமின்றித் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, அது விஷயமாக தமிழரசுக் கட்சியின் ஆதரவுள்ள இலங்கைபஸ்தொழிலாளர் கழகமும், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் நடவடிக்கையெடுத்து வருகிருர்கள் என்று தெரிகிறது.

கடந்த செவ்வாயன்று இரவு 11 மணியளவில் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம், யாழ்ப்பாணத்திலிருந்து வந்துகொண்டிருந்த போது, யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு இரட்டைத் தட்டு பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்கள் அவரை வழி மறித்து பொலீஸ் தாக்குதல் பற்றி புகார் செய்தனர் என்று தெரிகிறது. பொலிசார் நடத்திய இந்த தாக்குதலினுல் பஸ் கண்டக்டர் ஒருவரும் ஒரு பிரயாணியும் காயமடைந்ததாகவும் அவர்கள் புகார் கூறினர்.

இந்தப் புகாரையடுத்து திரு. நவரத்தினம் உடனடியாக திரும்பி யாழ்ப்பாணம்சென்று பொலீஸ் சுப்ரிண்டெண்டுக்கு நிலைமையை எடுத்துக் கூறினுரென்று தெரிகிறது. இதன்பயனுக யாழ் உதவி பொலீஸ் சுப்ரின்டெண்ட் திரு. தவராஜா சாவகச்சேரி பொலீஸ் நிலயத்துக்கு இரவு 12 மணிக்கு வந்து விசாரணை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

விசாரணை விடியற் காலம் வரை நடைபெற்றதாகவும், பஸ் தொழிலாளர்களும், பிரயாணிகளும், கண்டக்டர்மேல் நடைபெற்ற தாக்குதல் பற்றி எடுத்துக் கூறியதாகவும் தெரிகிறது.

விசாரணை நடைபெறுகையில் யாழ் இ. போ. ச. மாவட்ட அதிகாரியும் சாவகச்சேரி பொலீஸ் நிலயத்தில் பிரசன்னமாயிருந்தார்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

இரட்டைத்தட்டு பஸ் ஒன்று அன்று பி. பகல் 9-50க்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்துக்கு புறப்பட்டது. அச் சமயத்தில் சாதாரண உடை அணிந்த ஒருவர், தனது குடும்பத்தினருடன் பஸ்ஸுக்குள் ஏறினுர். அரை மைல் தூரத்திலுள்ள சின்னக் கடைக்கு போகவேண்டுமென்று கண்டக்டரிடம் அவர் கூறினுர்.

கண்டக்டர் அவரிடம், அடுத்து ஒரு 'ஷோட் சேவீஸ்' செல்ல இருப்பதாகவும், அதில் பயணம் செய்யும்படியும் கூறினுர். குறித்த நபர் விடாப்பிடியாக அந்த பஸ்ஸிலேயே பிரயாணம் செய்ய வேண்டும் என்று கூறியதால் கண்டக்டர் டிக்கெட்டை கொடுத்தார். குறித்த பிரயாணி இறங்கும் போது பஸ் மிதிபலகையில் நின்று கண்டக்டரை இழிவாகத் திட்டியதாக தெரிகிறது.

சக பஸ் பிரயாணியொருவர், சீக்கிரம் இறங்கும் படியும், பஸ்ஸை தாமதப்படுத்த வேண்டாமென்றும் குறித்த நபரிடம் சொன்னுராம். இப்படிச் சொன்ன பிரயாணியை குறித்த நபர் உடனே தாக்கியதாக தெரிகிறது. பஸ்ஸுக்குள் குழப்பம் ஏற்பட்டது. தாக்கப்பட்ட பிரயாணியுடன் பஸ் தொடர்ந்து சென்றது.

நாவற்குழியில் ஒருபொலீஸ் ஜீப் குறித்த பஸ்ஸை விலத்திக் கொண்டு முன் வந்து நின்றது. பஸ் நிறுத்தப்பட்டது. எல்லாப் பிரயாணிகளும், பஸ்ஸிலிருந்து இறங்கும்படி பொலீசாரினுல் கட்டளையிடப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் முன்பு சம்பந்தப்பட்ட அதே பஸ் பிரயாணி அடையாளங் கண்டு பிடிக்கப்பட்டு மீண்டும் பொலீசாரினுல் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் அவர் பொலீஸ் ஜீப்பில் ஏற்றப்பட்டாராம்.

இந்த இடை வேளையில் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சாதாரண உடை அணிந்த குறித்த நபர், கண்டக்டரைக் கண்டபடிதாக்கியதாகம், கேலி பேசியதாகவும் தெரிகிறது. பல கடுமையான காயங்களுடன் கண்டக்டர் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு அனுமதிக்கப்பட்டார்.

இது பற்றி இலங்கை பஸ் தொழிலாளர் கழகத்தின்செயலாளர் வழக்குரைஞர் திரு. ஆலாலசுந்தரம் உடனடியாக ஸ்தலத்துக்கு சென்றுநிலைமையை ஆராய்ந்ததுடன் மேற்கொண்டு நடவடிக்கையெடுத்து வருகிருர் என்று தெரிகிறது.

# ஈழத்தமிழர் வரலாறு ஆராய்ச்சி மாநாடு

ஈழத் தமிழர் வரலாறு சரியான முறையில் எழுதப்படவில்லை. பதிலாக எழுதப்பட்டு வரும் ஏடுகளில் எல்லாம் திரிபும் ஒழிபுமறைவும் புகுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

ஈழத் தமிழர் வரலாற்றை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்து ஆராயலாம். முற்காலம், இடைக் காலம், ஐரோப்பிய காலம் தற்காலம் எனப் பிரிக்கலாம். இவற்றில் இடைக் கால வரலாற்றைப் பற்றியும் ஐரோப்பிய கால வரலாற்றைப் பற்றியும் தற்கால வரலாற்றைப் பற்றியும் போதிய சான்றுகளுண்டு. ஆனல் முற்காலம் சரிவரத் தெளிவுபடுத்தப்படவில்லை. எம்மைப் பொறுத்தவரை மிக முக்கியமானதும் அதுவே.

இன்றுள்ள சூழ்நிலையில் முற்காலம்தான் சரிவர ஆராயப்படவேண்டிய ஒன்றுகும். தமிழரல்லாதார் - குறிப்பாகச் சிங்கள வரலாற்றறிஞர்கள் எழுதும் நூல்களில் தமிழர் இந்நாட்டுக்குச் சொந்தமற்றவர்கள் என்ற கருத்துப்பட எழுதிவருகிறுர்கள். அதே போல் தமிழ் வரலாற்ருசிரியர்கள் சிலரும் முழுக்க முழுக்கப் புராண இதிகாசக் கதைகளையும் வரலாற்றுச் சான்ருகக் கொள்ளுமளவுக்குத் தவறிவிடுகிறுர்கள். விஞ்ஞான ரீதியில், நவீன முறையில் தமிழர் வரலாறு ஆராயப்படவில்லை.

தென்னிந்திய - திராவிட வரலாறுகூட இன்று பல புதிய கருத் தோட்டத்தில் சுழன்று கொண்டிருக்கின்றது. அவை யாவும் ஈழத் தமிழர் வரலாற்றையும் பாதிக்கவல்லவை. இருப்பின் தொன்மை இன்று தென்னிந்திய வரலாற்றில் ஒரு சிக்கலாக மாறிவிட்டது. திராவிட நாகரிகம் தென்னிந்தியாவுக்குச் சொந்தமானதா என்ற கேள்விக் குறியை எழுப்பும் சான்றுகளை அகழ்ந்து கொண்டிருக்கிறுர்கள் ஒரு சாரார்.

எனவே இந்தப் பின்னணியில் தனி ஒருவருக்கு ஈழத்தமிழர் வரலாற்றை ஆராய்ந்து எழுதி முடிப்பது சாத்தியமன்று - அது நிறைவு பெருது. குற்றம் குறையைத் தவிர்த்துக் கொள்வது முடியாது. எனவே இது ஒரு கருத்தரங்கமாக அமைவதே சாலச் சிறந்தது.

வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபடும் ஒவ்வொருவரும் சில குறிப்பிட்ட காலகட்டத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே ஒவ்வொருவரும் தான் விரும்பும் பகுதியைப் பற்றி எழுதிக் கொள்வது சாலச் சிறந்தது. இவற்றின் தொகுப்பு மேற்கொண்ட ஆராய்ச்சிக்கு நிலைக்களமாக - விளைநிலமாக - அமையும்.

இந்த ஆராய்ச்சிக்கு புதைபொருள் ஆராய்ச்சிக் கருத்துக்கள், கல்வெட்டாராய்ச்சிக் கருத்துக்கள், பிற நாட்டார் பயண இலக்கியக் குறிப்புகள், நேரடி வரலாற்றுக் குறிப்புகள் மிக அவசியமானவை. இவற்றுடன் இந்நாட்டில் தமிழின் தொன்மையை விளக்கும் மொழியியல் இலக்கிய ஆராய்ச்சிக் கருத்துக்களும் வரவேற்கத் தக்கவை.

இந்த ஆராய்ச்சிக்குத் துணை செய்யும் பல மூல ஏடுகள் ஆங்கிலத்திலேயே உண்டு. இந்த ஆராய்ச்சியில் ஈடுபாடுள்ள பலர் ஆங்கிலத்திலேயே அவற்றைத் திறம்படச் சொல்லும் தகமையுள்ளவராயுள்ளனர். அதே போல் தமிழ் வர வரலாற்றுக்குத் துணை செய்யும் நல்ல கருத்துக்களைக் கொண்ட சிங்கள அறிஞர்கள் ஆங்கிலத்திலேயே வலவராயுள்ளனர். எனவே இந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே அமையவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரைகள் வரவேற்கப்படும்.

இந்த ஆராய்ச்சிக்குரிய கருத்துக்களைத் துறை பிரித்து ஏற்றவாறு வகுப்பது அவசியம். இதற்கு துணையாக இந்த வரலாற்று ஆராய்ச்சிக் கருத்தரங்கிற்கு முன்னேடியாக ஒரு கலந்துரையாடல் நடத்துவது சிறந்தது. வரலாற்று அறிஞர்கள் பங்கு கொள்ளும் இந்தக் கலந்துரையாடல் இந்த ஆராய்ச்சி மாநாடு - கருத்தரங்கம் - எந்த முறையில் திறம்பட அமைக்கப்படலாம் என்பதற்குத் திறவுகோலாக அமையும். இந்தக் கலந்துரையாடலை ஒரு மாதத்திற்குள் நடத்துவது விரும்பத் தக்கது.

ஆ. தேவராசன்,
செயலாளர்

ஈழத்தமிழர் வரலாற்றுக்குழு
கொழும்புத் தமிழ்ச்சங்கம்,
7, 57ஆம் ஒழுங்கை,
கொழும்பு-6

## மக்கள் குரல்

# சாதியை ஒழிக்க ஓர் உபாயம்

சாதி பேதத்தை ஒழித்துக் கட்டுவதென்பது ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாதலின் அது பற்றிப் பேசவேண்டியதேவையில்லை. ஆனல் அதை ஒழித்து விடுவதற்கு எடுக்க வேண்டிய உபாயங்களைச் சற்று ஆராய்தல் நன்மை பயக்கும்.

ஓர் உபாயமென்னவெனில் பிறப்புச் சாட்சிப் பத்திரத்திலுள்ள 'தகப்பனின் [illegible]' என்ன என்ற கேள்வி அப்படியே நீக்கப்பட வேண்டும் என்பதுதான்.

அக் காலத்தில் உயர்சாதி என்போருக்கு உத்தியோகங்கள் வழங்கப்பட்டு ஏனையோர் புறக்கணிக்கப்பட்ட காலத்தில் இந்தக் கேள்வி தேவைப்பட்டிருக்கவராம்.

ஆனல் இன்று சாதியைக் கொண்டே ஒருவனுக்கு உத்தியோகங்கள் வழங்கப்படவில்லையாதலின் அது நீக்கப்படுவதில் குறையேதுமில்லை. பதிலாக பலவிதமாக நன்மைகள் [illegible] [illegible] ஆட்சியின் போது உருவாக்கப்பட்டு இப்போது நடை முறையிலிருக்கும் காலத்திற் கொவ்வாத கச்சேரி முறையை நீக்கி மாவட்ட சபைகளை நிறுவ நாம் முயற்சியெடுக்கையில் பாசி பிடித்தால் பசுமையாகத் தோன்றும் சாதி முறையை மட்டும் வைத்திருத்தல் நல்லதுதானு?

இக்கேள்வி பிறப்புச் சாட்சிப் பத்திரத்திலிருந்து நீக்கப்பட்டால் வேறு எப்படியும் ஒருவனை சாதிகுறைந்தவனென்று கண்டு பிடிக்க முடிமுடியாது போய்விடும். இதன் பின்னரே உண்மையான சாதியொழிப்பு முறை பயன்படத் தொடங்கும்.

சாதியை ஒழிக்க வேண்டும் என்ற தலைப்பு இன்று மேடைப் பேச்சாளர்களுக்கு மட்டும் தலை கீழா கப்பாடம் வந்துவிட்டதே தவிர விடயமளவிலல்ல. ஆகவே அடிமனத்திலிருந்து அதாவது ஒருவனின் மனச்சாட்சியோடு பின்னிப் பிணைந்துதான் இக்கருத்து வெளிப்படவேண்டும். அப்படியான ஒருவரே இச்செயலைத் துணிந்து செய்யத் தலைப்படுவார். ஆகவே எம் தலைவர்கள் இதைச் செய்ய வேண்டுமென்று அன்புக் கட்டளையிடுகின்றனர் தமிழ் மக்கள்.

எப்பொழுது சாதி முறை ஒழியும் என்று தமிழ் மக்கள் கவலைப்படுகிருர்களேயன்றி ஒழியுமா, என்றல்ல. இன்று குறைந்த சாதி என்பதற்காக சிலர் ஒதுக்கிவைக்கப்படுவராயின் நாளை கூடிய சாதி என்பதற்காக வேறு சிலர் ஒதுக்கி வைக்கப்படலாமல்லவா?

'நல்லைநகரோன்'

கொழும்பு-3

# இஸ்லாமிய கலா நிலையம் வேண்டும்

## கலைக் குழு சிபார்சு

இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த ஓர் இஸ்லாமிய கலாநிலையம் அமைக்கப்படுவது அவசியமாகும் என்று இலங்கைக் கலாமண்டல இஸ்லாமிய நுண்கலைக் குழுவினுல் நியமிக்கப்பட்ட தனிநபர்குழு சிபார்சு செய்துள்ளது. இவ்வறிக்கை விரைவில் கலாசார அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

இக்குழு செய்துள்ள இதர சிபார்சுகளாவன:—

இலங்கையில் சகல முஸ்லிம் கலை, கலாச்சார ஸ்தாபனங்களையும் இஸ்லாமிய கலைக் குழுவின் கீழ் பதிவு செய்ய வேண்டும். அவ்விதம் பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் பொது ஸ்தாபனங்களுக்கு வேண்டிய ஆலோசனைகள், உதவிகள் என்பன கலைக்கழகத்தினுல் அளிக்கப்பட வேண்டும்.

கலைக்கழக இஸ்லாமிய பிரிவு நடத்தும் நடவடிக்கைகளைக் கொழும்பில் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விசேடமாக முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கும் விஸ்தரித்தல் வேண்டும். அவ்வப்பகுதிகளில் கலைக்கழகத்துடன் பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் கலாச்சார ஸ்தாபனங்களுடன் இணைந்து இஸ்லாமிய கலைவிழாக்களை ஒழுங்கு செய்வதுடன் முஸ்லிம்கலாசார ஸ்தாபனங்களிடையே இணைப்பையும் ஏற்படுத்துதல் அவசியம்.

இஸ்லாமிய நுண்கலை பற்றிய கருத்தரங்குகள், பகிரங்க சொற்பொழிவுகள் நாடெங்கும் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். மாதாந்தம், அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இஸ்லாமிய நுண்கலை பற்றிய சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டு முஸ்லிம்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட வேண்டும்.

களிக்கம்பு, சிலம்படி, வாள் வீச்சு, பொல்லடி, கோலாட்டம், நாட்டுக்கவி, குரவையிடு

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆண்டுகளாக வளர்ந்த இஸ்

இஸ்ரேலுக்கும், அரபு நாடுகளுக்குமிடையே புகைந்துகொண்டிருந்த பகைமையுணர்வு வெடித்து யுத்தமாக மாறியதற்குரிய அடிப்படைக் காரணமென்ன?

இஸ்ரேலுக்குள்ள ஒரேயொரு கப்பற் பாதையான அகாபா வளைகுடாவை ஐக்கிய அரபுக் குடியரசு தடை செய்ததுதான் சண்டைக்கு மூல காரணமா? அல்ல. பாலஸ்தீனப் பிரச்சினைதான் அடிப்படைக் காரணமாகும். இதை ஜனாதிபதி நாஸரே தெளிவுபடக்கூறியுள்ளார்.

நாஸரின் இந்த அறிவிப்பு உலகெங்கும் வாழும் இலட்சக்கணக்கான அரபு மக்கள் அத்தனை பேருடைய உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதாகும். தங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட 10 இலட்சத்துக்கு மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் தங்கள் உயிரையும் பணயம் வைத்தாவது அதை மீட்க துடிதுடித்து நிற்கும் ஆர்வத்துக்கு எந்த ஒரு அரபு நாட்டு மன்னன் என்றாலும்சரி, ஜனாதிபதி என்றாலும் சரி, மாறுபட்ட கருத்தை வெளியிடப் போவதில்லை.

மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென்றால், ஐ. நா. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதியான சமத்துவ அடிப்படையில் பாலஸ்தீனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்.

### பாலஸ்தீனம் ஓர் உலகப் பிரச்சினை

பாலஸ்தீனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 1948ம் ஆண்டு தொடக்கம், ஐ. நா. சபை, தொடர்ச்சியாக அதன் ஒவ்வொரு கூட்டத்திலும் தனது திட்டத்தை தீர்மானமாக நிறைவேற்றிவருகிறது. பாலஸ்தீனத்திலிருந்து வெளியேற்றப்பட்ட அகதிகள் மீண்டும் அங்கு குடியமர்த்தப்படவேண்டும். இதுதான் ஐ. நா. சபையின் தீர்மானம்.

ஆனால் இதுபற்றி இஸ்ரேல் அசட்டை செய்து வருகிறது இதனால் பாலஸ்தீன பிரச்சினை இன்று அரபு நாடுகளுக்கு மட்டுமன்றி உலக நாடுகள் முழுவதும் ஊன்றிக் கவனமெடுக்க வேண்டிய ஒன்றாகிவிட்டது.

யூதர்களுக்கு ஒரு தாயகத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்து 2வது உலகயுத்தத்தின்போது, நாஜிகள்யூதர்களை அழித்த சமயத்தில்கருக் கொண்டதல்ல.

### சியோனிஸ்ட் இயக்கம்

1300 ஆண்டுகளுக்குமேலாக பாலஸ்தீனத்தில் வழிவழியாக அரபு மக்கள் வாழ்ந்து வந்திருந்தும் கூட, 1880ம் ஆண்டு சியோனிஸ்ட்(ZIONIST)இயக்கம் பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு ஒரு அரசை நிறுவுவதை தனது திட்டமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது.

உலகெங்குமுள்ள யூதர்களை பாலஸ்தீனத்தில் கொண்டு வந்து குடியேற்றுவதென்றும் அந்த அரசாங்கத்தை நைல் நதியிலிருந்து யூபிரைட்டீஸ் வரை விஸ்தரிப்பதென்றும் சியோனிஸ்ட் இயக்கம் கொள்கை வகுத்துள்ளதாக 1920ம் ஆண்டு ஒரு பிரபலமான யூத எழுத்தாளர் அறிவித்திருந்தார்.

1950ம் ஆண்டு ஹீபுறு பல்கலைக் கழக மாணவர்களுக்கு இஸ்ரேலிய பிரதமர் பென்குரியன் பின்வருமாறு கூறியிருந்தார். 'நீங்கள் ராஜதந்திரத்தாலோ, அன்றி படையெடுப்பினாலோ, இஸ்ரேலியசாம்ராஜ்யத்தை நைல் நதியிலிருந்து யூபிரேட்டிஸ் நதி வரையுள்ள எல்லைமுழுவதையும் உள்ளடக்கியதாக விஸ்தரிப்பதற்கு உழைக்கவேண்டும்'

### அரேபியர் கருத்து

இஸ்ரேலிய பொருளாதாரம் மளமளவென்று வளர்ந்து வருவதும், மேற்கு நாடுகளிலிருந்தும் உலகெங்குமுள்ள யூதர்களிடமிருந்தும் இஸ்ரேலுக்கு கிடைத்துவரும் உதவியால் இஸ்ரேல் அடைந்து வரும் இராணுவப் பலமும், இஸ்ரேலின் சனத்தொகை திமுதிமுவென்று பெருகிவருவதும் அரபுமக்களுக்கு ஐயத்தை ஏற்படுத்தி வருகிறது. இஸ்ரேலியர்களின் மேற்கண்டவார்த்தைகளின் பின்னால் ஒரு தீர்க்கமானமுடிவு இருப்பதாக அராபியர்கள் நினைக்கிறார்கள்.

முதலாவது உலகயுத்த காலத்தில் யூதரான சேர்ஹேபேட் சாமுவல் பிரித்தானிய மந்திரி சபைக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்தார். அந்தமகஜரில் துருக்கிக்கும் ஜேர்மனிக்கும் எதிராக யூதர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதற்கு பிரதிபலனாக, பிரித்தானியாவின் அனுசரணையுடன் பாலஸ்தீனத்தில் ஒரு யூத அரசை நிறுவித்தர வேண்டும் என்று கேட்கப்பட்டது. திரு. லொயிட் ஜோர்ஜ் அவராகவே பின்னர் ஒரு முறை கூறினார். "1917ம் ஆண்டு எமக்கு கிடைக்கக் கூடிய ஒவ்வொரு உதவியையும் நாம் பெறுவது அவசியம் என்று நம்பியிருந்தோம். அதனால் யூதர்களின் அனுதாபத்தையும் பெறுவது எமது கடமையென்று கருதினோம்"

### பிரிட்டன் ஏற்றது

பிரித்தானிய அரசாங்கம், பாலஸ்தீனத்தை யூதர்களின் தாயகம் என்று ஏற்றுக்கொள்வதாக 1917ம் ஆண்டு அமெரிக்காவிலிருந்த யூதர்களுக்கு இரகசியமாக அறிவித்தது.

அதே ஆண்டு பிரித்தானிய வெளிவிவகார காரியதரிசி பாரன் ரொத்சில்ட் என்பாருக்கு எழுதிய கடிதமொன்றில் பாலஸ்தீனத்தை யூதர்களின் தாயகமாக ஏற்றுக்கொண்டாலும், பாலஸ்தீனத்தில் வாழும் யூதர்கள் அல்லாதவர்களின் சிவில் உரிமைகளுக்கும் எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படக்கூடாது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இதையடுத்து தாயகம் என்பது என்ன என்ற பிரச்சினை கிளம்பியது. ஆங்கிலேயர்களுக்கு இங்கிலாந்து எப்படியோ அப்படி யூதர்களுக்கு பாலஸ்தீனம்" என்று ஒரு விளக்கம் எழுந்தது.

இந்த விளக்கத்தினால் அரேபியர்களிடம் தப் பெண்ணம் தோன்றலாம் என்று கண்ட அப்போதைய காலனி அமைச்சராகவிளங்கியவின்சன்ட்சர்ச்சில் 1922ல் அது நடைமுறை சாத்தியமற்றதென்றும் அத்தகைய எண்ணம் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் இடையாதென்றும் கூறியிருந்தார்.

எனினும் இஸ்ரேல் அரசு அமைக்கும் வேலைகள் நடைபெற்றுவந்தன.

### அராபியர்களுக்கு துரோகம்

1948ம்ஆண்டு முடிவடைந்த 30வருட "மெண்டேட்" பிரிட்டிஷ் ஆட்சி, அரபு மக்களுக்கும் அவர்களின் இலட்சியங்களுக்கும் முழுத்துரோகம் செய்துவிட்டதாகவும், யூதர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மட்டுமே எப்பொழுதும் நிறைவேற்றி வைத்ததென்றும், அராபியர்கள் கருதுகிறார்கள்.

பிரிட்டிஷ் "மெண்டேட்" ஆட்சி ஆரம்பித்த பொழுது 50,000 (7சத வீதம்) ஆகவிருந்த யூதர்களின் சனத்தொகை, 1948ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி முடிவடைந்த போது 5இலட்சமாக (33சத வீதம்) உயர்ந்து விட்டது என்பது மறுக்கமுடியாதஉண்மை.

1947ம் ஆண்டு அரேபியர்களின் சனத்தொகை 93வீதத்திலிருந்து 67சத வீதமாக வீழ்ச்சியடைந்தது.

### யூதர்களுக்கு அரபு நிலம்

1930ம் ஆண்டளவில் 50,000 மேற்பட்ட அராபியர்களை அவர்களின்இல்லங்களிலிருந்து விரட்டியடித்து விட்டதாக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மேல் அரேபியர்கள் குற்றம் சுமத்துகிறார்கள். பரம்பரை பரம்பரையாக அரேபியர்கள் வாழ்ந்து வந்த தோட்டங்களி

# லண்டனில் வெளியாகும் ஜே. ஆரின் புத்தகம்

சென்ற வாரம் கடற்கரையோரமாகப் பறந்து சென்ற காற்றாடிக்கு பம்பலப்பிட்டிசரஸ்வதி மண்டபத்திலிருந்து சென்னை முதன் மந்திரி பெயரும் இலங்கைப் பிரதம மந்திரி பெயரும் ஏககாலத்தில் மேலே கிளம்புவதைக் கண்டது.

இது என்ன சிக்கல் என்பதை அறிய காற்றாடி மண்டபத்தின் மீது தாழப் பறந்து நோட்டம் பார்த்தது.

அங்கே'சட்ட மாணவர்கள் முத்தமிழ் விழா நடத்திக் கொண்டிருந்தனர். ஒரு மாணவர் சாரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தார். அவர் பேச்சில் கண்டனமும் தொனித்தது. ஒலிபெருக்கி அவரது பேச்சை காற்றாடியின் காதில் கொண்டு வந்து போட்டது, விஷயம் என்ன தெரியுமோ?

விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பும்படி இரு முதல்வர்களுக்கும் இந்த மாணவர்கள் வேண்டுகோள் விடுத்தார்களாம். சென்னை முதல்வர் உடனடியாக வாழ்த்துச் செய்தியை அனுப்பிவிட்டாராம். இலங்கை முதல்வரோ கடைசிவரை மௌனம் சாதித்து விட்டாராம். ஆனல் கடைசி நிமிடத்தில் முதல்வரின் காரியதரிசி ஒரு கடிதம் அனுப்பியிருந்தாராம். அது வாழ்த்துச் செய்தியல்ல. பிரதமருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதற்கு அவகாசமில்லை என்று அதில் எழுதியிருந்தாராம் காரியதரிசி. பலே!

மாணவர்களுக்கு ஒரு பக்கம் ஆச்சரியம் மறுபக்கம் அதிர்ச்சி! சுமார் 650மைல் தொலைவிலிருப்பவர் வாழ்த்துச் செய்தியை அனுப்பிவிட்டார். கூப்பிடு தூரத்திலிருப்பவர் அவகாசமில்லை என்று எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்திலே இரண்டுவரி ஒரு வாழ்த்துச் செய்தியை எழுதி அனுப்பக்கூடாதா என்று அந்த மாணவர்கள் கடாவினர்.

கொழும்பு கருவாக்காட்டுப் பகுதியிலே ஒரு நாள் காற்றாடி பறந்து கொண்டிருந்தது. ஒரு பெரிய பங்களாவில் ஒரு மேசை அருகே அமர்ந்து நமது ஜே. ஆர். எதையோ வேகமாக எழுதித் தள்ளிக்கொண்டிருந்தார். அவரது பேனா இவ்வளவு வேகமாக எழுதியதை காற்றாடி இதற்கு முன்பு பார்த்ததில்லை.

காற்றாடிக்கு ஒரே ஆவல். பங்களாத் தோட்டத்திலே தாழப் பறந்து ஜன்னல் வழியாக கண்ணோட்டத்தைப் பாய்ச்சியது விஷயத்தைக் கண்டுபிடிப்பதற்காக

எழுதப்பட்ட தாள்கள் மேசைமீது கற்றை கற்றையாகக் கிடந்தன. ஜே. ஆரோ சற்றும் களைப்பின்றி இன்னும் எழுதிக் குவித்துக் கொண்டிருந்தார். அவரது முகத்தில் ஆழ்ந்த சிந்தனை பளிச்சிட்டது.

இப்படி என்ன எழுதுகிறார் என்பதை காற்றாடி கண்டுபிடிக்கவில்லை. ஜன்னல் வழியாக ஒரு வதந்தி கூட வெளியே வரவில்லை. புத்தகம் எழுதுகிறாரோ? ஜே. ஆர். அப்படியொன்றும் நூலாசிரியர் இல்லைகாற்றாடி தான் விடாக் கண்டனாச்சே! பங்களாத் தோட்டத்தில் சுழன்று சுழன்று பறந்து கொண்டிருந்தது.

ஆ! ஒரு பெரியகார் வந்து பங்களா வாசலில் நின்றது. அதிலிருந்து 'டிப்டொப்' பாக உடையணிந்த ஒரு வெள்ளையர் இறங்கி, உள்ளே சென்றார்.

இந்த 'துரை'யை எங்கேயோ பார்த்த ஞாபகம்! ஓ! இவர் லண்டனில் ஒரு பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் உரிமையாள

### காற்றாடி

ராச்சே! இவருக்கும் வெளிநாடுகளில் சுற்றித் திரியும் ஒரு பிரபல பத்திரிகையாளருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதும் காற்றாடிச்குத் தெரியும். இவர் இங்கே எங்கே வந்தார்?

அடுத்த விநாடி அந்த ஆங்கிலேயரும் ஜே. ஆரும் அதே மேசையருகில் அமர்ந்து பேசத் தொடங்கினர். நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. காற்றாடி ஜன்னல் அருகில் பறந்து அவர்களின் உரையாடலுக்குச் செவிசாய்த்தது.

விஷயம் அம்பலமாயிற்று. ஜே. ஆர் ஒரு நாவலாசிரியராகி விட்டார். உண்மையிலேயே அவர் ஒரு புத்தகம்தான் எழுதிக் கொண்டிருந்த.

அவரது அரசியல் நினைவுக்குறிப்புகள்தான் அந்தப் புத்தகம். இலங்கைக்கு சுதந்திரம் வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை அரசியல் சம்பவங்கள் அனைத்தும் அதில் இடம் பெற்றிருக்கிறதாம்.

மிகமிக ரசமான கதைகள் இதுவரை வெளிவராத வியக்கத்தக்க சம்பவங்கள் அந்த நூலில் அடங்கியிருக்கின்றன என்பது அவர்களுடைய பேச்சிலிருந்து காற்றாடிக்கு ஊகிக்க முடிந்தது. ஜே ஆரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பும் இச்சம்பவங்களுடன் பின்னிக் கிடக்கும் என்று நம்பலாம். அவர் ஒரு முழு அரசியல் வாதியாயிற்றே!

புத்தகத்தை வெளியிடுவதற்கான நிபந்தனைகளைப் பற்றியும் அவர்கள்பேசினர். இதிலிருந்து இப்புத்தகம் லண்டனில் வெளியிட இருப்பதாக காற்றாடி தெரிந்து கொண்டது. வெளிநாடுகளிலும் உள் நாட்டிலும் இது பெருவாரியாக விற்பனையாகும் என்று அந்த 'துரை' சொன்னதைக் கேட்ட காற்றாடி நூலாசிரியர் ஜே. ஆருக்கு ஒரு 'சபாஷ்' போட்டு விட்டு வான வெளிக்குக் கிளம்பியது.

அப்படியே புறக்கோட்டைப் பக்கம் பறந்து வரும் போது ஒரு பத்திரிகாலயத்திலிருந்து ஒரு சிலர் கவலை தோய்ந்த முகத்துடன் வெளியேறிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் கோபத்துடன் பேசிய சொற்கள் காற்றாடியில் வந்து மோதிச் சிதறின.

அவர்கள் அப்பத்திரிகாலயத்தில் ஒரு தொழிற் சங்கத்தை நிறுவ முயற்சி செய்தார்களாம். விளைவு அவர்கள் திடீரென வெளியே தள்ளப்பட்டதுதான். இக்காலத்திலுமா இந்த நாட்டில் தொழிற் சங்கத்துக்குத் தடை என்று காற்றாடி மூக்கின் மேல் விரலை வைத்தது.

இதில் வேடிக்கை என்னவெனில் இப்பத்திரிகாலயத்திலிருந்து வெளிவரும் ஏடுகள் தொழிற் சங்க வளர்ச்சிக்காக சதா முதலைக் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பதுதான்.

கிராண்ட்பாஸ் பகுதியிலுள்ள ஒரு பத்திரிகாலயம் தங்கள் நிறுவனத்தில் தொழிற் சங்கம் தலை தூக்க விடாமல் நீண்ட காலமாக நசுக்கி வந்ததும் பின்னர் அது என்றுமே மறக்க முடியாத ஒரு கசப்பான பாடத்தை ஒரு தொழிற் சங்கத்திடமிருந்து படித்துக் கொண்டதும் உடனே காற்றாடியின் நினைவுத் திரையில் பளிச்சிட்டன.

விருந்து,
அகற்றப்
நிலங்கள்
கப்பட்ட
கள் குற்

அரேபி
செய்தபே
பட்ட பா
லப்பட்ட
விருந்த
விருந்துச
பட்டனர்
2வது
முந்திய நி

தாயக

யூதர்கள
றுத்தப்பட
ளின் தா
அனுதாப
பட்டது.
தீனத்தில்
குடியேற்ற
பிரிட்டிஷ்
வகுத்தன
யருக்கு மீ
ஏற்பட்ட
இதை எதி
தீனப் பிர
சபைக்கு
கம் எடு
இதைத்
பற்றி ஆர
ஜூன் மா
கமிஷன்
பட்டது.

ஐ.

பாலஸ்
கப் பிரித்
அரசாகவு
சாகவும் ஆ
இந்தக்
செய்தது.
ஒருசர்வ
லாம் என்
சில் தெரி
ஆலோசன
ஏற்று
னைக்கு தீ
றியது.

இதன்பி
டிஷ் அரசு
ஆட்சிக்கா
மே மாத
முடிவடை
தது. அ

ப

பிரதம
பரான
ஞாதல்
கொழும்
சில் பெ
லயத்தில்
போர்மு
என்று எ
செய்தி

இச்செ
பிட்டிருப

'சிறில
யிலிருந்து
திரு. டி.
வின் அ
ஐக்கிய
முகர்களு
சுதந்திர
வெளியே
இக் கூட்
னர்.

'சிங்க
பெயரில்
னத்தை
வினர்
திரு.
தெரிவு
ஆனல்
வந்திருக்
பிரதம
பஸ்நாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல்-அரபு தகராறின் பின்னணி

விருந்து, இராணுவத்தினரால் அகற்றப்பட்டதாகவும், அந்த நிலங்கள் யூதர்களுக்குகொடுக்கப்பட்டதாகவும் அரேபியர்கள் குற்றம் சாட்டுகிறுர்கள்.

அரேபியர்கள் கிளர்ச்சி செய்தபோது. 10,000 மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். பாலஸ்தீனத்திலிருந்த அரேபிய நகரங்களிலிருந்துசகலமக்களும்துரத்தப்பட்டனர். இவையெல்லாம் 2வது உலகமாயுத்தத்துக்கு முந்திய நிகழ்ச்சிகள்.

### தாயகப் பிரச்சினை

யூதர்கள் இட்லரால் துன்புறுத்தப்பட்டபின்னர், யூதர்களின் தாயகப்பிரச்சினை அதிக அனுதாபத்துடன் அணுகப்பட்டது. யூதர்களைப் பாலஸ்தீனத்தில் பெரிய அளவில் குடியேற்றும் திட்டத்தை பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் வகுத்தனர். இதனுல் அரேபியருக்கு மீண்டும் ஒரு தலையிடி ஏற்பட்டது. அரேபியர்கள் இதை எதிர்த்தபோது.பாலஸ்தீனப் பிரச்சினையை ஐ. நா. சபைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்துச் சென்றது. இதைத் தொடர்ந்து அது பற்றி ஆராய 1947ம் ஆண்டு ஜூன் மாதம் ஒரு சர்வதேசிய கமிஷன் நியமனம் செய்யப்பட்டது.

### ஐ. நா. முடிவு

பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து, ஒருபாதி அரபு அரசாகவும் மறுபாதி யூத அரசாகவும் ஆக்கவேண்டுமென்று இந்தக் கமிஷன் சிபார்சு செய்தது. ஜெருசலேம் நகரம் ஒருசர்வதேசியநகராக இருக்கலாம் என்றும் அந்தச் சிபார்சில் தெரிவிக்கப்பட்டது.இந்த ஆலோசனையை ஐ. நா. சபை ஏற்று பாலஸ்தீனப் பிரிவினைக்கு தீர்மானம் நிறைவேற்றியது.

இதன்பின்னர்தான் பிரிட்டிஷ் அரசு, தனதுமெண்டேட் ஆட்சிக்காலம் 1948ம் ஆண்டு மே மாதம் 15ந் திகதியுடன் முடிவடைந்ததாக அறிவித்தது. அமெரிக்காவும், ரஷியாவும், 1948ம் ஆண்டு மே 14ம் நாள்இஸ்ரேல் இராச்சியத்தை அங்கீகரித்தன.

1947 ம் ஆண்டு டிசம்பர் மாதம் (பிரிட்டிஷார் வெளியேற 5 மாதங்களுக்கு முன்பு) ஆயுதந்தாங்கிய யூத துருப்புக்கள், அராபியர்களைத்தாக்க ஆரம்பித்தன. இதனுல் பயம் காரணமாக அரேபியர் தங்கள் ஊர்களை விட்டு வெளியேறினர்.

### யூத பயங்கர வாதிகள்

மார்ச் ஏப்ரல் ஆகிய இரு மாதங்களிலும், யூத பயங்கர வாதிகள் சரித்திரத்திலிடம் பெறக்கூடக் கூசக்கூடிய குற்றங்களை தொடர்ச்சியாகசெய்தார்கள் அராபியர்களின் வாழ்வு, மானம், சொத்து. கற்பு - இவைதாம் யூதர்களின் விலைகளாக இருந்தன.

பிரிட்டிஷ் நிர்வாகம் முடிவடைந்ததும், அரபு இராணுவம் பாலஸ்தீனத்துக்குள் பிரவேசித்தது: பாலஸ்தீனத்தில் நடைபெற்ற குழப்பங்கள் சமாதானத்துக்குவிடும் சவாலாக இருந்ததால், சமாதானத்தை நிலைநாட்டி சட்டத்தை நடைமுறைப்படுத்தவே இந்த நடவடிக்கையிலிறங்கியதாக ஐ. நா. சபைக்கு அவர்கள் அறிவித்தனர். எனினும், ஐ. நா. தலையிட்டது. அதன் பலனுக யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. ஆனுல் ஒரு சமாதனத்தீர்வு காண ஐ. நா. வால் முடியவில்லை. அதன் பயன், மீண்டும் சண்டை மூண்டது. “ஐ. நா. வின் நீதியை மட்டுமே நம்பி அரேபியர்கள் இருந்த நேரத்தில், இஸ்ரேலுக்கு அதை ஆதரிக்கும் நாடுகளிலிருந்தும் உலகெங்குமுள்ள யூதர்களிடமிருந்தும் நிதியுதவியும், இராணுவ உதவியும் கிடைத்தன'' என்று அரேபியர்கள் குற்றம் சுமத்துகிறுர்கள்.

### நாசரின் நடவடிக்கை

இஸ்ரேலுடன் நடந்த அப்போதைய போரை நாசரே முன்னின்று நடத்தியதுமல்லாமல் போரில் பங்கு பற்றி காயப்பட்டார். அன்றுமுதல் நாசரின் ஒவ்வொரு நடவடிக்கையும், இஸ்ரேலைப் பழிவாங்குவதும் அரேபியர்களுக்குநீதிகிடைக்க செய்வதுமாகவே இருந்து வருகிறது.

இந்த இஸ்ரேலிய - அரேபிய யுத்ததின் விளைவாக இஸ்ரேலில் வாழ்ந்து வந்த அரேபியர்கள் துரத்தப்பட்டனர். 12இலட்சம் அரேபியர்களில் ஆக 70,000 பேரே இஸ்ரேலில் எஞ்சினுர்கள்.

இஸ்ரேல் மக்கள் நிறைந்த ஜெருசலேம் பகுதியில் 1948ம் ஆண்டு செப்டம்பர் 17ந் திகதி ஐ நா. சமாதானத் தூதுவராகச் சென்றிருந்த போக் பேர்னடெட் பிரபு என்பார் கொலை செய்யப்பட்டார். இவர் கூறவிருந்த சிபார்சுகள் இஸ்ரேலுக்கு அனுசரணையாக இருக்க மாட்டாது என்பதை முன் கூட்டியே அறிந்த யூதர்கள் அவரை கொன்று விட்டதாக அரேபியர்கள் கூறுகிறுர்கள்.

### ஐ. ந. சபை தீர்மானம்

பேர்னடெட் பிரபு தாம் இறப்பதற்கு இரு நாட்களுக்கு முன் ஐ. நா. வுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில், 'தங்கள் வீட்டுக்கு திரும்ப விரும்பும் அகதிகளை உடனடியாக அப்படிச் செய்வதற்கு அனுமதியளித்தலே பிரச்சினைக்கான உடனடித்தீர்வு' என்று குறிப்பிட்டிருக்கிறுர்.

1948ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ந் திகதி ஐ. நா. சபை அவர் சமர்ப்பித்த மேற்கண்ட ஆலோசனையை ஏற்றுக்கொண்டது. தங்கள் தங்கள் இல்லங்களுக்கு திரும்ப விரும்பும் அகதிகளுக்கு, அப்படிச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அரசாங்கம்கள் எல்லா உதவிகளுங் செய்து கொடுக்க வேண்டுமென்றும் திரும்ப விரும்பாதவர்களுக்கு, சர்வதேச சட்டப்படி அவர்கள் இழந்த சொத்துக்களுக்குரிய நஷ்ட ஈடுகளை சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் வழங்க வேண்டுமென்றும் தீர்மானத்தில் கூறப்பட்டது

### நினைத்தது நடக்கவில்லை

1948 முதல், இன்று வரை ஒவ்வொரு ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்திலும், இத் தீர்மானம், மீண்டும் மீண்டும் படிக்கப்பட்டு வருகிறது. ஆனுல் ஐ. நா. சபையின் இத் தத்தீர்மானம், இஸ்ரேலைப் பொறுத்தவரை செவிடன் காதில் ஊதிய சங்கு போலாகி விட்டது.

ஐ.நா.வில்இஸ்ரேல்நாட்டையும் சேர்த்தாலாவது ஐ. நா. வின் மேற்படி. தீர்மானத்தை இஸ்ரேல் கனம் பண்ணுகிறதா என்று பார்ப்பதற்காக, இஸ்ரேலும் ஐ. நா.வில் ஒரு அங்கத்துவ நாடாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனுல் நினைத்தது நடைபெறவில்லை.

### அரேபியர்களின் குற்றச்சாட்டு

இஸ்ரேல் ஐ. நா. தீர்மானத்தை கனம் பண்ணுவதற்குப் பதிலாக, தொடர்ந்து ஆக்கிரமிப்பிலும், பலாத்காரத்திலும் ஈடுபடுவதாகவும் இது பற்றி ஐ. நா. பாதுகாப்பு சபை பலமுறை கண்டனம் தெரிவித்திருப்பதாகவும் அரேபியா குற்றம் சாட்டுகிறது.

தனது தீர்மானத்தை இஸ்ரேல் நடைமுறைப்படுத்தாதது பற்றியும் அகதிகள் பிரச்சினை தீர முறையாக எதுவித நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாதது பற்றியும், 1965 ம் ஆண்டும் ஐ. நா. சபை இஸ்ரேலுக்கு வருத்தம் தெரிவித்து தீர்மானம் நிறைவேறியிருந்தது.

### பகைமை தீர்வது என்று?

பாலஸ்தீனப்பிரச்சினையென்பது இதுதான் 1,200,000பேர்மேற்பட்ட அகதிகள் அரேபியநாடுகளின் பல பகுதிகளிலும் வாழ்கிறுர்கள். ஏறத்தாழ 700,000பேர் ஜோர்தானிலும், 275,00பேர் காசாவிலும், 160 000 பேர் லெபனுனிலும், 135,000பேர் சிரியாவிலும் இருக்கிறுர்கள்.

இந்த அகதிகளில் 40 வீதமான மக்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகிறுர்கள். 20 ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. அகதிகளின் 3வது தலைமுறை இப்பொழுது அகதி முகாம்களிலுள்ள அழுக்கடைந்த குடிசைகளில்வளர்ந்து வருகிறது. இந்த அகதிகளின் பரிதாப நிலைக்கு என்று தீர்வு காணப்படுகிறதோ — என்று பால்ஸ்தீனப் பிரச்சினை ஐ.நா. சபையின் ஆலோசனைப்படி தீர்த்து வைககப்படுகிறதோ —அன்றுதான் இஸ்ரேல் — அரபு நாடுகளிடையேயுள்ள பகைமை தீர முடியும்.

(ஓர் ஆங்கிலக் கட்டுரையின் தொகுப்பு)

## கள்ளக்......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் பம்பாயில் கைது செய்யப்பட்டார். அதற்குச் சில விநாடிகளுக்கு முன்பு அவர் கொழும்பிற்குத் தொலைபேசி மூலம் பேசி இருக்கிறுர். அவர் யார்?

'சில உத்தியோகத்தர்கள் வல்வெட்டித்துறைப் பட்டினம் முழுவதையும் களங்கப்படுத்த முயற்சி செய்கின்றனர்.

'பொலீஸினுது மாத்திரமன்று ஆயுதம் தாங்கிய இராணுவத்தினதும் பல விதப்பட்ட செய்கைகளையும் நுணுகி ஆராயும்படி பிரதமமந்திரியை கேட்டுக்கொள்கிறேன்.

### பிரதமர் பதில்

திரு. துரைரத்தினத்தின் வேண்டுகோளுக்கு பிரதமர் பதிலளிக்கும் போது இவ்விடயத்தில்தாமதம் ஏற்படவில்லையென்றும். விசாரணை- நடவடிக்கைகள் அட்டோர்னி ஜெனரலுக்கு அனுப்பப்பட்டிருப்பதால், இதுசம்மந்தமாக தான் ஒரு முடிவு செய்யுமுன்பு அவரது ஆலோசனையைப் பெற வேண்டியிருக்கிறதென்றும் கூறினுர்.




# யு. என். பி. 2வது முன்னணி ஆரம்பித்துள்ளதாம்

பிரதமரின் நெருங்கிய நண்பரான வண இந்துருவே பஞ்ஞாதில்ல தேரோவின் கொழும்பு ரோஸ்மீட் பிளேசில் பௌத்த விஸ்வ வித்தியாலயத்தில் யு.என்.பி.யின் 2வது போர்முனை நிறுவப்பட்டது என்று எத்த (11-6-67) ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

இச்செய்தியில் மேலும்குறிப்பிட்டிருப்பதாவது;—

'சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேற்றபட்ட திரு. டி. எஸ். அமரசிங்காவின் அழைப்பின் மீது பிரபல ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகர்களும், அனுதாபிகளும் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டவர்களும் இக் கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

'சிங்கள பெரமுனு' என்ற பெயரில் அவர்கள் ஒரு ஸ்தாபனத்தை இக்கூட்டத்தில் நிறுவினர். அதன் தலைவராகத் திரு. ஆர். ஜி. சேனநாயக்சா தெரிவு செய்யப்பட்டார். ஆனுல் அவர் கூட்டத்துக்கு வந்திருக்கவில்லை. முன்னுள் பிரதம நீதியரசர் திரு. ஹேமபஸ்நாயக்கா போஷகராகவும் முன்னுள் கொலன்னுவ எம்.பி திரு. டி. எஸ். சமரசிங்கா காரிதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். பிரபல ஐ. தே. கட்சி தூணுன திரு. சிரிசோமரணசிங்கா பொருளாளரானுர்.

இந்த பெரமுனுவை நிறுவுவதற்காக முன்னணியில் நின்று உழைத்தவர்களில் 'ஜனஹித்த' பத்திரிகை ஆசிரியர் தர்மசிரிகுருப்பு, நவலோக்க முதலாளி, பேக்ஹவுஸ் முதலாளி காலிங்க ஒபேவங்கா முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

விரைவில் மல்வத்த நாக்யக தேரோ தலைமையில் கொழும்பில் ஒரு கூட்டம் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. யு. என். பியுடன் சுதந்திரக்கட்சியை இணைப்பதற்காக சில தினங்களுக்கு முன்பு தரகுவேலை செய்த சிலரும் இக்கூட்டத்துக்கு வந்திருந்தனர்.' என்று 'எத்த' மேலும் கூறுகிறது.

22 - 6 - 67 முதல்

**வாரசாரம்**

**சுதந்திரனில்**

ஆரம்பமாகிறது.

பிரபல சோதிடர் திருமதி அன்னலட்சுமி மாணிக்கம் எழுதுகிறார்.

## சுதந்திர......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளப்பி விட்டுள்ளதாக அறியப்படுகிறது.

கடந்த தேர்தலில் சுதந்திரக் கட்சி தோல்வியடைந்ததற்கு திருமதி சிறிமாவோ என்ன காரணம் கூறப் போகிறுர் என்பதையும் சுதந்திரக்கட்சியினர் ஆவலுடனிருக்கிறுர்களாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றமனம்

— எஸ். பி. கிருஷ்ணன்

**கொலை,** கொள்ளை, அடி. உதை, வெட்டு, நெருப்பு, பெரு நெருப்பு, வீடுகளும், கடைகளும் இரவு பகலாக எரிந்து கொண்டிருந்தன. இரத்தம் எங்கும் இரத்தம். வீதிகளில் பிணங்கள். நாடு கட்டுப்பாடற்று காடையர்களின் ஆட்சிக்குட்பட்டுக் கிடந்து 'மூன்று நாட்கள் கழிந்தன. நான்காவது நாள் அவசரகால நிலமை பிரகடனப் படுத்தப் பட்டது. நாட்டில் பல பகுதிகளிலிருந்து பாதிக்கப்பட்ட மக்கள், கொழும்பு றோயல் கல்லூரியிலும், பிற கல்லூரிகளிலும் அகதிகளாக அடைக்கப்பட்டு விமான மூலமும், கப்பல் மூலமும் தாயகங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

பாதிக்கப்படாதவர்கள் கூட பயங்கரம் நிலவியதால் தாமாகவே சென்று அகதிகளாகி அரசாங்கச் செலவில் கப்பல்களில் பிரயாணஞ் செய்து பருத்தித்துறை துறைமுகத்தில் இறங்கினுர்கள்.

பயமறியாத இளங்கன்று போல, கலவரம்நடந்த மூன்று நாட்களும், கொம்பனித்தெருவிலிருந்து மலேவீதி பாசன் வீதி வழியாக கோட்டையில் இருக்கும் எனது அலுவலகத்திற்குப் போய்வந்த நான் அவசரகால நிலைமை பிரகடனத்தின் பின் பிற்பகல் 2 மணிக்கே அலுவலகத்திலிருந்து வந்து மலேவீதி 142ம் நம்பர் கட்டடத்தின் மேல்மாடியில் அடைபட்டுக்கிடந்தேன். அப்போதும், வீதியில் காவலர்இல்லாதபோது, இராணுவத்தினரின்வாகனங்கள் ஓடாதபோது கீழே இறங்கி வெளியேபோய் மூடிக்கிடக்கும் 'நாதன் கபே'யை தட்டித்திறப்பித்து தேநீர் குடித்துவிட்டு வரும்போது என் துணிச்சலை நண்பர்கள் வியந்ததுண்டு. அவசரநிலமை. இரண்டாம் நாள். பொலிஸ்படையைச் சேர்ந்த நண்பன்சுந்தரம்என் 'நிலைமை'யைப் பார்த்துப்போக வந்தான். 'எல்லோரும் அகதிகளாகி யாழ்ப்பாணம் போனுர்களே. நீயும் போகலாமே' என்று கேட்டான்.

நான் போகவில்லை. நடப்பது நடக்கட்டும். இங்கேயே இருக்கப் போகிறேன் என்றேன். என்துணிச்சலை சோதிக்கவோ? 'அப்படியென்றுல் றோயல் கல்லூரியில் முருகையன் இருக்கிறுன் அவனும் வேறு சிலரும் என்னிடம்வந்துவிட்டு போனுர்கள். அங்கே சாப்பாட்டிற்கு 'கியூ'வில் நிற்கிறுர்களாம். நீபோய்பார்த்துவாவேன்" என்று தன் சைக்கிளைத் தந்தான்.

சரி என்று புறப்பட்டேன். இரண்டு சோற்றுப் பொட்டலங்களும் வாங்கிக்கொண்டு மலே வீதியால் சைக்கிளை ஓட்டிச் சென்று றோயல் கல்லூரியை அடைந்தேன். மக்கள் வெள்ளத்தில் முருகையனைத் தேடினேன். எதிர்பாராத வகையில் எதிர்ப்பட்டான் அவன். பசியால்வாடிக்களைத்த அவன்உள்ளேஇருந்து ஆயிரமாயிரம் அகதிகளின் நிலைக்கு எடுத்துகாட்டாக விளங்கினுன். எடுத்துச்சென்ற பார்சல்களை அவனிடம் கொடுத்துவிட்டு மறுநாள்வருவதாக சொல்லிக் கொண்டு திரும்பினேன்.

அடுத்தநாள் ஐந்து பார்சல்களோடு போனேன். எல்லாம் வாங்கிக்கொண்டு என்னை உள்ளே வந்து, நண்பர்களைப் பார்க்கும்படி வேண்டினுன். அந்தப் பெரிய கல்லூரியின் மேல் மாடிகள் வகுப்பறைகள் விளையாட்டு நிலையம் எல்லாம் நிறைந்து வழிந்து இருந்த அகதிகளைக்கண்டு என் கண்கள் கலங்கின. அடிக்கடி வந்து என் 'நிலை' அறிந்து போகும் சுந்தரத்தை அடுத்த சில நாட்களாக காணுது கவலைப்பட்டேன். அவனைப்பற்றி நண்பர்கள் மத்தியில் பலவிதமாக பயங்கரமாக கதைகள் உலவின. காடையரை அடித்து நொருக்கினுன். சுட்டுத்தள்ளினுன். தன் இனத்திற்காகப் பாடுபட்டவன் அவன் ஒருவன் தான். அவன் அஞ்சா நெஞ்சன்...அவன் கடமையில் காட்டிய வீரத்திற்காக மேலதிகாரி அவனுக்கு தங்கப் பதக்கம் தர சிபார்சு செய்தாராம்...

ஆனுல் சுந்தரம் ஏன் வரவில்லை? அவன் எங்கே? என் ஏக்கம் பல நாட்கள் நீடிக்கவில்லை. சரியாக ஒரு கிழமை கழித்து அதிகாலை என்னை நித்திரையிலிருந்து எழுப்பினுன் சுந்தரம். நான் திடுக்கிட்டெழுந்து அவன் கையைப் பிடித்து எப்படி...?ஏனப்பா...? எங்கே? இதுவரை...? என்ன நடந்தது...? என்று இழுத்தேன். அவன் என் வாயைப் பொத்தி என்னை தனியிடத்திற்கு அழைத்துப்போய், தாழ்ந்த குரலில் தான் செய்த கடமையின் கதையைச்சொன்னுன். கேட்கவே பயமாயிருந்தது.

'வீரப்பதக்கமு மாமே...' என்றேன்.

'உண்மைதான். நாளைக்குத் தருவார்கள். நான்பொறுத்து வருகிறேன். என்று சொல்லிப் போய்விட்டான்.

ஃ ஃ ஃ

அடுத்த நாளிலிருந்து சுந்தரத்தின் வாழ்க்கை ஒரு புதிய பாதையில் போய்க்கொண்டிருந்தது.

அன்று காலை வீரபதக்கம் பெற இன்ஸ்பெக்டரின் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டான சுந்தரம். இன்ஸ்பெக்டர் பெரேரா தன் கையைக் குலுக்கி தான் காட்டிய வீரத்திற்கு நன்றி சொல்லி வாழ்த்துவார் என்றுதான் சுந்தரம் எதிர்பார்த்தான். ஆனுல் இன்ஸ்பெக்டர் பெரேரா உத்தியோக தோரணையில் சற்று கடுகடுப்புடன் சுந்தரத்தைக் கேட்டார். உன் பதிவுப்பெயர் என்ன? சுந்தரம் விழித்தான். அந்தக் கேள்வியில் புதைந்துள்ள இரகசியம் அவன் மனதில் பட்டெனப்பளிச்சிட்டது. இருந்தாலும்...அவன் பொலிசில் சேர்ந்து ஐந்து ஆண்டுகளாக எவரிடமிருந்தும் எழாத கேள்வி இப்போது எழுந்துள்ளது. அதுவும் தங்கப் பதக்கத்திற்கு குறுக்கே. அவன் சிந்தனை எங்கோ சென்று கொண்டிருந்தது.

சுந்தரத்தின் மௌனத்தை, கலைத்து 'இந்தா இதைப் பிடி' என்று ஒரு கடிதத்தை நீட்டினுர் இன்ஸ்பெக்டர். சுந்தரம் அதனை வாங்கிப் பிரித்தான். அது சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தது. அவன் தயககத்தை கவனித்த இன்ஸ்பெக்டர் 'கொடு அதை நான் படிக்கிறேன். உனக்குத்தான் சிங்களம் பேசத் தெரியுமே' என்று சொல்லி கடிதத்தை வாங்கிப் படித்தார். படித்து முடித்து நிமிர்ந்து சுந்தரத்தைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர். அவர் முகத்தில் ஒரு கேள்விக்குறி தெரிந்தது.

'சார் இதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது,' என்றுன் சுந்தரம்.

'எதுவுமே தெரியாதா?' இன்ஸ்பெக்டர் ஏளனமாகச் சிரித்தார்.

'சார் மன்னிக்க வேண்டும். இதில் உண்மையிருப்பினும் கூட ஒரு வயதுப் பிள்ளையை பிறருக்கு கொடுத்துவிட்ட ஒரு தாய்க்குகடந்தஇருபத்தெட்டு ஆண்டுகளாக எழாத பாசம், பிரிவு, உறவு இப்போது எழக் காரணம் என்ன? ஒரு வயதிலிருந்து இந்த இருபத்தெட்டு வயதுவரை என்னை வளர்த்து படிப்பித்து மனிதனுக்கிவிட்ட அன்னையைவிட பெற்றவள் எந்த வகையில் பெரியவள், வளர்த்தவளை விட்டு விட்டு பெற்றவளிடம் போய்விடுவது நன்றியாகாது சார்.' அவன் சொன்னதை கவனியாதவர் போலிருந்த இன்ஸ்பெக்டர் மற்றொரு குண்டை தூக்கிப் போட்டார்.

'நீ ஒரு சிங்களவனுக இருந்தும் கலவரத்தின்போது சிங்களவரை அடித்திருக்கிறுய், சுட்டிருக்கிறுய்...?

'சார்! கடமையைச் செய்தேன். உயிரைப் பணயம் வைத்துபாரபட்சமற்றகடமை செய்தேன் எனவேதான் வீரப் பதக்கம் பெறுகிறேன். 'அப்படியிருக்க நீங்கள்...'

இன்ஸ்பெக்டர் சிரித்தார் பெரிதாக. பின் சற்று குரலை தாழ்த்தி 'சரி போ. இந்தா இந்தக் கடிதத்திற்குப் பதில் எழுது. பதில் வந்தால் எனக்குக காட்டு. உனது பதக்கம் பிறகு தரப்படலாம' என்றுர். சுந்தரம் வெளியேறினுன். ஏமாற்றத்தோடு அல்ல. 'கடமையைச் செய்தேன்" என்ற திருப்தியோடு.

## எமது சிறுகதை

சுந்தரம் அந்தக் கடிதத்திற்குப் பதில் எழுதவுமில்லை. அவனது வீரப்பதக்கம் தரப்படவுமில்லை. இந்தச் செய்தி சிறகடித்து ஊரெல்லாம்பறந்தது. கலகக்காரரை அடக்கியவன் என்று புகழப்பட்டான் அவன். வாழ்த்துககளும் பாராட்டுக்களும் வந்தன.

மாதங்கள் சில மறைந்தன. இன்ஸ்பெக்டர் பெரேராவேறு நிலையத்திற்கு மாற்றப்பட்டார். புதிதாக வந்த இன்ஸ்பெக்டர், சுந்தரத்தை அழைத்து அவருக்குரிய பதக்கத்தை அளித்துப் பாராட்டினுர்.

ஆண்டு மலரில் இருந்து மாத இதழ்கள் பல உதிர்ந்து மறைந்தன. அன்று சுந்தரத்திற்கு சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதம் ஒன்று வந்தது. அதுவரை வந்த சிங்களக் கடிதங்களைப் படியாமல் கிழித்தெறிந்தவன் நீண்ட அக்கடிதத்தை படித்துப் பார்க்க விழைந்தான். நெருங்கிய நண்பன் கருணதாசாவிடம் கொடுத்து படிக்கக் கேட்டான்.

மகனே!

உன்னைப் பெற்றவள் நான். உன்னை இழக்கச் செய்தது வறுமை. இந்தத் தோட்டத்தில டாக்டராக வேலை செய்த உன் அப்பா தனக்கு குழந்தையே இல்லையென்றும் உன்னைத்தந்துதவுவதால் என் வறுமையும் அவர் கவலையும் நீங்கும் என்றும் உன்னை செல்வமாக வளர்ப்பதாகவும் மன்றுடிக் கேட்டார். எனவே நான் அன்றிருந்த நிலைமையில் [illegible]

சென்ற டாக்டர் சின்னையா அடிக்கடி உன் சுகம் சொல்லி கடிதம் எழுதுவார். நேரில் நீ நன்றுக வளர்வதாகச் சொல்வார். அந்த நல்ல செய்தியால் நான் மகிழ்ந்தேன் சில காலம்.

உன் அப்பா ஓய்வு பெற்று இந்தத்தோட்டத்தை விட்டுப் போய் சில ஆண்டுகளாக உன்னைப் பற்றி எழுதிக் கொண்டிருந்தார். பின் கடிதம் வருவதில்லை. விசாரித்ததில் அவர் இறந்து விட்டதாகச் செய்தி கிடைத்தது. உன்னை வளர்த்த அன்னையிடமிருந்து செய்தி வரும்எனஎதிர்பார்த்து ஏமாந்தேன் கால வெள்ளத்தில் எப்படியோ உன்னைப் பற்றிய நினைவுகள் மறைந்து விட்டன.

சில மாதங்களுக்கு முன்னர் கதிர்காமம் சென்று திரும்பும் வழியில் காலி முகமைதானப் புற்றரையில் ரதத்தை எதிர் பார்த்து குழுமியிருந்த மக்களோடு நானும் இருந்தேன். என் எதிரே பேசிக கொண்டு சென்ற இரு பொலீஸ்காரரில் ஒருவனின் நெற்றியை தற்செயலாகப்பார்க்க நேர்ந்தது அந்த நெற்றியிலே ஒரு சிறு கறுப்பும் உன் முக வடிவும் எனக்கு என்றே இழந்த எதையோ கண்டது போன்ற பிரமையைத் தந்தன.

மகனே! உன் நெற்றியில் இருக்கும் அந்தக் கறுப்பு டாக்டர் சின்னையாவிடம உன்னை குழந்தையாகக் கொடுக்கும் போதே இருந்த அளவு இருக்கிறது.

விந்தையான ஞாபகசக்தி என்கிறுயா? இருந்தும் சந்தேகம் தான். நீ கோட்டைப் பொலீஸ் நிலையத்தை சேர்ந்தவனுக இருக்கலாம் என்ற குருட்டு நம்பிக்கையோடு அந்த நெற்றிக் கறுப்பையே ஆதாரம் காட்டி இன்ஸ்பெக்டருக்கு ஒரு கடிதம் எழுதினேன். என் எண்ணம் சரி. இன்ஸ்பெக்டர் பதில் எழுதியருந்தார். ஆனுல் அவர் குறிப்பிட்டபடி உன்னிடமிருந்து பதில் வரவில்லை.

பெற்ற மனம் துடிக்கிறது. பெற்ற பிள்ளையை விற்றவளும் ஒரு அன்னையா என்று நீ என்னை இகழலாம். என்னிடம் நீ இருந்திருந்தால் பிச்சை எடுததாவது உன்னை வளர்த்திருப்பன். இந்தத் தோட்டததில் கூலிவேலை செய்து கொண்டிருப்பாய். மாருத செல்வத்தில் வளர்ந்தாய. படித்தாய். உத்தியோகம் என்றளவிற்கு ஏதோ ஒரு பொலிசாகவாதல் இருக்கிறுய்.

ஒரு முறை வந்துபோ என்று இது வரை எழுதினேன். நீ விரும்பவில்லை. பதில் கூட எழுதவில்லை, நீ நன்றியுள்ளவன. உன்னை பாலூட்டித் தாலாட்டி சோறூட்டி படிப்பித்து பெரியவனுக்கிய தாய்க்கு நீ நன்றியுடையனுக இருக்கிறுய். என்றே எனக்குத் தோன்றுகிறது. அது தான் நியாயம் என்றும் எனக்கு இப்போதுதான் தோன்றுகிறது. கடைசியாக,

உன்னிடம் ஒரு உண்மையை சொல்லிவிட வேண்டுமென்று என் நெஞ்சம் எப்பொதும் துடித்துக்கொண்டிடிருக்கிறது. அதனை வேறு எவருக்கும் நீ சொல்லாதே. சொல்லவும் முடியாது. நீ உன் அப்பாவிற்கு சுவீகாரப் பிள்ளையாக இதுவரை இருந்தாய். அவர் உன் அப்பாவே தான். இதை உன்னைப் பெற்றவளிடமிருந்தே அறியும் நீ [illegible] குழம்பமாட்டாய் என்று நம்புகிறேன். மகிழ்வாய் என்று நம்புகிறேன் என்றும் நீ நலமே வாழ என் வாழ்த்துக்கள்

உன் அன்னை மல்லிகா.

கடிதத்தை படித்து முடித்த கருணதாசா ஏதோ சிந்தனையில் எங்கோ பார்த்தபடி இருந்த சுந்தரத்தை உலுப்பி என்னடா இது வினேதமாயிருக்கே என்ற போதுதான் சுந்தரம் சிந்தனைச் சிறையிலிருந்து மீண்டான்.

உன்னை ஒன்று கேட்கிறேன். கருண தயவுசெய்து இதைப் பற்றி யாரிடமும் சொல்லாதே. என் கதை வினேதமானதுதான். பிள்ளை இல்லாத பெற்றுர் என்னை சுவீகாரம் செய்து வளர்த்தனர் என்பதைத் தவிர இந்த இரகசியங்கள் எனக்கு இதுவரை தெரிந்திருக்கவில்லை. இப்போது தான் என் அப்பா என சொந்த அப்பா என்று தெரிகிறது. சரி... பார்க்கலாம்...' என்ற சுந்தரத்தின் கண்கள் கலங்கியிருந்ததை கவனித்த கருணதாசா சரி சரி வா கிளப்பிற்கு... என்று அவனை அழைத்துச் சென்றுன்.

கருணதாசாவின் உதவியோடு சுந்தரத்திற்கும் மல்லிகாவிற்குமிடையே கடிதத் தொடர்பு தொடர்ந்து கொண்டிருந்தது.

இனக்கலவரம் அடங்கி பல மாதங்களாகியும் வீட்டிற்கு போகவேண்டும என்ற எண்ணம் எழவில்லை, சுந்தரத்திற்கு தாயைப் பார்க்க வேண்டும் தங்கையை பார்க்க வேண்டும சரளாவை-எனறே அவன் இதயத்தில் இடம் பெற்று அவளையே மணப்பதென்று தவமிருப்பவளை—பார்க வேண்டும் என்ற ஆவல் எழும்போதெல்லாம் சமீபத்தில் ஏற்பட்ட புதிய தொடர்பு-புதிய பாசம்-புதிய உண்மை-அவனை தடுதது வைத்து வாட்டிக் கொண்டிருந்தன. இந் நிலையில் ஒரு நாள் வளர்த்தவரிடமிருந்து கடிதம் வந்தது.

'கலவரம் முடிஞ்சு ஒரு வருஷமாச்சு. நீ பெரிய வீரனும். இங்க எல்லாரும் கதைச்சினம். இஞ்ச ஒரு கிழம் கிடக்குது எண்டு உனக்கு ஞாபகம் இல்லை. வளத்த கடமைக்காக உன்னை ஒரு கட்டையிலை கட்டிப்போட்டு நிம்மதியாக இருக்க ஆசைப்படுகிறேன். நீ நினைச்சபடியே எதிர் வீட்டுச் சரளாவை கலியாணம் செய்ய விருப்பமெண்டால் உடனே வா. அல்லது எழுது. அவை உன்னட்டை மறுமொழி கேட்டு அவளை வேறிடத்திலை செய்ய இருக்கினம. இனியும் லீவு இல்லை என்று சாட்டு எழுதாதை. உடனே உன்ர தீர்மானத்தை எழுது'

கடிதத்தைப்படித்த சுந்தரத்தின் முன்னுல் அன்னை பொன்னம்மாளே நின்று பேசுவதாக- கேட்பதாக-தோன்றியது. மறுகணம் பெற்றவள் மல்லிகா அவன் முன் தோன்றினுள். இரு அன்னையர் இரு தெய்வங்கள். இருவரையும் ஓரே கோவிலில் வைத்து பூசிக்க எண்ணினுன்.

சரளா! அவளையும் மறந்து இத்தனைகாலம் இருந்தேனே என்று உளம் நொநதான். சிறு வயதில் சரளாவோடு கூடி விளையாடி பள்ளிப்பருவம் தொட்டு, பருவ வயதுவரை ஒன்றுக கூடிப் பழகிப் பேசி வாலிப உணர்ச்சிகள் உந்த காதலை உருவாக்கி வளர்த்து கலியாணம் செய்து கொள்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் பின்வாங்கினாலும் தோற்றிருக்க முடியாது

**அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கு மிடையே போர் மூண்டால், இஸ்ரேலை அழித்து விடுவதே தமது நோக்கமாக இருக்கும் என்று நாசர் முழங்கி வந்தார். யுத்தத்தின் போது இஸ்ரேல் பின் வாங்கி அரபு இராணுவம் இஸ்ரேலுக்குள் நுழைந்திருந்தால், இஸ்ரேலை அழித்திருக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. அப்படி ஒரு நிலை ஏற்பட்டிருந்தால் இஸ்ரேல் கரையிலிருந்து சுமார் 20 மைல் தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் 6வது கடற்படை இஸ்ரேலுக்கு உதவிக்கு வந்து அதனைக் காப்பாற்றியிருக்கும்.**

இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையில் மூண்ட யுத்தத்தில், யாரும் எதிர்பார்க்காதவண்ணம் இஸ்ரேல் பெரும் வெற்றியீட்டிவிட்டது. ஆறு அரபுநாடுகள் ஒன்றுசேர்ந்துஎதிர்த்தும் கூட, 20 ஆண்டுகால சரித்திரத்தை மட்டுமே கொண்ட சின்னஞ்சிறு இஸ்ரேலுக்கு மிகப்பெரிய வெற்றிகள் கிடைத்துள்ளன.

இஸ்ரேலால் இப்படி பெரு வெற்றியீட்ட முடிந்தது எப்படி? இதுதான் இன்று உலக மக்களின் கேள்வி. அரபு நாடுகளின் படைபலத்தையும்இஸ்ரேலின் படைபலத்தையும் எடுத்துக்கொண்டால், இஸ்ரேலின் படைபலம் குறைவானதே. அரபுநாடுகளின் இராணுவபலம்ஏறத்தாழ 600,000 இஸ்ரேலின் இராணுவபலம் ஏறத்தாழ 350,000. அரபு நாடுகளின் விமானப்படை 1267. இஸ்ரேலின் விமானப் படை ஆக 400. இது யுத்தத்திற்கு முன்பு இருந்ததாகக் கூறப்பட்ட படை நிலைமை. இந்நிலையில் இஸ்ரேலினுல் அரபு நாடுகளை வெற்றி கொள்ள எப்படி முடிந்தது?

## திறமை மட்டும் போதுமா?

அரபு நாடுகள் தோற்க வேண்டியேற்பட்டதன் முக்கிய காரணம், முழு அரபு உலகத்தின் ஆகாய ஆதிக்கத்தையும் இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்டமையே. சக்தி வாய்ந்த ஜெட்விமானங்களைக் கொண்ட இஸ்ரேல் விமானக் குடையின் கீழ்தான் இஸ்ரேல் இராணுவம் அரபு நாடுகளுக்குள் முன்னேற முடிந்தது. இது எப்படி சாத்தியமாயிற்று?

அரபு நாடுகளின் விமானப் படையோ இஸ்ரேலின் விமானப் படையை விட ஏறத்தாழ 3 மடங்கு பெரியது. இஸ்ரேல் வீரர்கள் மிகப்பெரிய திறமைசாலிகளாக இருக்கலாம். நாம் அதை மறுக்கவில்லை. எனினும் தன்னைவிட மூன்று மடங்கு பெரியதான அரபு விமானப் படையை இஸ்ரேல் வெற்றி பெறுவது என்ருல் திறமைமட்டும் போதுமானது என்பதை எந்த இராணுவ அறிஞனும் ஏற்மாட்டான்.

## நாசரின் குற்றச் சாட்டு

இஸ்ரேல் ஆகாய வழியைக் கைப்பற்றியதற்கும், அரபுப் படையைத் தோற்கடித்ததற்கும் முக்கிய காரணம் பிரிட்டனும் அமெரிக்காவும் தங்களின் விமானங்களை இஸ்ரேலுக்குக் கொடுத்ததுதான் என்று ஜனதிபதி நாசர் குற்றஞ்சாட்டியிருக்கிருர். இந்தக் குற்றச் சாட்டை அமெரிக்காவும் பிரிட்டனும் மறுத்துள்ளன.

ஆயினும் இஸ்ரேல் மந்திர சக்தியால் அரபு நாடுகளை வெற்றி கொண்டது என்பதை நாம் ஒப்புக்கொண்டாலன்றி, நாசரின் குற்றச்சாட்டில் உண்மையிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. ஒருவன் எத்துணை வலிமை படைத்தவனுயிருந்த போதிலும், 10பேருடன் மோதி வெற்றிக்கொள்ள முடியாது, சினிமாவில் தவிர.

## அகாபா வளைகுடா பிரச்சினை

அகாபாவளைகுடாவைஎகிப்து தடைசெய்ததைத்தொடர்ந்து பிரிட்டிஷ் பிரதமரும், அமெரிக்க ஜனதிபதியும் அமெரிக்காவில் சந்தித்து அகாபா வளைகுடாவைக் கைப்பற்ற வேண்டும் என்று முடிவு செய்ததாக செய்திகள் தெரிவித்திருந்தன. அகாபா வளைகுடாவைக் கைப்பற்றுவது என்றதமது திட்டத்தை நிறை வேற்றுவதற்காக இஸ்ரேலுக்கு விமானஉதவியளித்திருக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பதில் தவறென்ன?

# ஒருகண்ணோட்டம்

ஆகவே பிரிட்டனும், அமெரிக்காவும் எவ்வளவு தூரம் மறுத்தாலும் கூட, யுத்தத்தில் இஸ்ரேலுக்கு ஆதரவாக அந்த நாடுகளின் விமானங்கள் பங்குபற்றியிருக்கின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது.

## எங்கிருந்து கிடைத்தன

அரபு நாடுகளிலுள்ளதைப்போல மும் மடங்கு விமானங்களை யுத்தத்தில் இஸ்ரேல் உபயோகித்ததாக ஒரு செய்தி கூறுகிறது. அதாவது 3792 விமானங்களை இஸ்ரவேல் உபயோகித்தன. 400 விமானங்களைக் கொண்ட இஸ்ரேல் விமானப்படை 3792 விமானங்களாக எப்படி பெருகியது? அந்த விமானங்கள் எங்கிருந்து கிடைத்தன?

பிரிட்டனும் அமெரிக்காவும் இஸ்ரேலுக்கு யுத்தத்தின் போது உதவும் என்பதைதாம் சிறிதும் எதிர்பார்க்கவில்லையென்று நாஸர் கூறியிருக்கிருர். இது விவேகமான பேச்சென்று கூறமுடியாது. இப்படிக் கூறுவது அரபு நாடுகளின் மடமையைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது.

## நாசரின் தவறு

மத்திய கிழக்கில், மேற்கு வல்லரசுகளின் கைப்பொம்மையாக திகழ்கிறது இஸ்ரேல். இஸ்ரேலை உருவாக்கி அதற்கு சகல உதவிகளும் அளித்து, அந்நாட்டை வளர்த்து வருவதே மேற்கு வல்லரசுகள்தாம்.

ஆகவே தாம் பெற்ற குழந்தையான' இஸ்ரேல், அயல் நாடுகளிடம் மோதும் போது, மேற்கு வல்லரசுகள் கண்டிப்பாக சகல உதவிகளையும் கொடுத்தே தீரும். இது சிறு குழந்தைக்குக்கூட தெரியும். இதனைமுன்பே நாசர் தெரிந்து அதற்கேற்றபடி தன்னைத் தயார் படுத்திக் கொண்டிருக்க வேண்டுமல்லவா?

## மேற்கு வல்லரசுகளின் நோக்கங்கள்

அரபு நாடுகளின் [illegible] யேலாதக்கத்தை [illegible] வல்லரசுகள் இஸ்ரேலைப்பயன்படுத்துவார்கள் என்பதை இனிமேலாவது அரபு நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும். மத்திய கிழக்கில், அமெரிக்கா பிரிட்டன் ஆகிய இரு நாடுகளினதும் நோக்கங்கள் என்ன? முதலாவது நாசரை மத்திய கிழக்குநாடுகளில் செல்வாக்கு இழக்கச் செய்து, வீழ்த்துதல். இரண்டாவது சூயஸ் கால்வாயை மீண்டும் கைப்பற்றுதல். மூன்ருவது சிரிய அரசாங்கத்தை அழித்து விடுதல். இந்த மூன்று நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவே மேற்கு வல்லரசுகள் இரண்டும் ஆவல் கொண்டுள்ளன.

## பிரிட்டனுக்கு பேரிடி

ஐக்கிய அரபுக் குடியரசின் ஜனதிபதியாக நாசர் பதவிப் பொறுப்பேற்ற பின்னர், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு மத்தியக் கிழக்கில் ஒரு தலைவலியாக இருந்து வருகிருர். சூயஸ் கால்வாயை நாட்டுடைமையாக்கியது பிரிட்டனுக்கு ஒரு பேரிடியாகவிருக்கிறது. சூயசை மீண்டும் அடைவதற்கான வழிவகைகளைப் பற்றியே பிரிட்டன் சிந்தித்து வந்திருக்கிறது. இதற்கு அடிப்படையாக, நாசரின் செல்வாக்கை அரபு நாடுகளில் வீழ்த்துவதற்கு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. நடைபெற்று முடிந்த யுத்தம் ஓரளவுக்கு அதை நிறைவேற்றியுள்ளது.

சூயஸ் கால்வாயை மீண்டும் கைப்பற்றுவதற்கு சிரிய அரசாங்கத்தை அழிப்பதற்கும் இஸ்ரேலை பயன்படுத்தி வருகின்றன மேற்கு வல்லரசுகள். சுருக்கமாகச் சொல்லப் போனல், 'இஸ்ரேல்' ஒரு குட்டி பிரிட்டனுகவும், அமெரிக்காவாகவும் இன்று இருக்கிறது.

இந்த யுத்தத்தின் வெற்றி தோல்வியை கணக்கிடும் போது, அரேபியர்களுக்கு இது ஒரு சாதாரண தோல்வி; பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் படுதோல்வி. வெற்றி ரஷியாவுக்கு என்று பிரித்துக் கூறலாம்.

## மூலதனத்துக்கு ஆபத்து

யுத்தத்தின் பயனுக அரபு நாடுகளில் இன்று பிரிட்டனும் அமெரிக்காவும் தமது செல்வாக்கை இழந்துவிட்டன. ராஜதந்திரத் தொடர்புகளை இழந்துவிட்டன. இவைக்குப் பதிலாக பிரிட்டன் மீதும் அமெரிக்கா மீதும் தீராத பகைமையுணர்ச்சியும், வெறுப்பும், கசப்பும், இன்று அரேபிய மக்களிடையே தீவிரமாகப் பரவிவிட்டது.

இதன் பயனுக அரபு நாடுகளில் பிரிட்டன் முதலீடு செய்துள்ள கோடிக்கணக்கான மூலதனத்துக்கும் இன்று [illegible] [illegible]விடும்படி அமெரிக்கா இஸ்ரேலை வற்புறுத்தத் தவறினல், அரபுநாடுகளுக்கு அமெரிக்கா மீதுள்ள வெறுப்பு பன் மடங்கு அதிகரிக்கும்.

## வெற்றி ரஷியாவுக்கு

ஆனல் இதில்ரஷியா வெற்றியடைந்துவிட்டது என்று கூறலாம் அரபு நாடுகளிடையே பிரிட்டன், அமெரிக்கா ஆகிய வல்லரசுகளின் செல்வாக்கை அடியோடு அழித்து ஒழித்து விடுவதில் தான் ரஷியா அக்கறை கொண்டிருந்தது. யுத்தத்தின் பயனுக ரஷியாவின் அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது. ஆகவே ரஷியாவுக்கு இது ஒரு வெற்றி.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்று கூறப்படுவது போல' மத்திய கிழக்கில் எழுந்த யுத்தத்தைச் சீன இன்னெரு விதத்தில் பயன் படுத்த முயற்சிசெய்து வருகிறது.

அரபு நாடுகளை ஆதரிக்கும் இந்தியாவையும், ரஷியாவையும், அரபு நாடுகளிடமிருந்து பிரித்துவிடும் பிரசாரத்தைச் சீன நடத்தி வருகிறது.

## சீன ஆடும் நாடகம்

அரபு நாடுகளின் நண்பனுக நடித்துக்கொண்டே அரபு நாடுகளின் உண்மை நண்பர்களைப் பிரித்துவிடும் நச்செண்ணத்துடன் சீன செயல்படுகிறது. ரஷியா அரபு நாடுகளைக் காட்டிக்கொடுத்துவிட்டதென்று சீன பிரசாரம் செய்வதன் நோக்கம் இதுவே. ஆனல் சீனவின் பிரசாரம் அரபு நாடுகளின் செவிகளில் அதிக தூரம் ஏறும். முடியாது என்றும் கூறப்படுகிறது.

யுத்தத்தின் விளைவாக இன்று மேற்கு வல்லரசுகளை எண்ணெய்ப்பிரச்சினை எதிர் நோக்கி நிற்கிறது. பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் எண்ணெய் விற்பதில்லையென்று அரபு நாடுகள் அறிவித்துவிட்டன.

## எண்ணெய்ப் பிரச்சினை

உலகெங்கும் உற்பத்தியாகும் எண்ணெயில் 61 சதவீதம் அரபு நாடுகளிலிருந்து பெறப்படுகிறது. மீதி 39 சத வீதம் தான் ஏனைய உலக நாடுகளில் கிடைக்கிறது.

அரபு நாடுகளைக் கைவிட்டால் இன்று மேற்கு வல்லரசுகளுக்கு எண்ணெய்விற்கக் கூடிய நிலையிலிருப்பது பாரசீகமே. எல்லா நாடுகளும் அங்கு சென்று மொய்த்தால், எல்லா மேற்கத்திய ஆதரவு நாடுகளுக்கும் பாரசீகம் எண்ணெய் கொடுக்கும் நிலையும் இருக்க முடியாது. சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வரும்! ஆகவே மேற்கு வல்லரசுகள் எண்ணெய்ப் பிரச்சினையை எளிதில் சமாளித்து விடமுடியாது.

அங்கு வாங்குவோம், இங்கு வாங்குவோம் என்று பிரிட்டன் சொல்லிக் கொண்டாலும், அது வீண் ஜம்பமே.

## வியட்நாமுக்கு உதவி

இன்று வியட்னும் யுத்தத்தை நடத்த அமெரிக்க விமானங்களுக்கே போதிய எண்ணெய் கிடைக்கவில்லையென்று செய்திகள் கூறுகின்றன. எனவே பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் எண்ணெய் விற்க மறுத்ததன் மூலம், வியட்நாம் மக்களுக்கும் மறைமுகமாக அரபுநாடுகள் உதவியளித்திருக்கின்றன என்றே கூற வேண்டும்.

மத்திய கிழக்கு யுத்தம் ஆரம்பிக்கும் முன்னம், இஸ்ரேலை அழிப்பதே தமது நோக்கம் என்று முழங்கி வந்தார் நாசர். யுத்தத்தின் போது இஸ்ரேலை மூன்று பக்கத்தாலும் வளைத்து யூத அரசாங்கத்தைத் துரத்திச் சென்று மத்திய தரைக் கடலுக்குள் தள்ளி அழித்துவிடுவதே நாசரின் இராணுவத் திட்டமாக இருந்திருக்கலாம்.

## இஸ்ரேல் அழிந்திருக்குமா?

தற்செயலாக, இஸ்ரேல் பின்வாங்கி, அரபு நாடுகள் முன்னேறியிருந்தால், நாசரின் திட்டம் நிறைவேறியிருக்குமா என்று ஒரு கேள்வி எழுகிறதல்லவா?

ஒரு போதும் நிறைவேறியிருக்க முடியாது என்று திட்வட்டமாகக் கூறலாம். ஏன் தெரியுமா? இஸ்ரேலுக்கு கரையிலிருந்த சுமார் 20 மைல் தூரத்தில் மத்திய தரைக் கடலில் அமெரிக்காவின் 6வதுகடற்படை தயாராக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இஸ்ரேல் இராணுவம் பின்வாங்கும் நிலையேற்பட்டு அரபு இராணுவம் இஸ்ரேலுக்குள் பிரவேசித்திருந்தால் அமெரிக்க கப்பற் படை இஸ்ரேலிய அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காக, முன் வந்திருக்கும். அதற்குத் தயாராகவே அது அங்கு நிறுத்தப்பட்டிருந்தது. ஆகவே, யுத்தத்தில் இஸ்ரேலியர்கள் தோல்வியடைந்திருந்தாலும் கூட, ஒரு போதும் இஸ்ரேல் நாடு அழிந்திருக்க முடியாது.

—எஸ். ஆர். எம்.

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்
ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-00
நிர்வாகி
சுதந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜிக்குப் பிடித்தவர்கள்

**என் தந்தை:**

அப்பாவிடம் எப்பொழுதும் எனக்கு அளவில்லாத நன்றி யுண்டு. காரணம் யாதெனில் நாங்கள் பெரிய குடும்பம்... நல்ல செல்வாக்குடனேயே வாழ்ந்த குடும்பம். அப்படிப் பட்ட குடும்பமே வருத்தப் படும்படியா, ஒரு பெரிய வேலை செய்தார் அப்பா...! அவர் அன்று எல்லோரையும் தவிக்கச் செய்துவிட்டு அப்பொழுது தொழிலாளர் சங்கம் நடத்திய வேலை நிறுத் தத்தில் சேர்ந்து ஜெயிலுக்கு போய்விட்டார். பின்னர் இதன் காரணமாக எங்கள் குடும்பம் வறுமையில் வாடத் தொடங்கியது. வருடங்கள் உருண்டன. வாழ்க்கைச் செல வுக்காக வீட்டுச் சாமான்கள் உட்பட விற்கப்பட்டன. அவ ரும் விடுதலைபெற்று வெளிவர வுமில்லை. ஆகவே நானும் எனது சகோதரனும் பள்ளி யில் வாசிக்கக் கூட வழி யின்றி போய்விட்டது. உண் மையைச் சொன்னால் சாப் பாட்டிற்கே வழியில்லை. அத னால் நான் நாடகத்தில் சேர்ந் தேன். வறுமை தொடர பல வருடங்கள் நடித்தேனென்று லும் நடிகனானேன்... இன்று நான் ஒரு நடிகன் என்ற சிறப்பு பெயரோடு வாழ்கி றேன் என்றால். இதன் பெருமை முழுமையாக என் தந்தையையே சாரும்.

**என் அன்னை:**

என் தந்தையால் நசிந்து போன குடும்பத்தை எத்த னையோ வித கஷ்டங்களை யெல்லாம் ஏற்றுக் கொண்டு மக்களை யெல்லாம் வளர்த்து, மக்கள் எல்லோரும் மிக நல்ல படியாக இருக்கணும், நாங் கள் எல்லோரும் மற்றவர் களுக்கெல்லாம் பிரயோசனப் படும் வகையில் வாழணும்' தன் மக்கள் பொது நோக்கத் தோடு விளங்கணும், என்ற பெரிய ஆசையோடு அன்றும் இன்றும் போதனை செய்பவர். எனக்கும் என் சகோதரர் களுக்கும் பொதுத் தொண்டு செய்ய வேண்டுமென்ற ஆர் வம் இருக்கிறதென்றால்; அது எங்கள் தாயார் எங்களுக்கு அளித்து வரும் பயிற்சிதான்.

**லெனின்:**

ஜாரின் அக்கிரம ஆட்சியை ஒழித்து மக்களிடையே யுள்ள உயர்வு தாழ்வு என்ற எண்ணத்தை அகற்றி எல்லோ ரையும் சமமாக வாழ வைத்த உரருமை லெனின் அவர்க ளுக்கே உண்டு. அவர் தான் உண்மையான மக்கள் தொண் டர்.

**லிங்கன்:**

வெள்ளையர்களுக்கு இயற் கையாக உள்ள நிறத் திமிரை கண்டித்தும். மனிதனை அடி மையாக விலைக்கு வாங்கக் கூடாது, மனிதர்களில் அடிமை, எஜமானர் என்ற பேதம் கிடையாது எல்லோ ரும் மனிதமாணிக்கங்கள் தான் என்று சட்ட பூர்வமாக கொண்டு வந்து, பலவித எதிர்ப்புகளுக்கெல்லாம் ஆளாகி, கடைசியில் தனது எண்ணத்தை நல்ல செய லாக்கி அழியாத புகழைப் பெற்றவர்.

**காந்திஜி:**

காந்தியடிகளைப் பற்றி யாருக்குத் தான் தெரியாது. ஆகவே அவரைப்பற்றி அதிக



மாகச் சொல்லத் தேவை யில்லை. உலகத் தலைவர்கள் எல்லோரையும் விட அவர் மிக உயர்ந்தவர்.

**காமராஜ்:**

தனக்கென வாழாமல், பிறவியெடுத்ததே மக்கள் தொண்டுக்காகத்தான், தான் வாழ்வதே தனது பொன்னாட் டிற்காகவே தான் என்று எண்ணும் ஒரு தன்னலங் கருதா அபூர்வமனிதர்.

**அண்ணா:**

தென்னகத்து மக்களை நாம் யார், நாம் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள், நமது மொழி என்ன என்று சிந்திக்கச் செய்த ஒரு சிந்தனைச் சிற்பி. தமிழ்க்கலை உயர வேண்டு மென்று நினைப்பவர். கலை ஞர்களிடையே மிகவும் அன்பு கொண்டவர். எனது பெய ரோடு சிவாஜி என்ற பெயரை யும் பெரியார் ஈ. வெ. ரா. இணைப்பதற்கு காரணமாக நின்றவர்.



## நடிகர் திலகம் பத்மஸ்ரீ சிவாஜி கணேசனுக்குப் பிடித்தவர்கள் பலர். அவர்களில் ஒரு சிலரைப் பற்றி அவரே இங்கு சொல்கிறார். படியுங்கள்.

**பிருதிவி ராஜ்:**

நாட்டிலே நாடக மேடை கள் அதிகமிருக்க வேண்டும், அப்பொழுது தான் நல்ல நடி கர்கள் தோன்றுவார்கள், கலையை மக்களின் நல் வாழ் வுக்காகத்தான் உபயோகிக்க வேண்டும். கலைஞர்கள் கட்சி சார்பற்று இருக்க வேண்டும் எனறு நினைக்கும் ஒரு பெரிய கலைஞர். பொதுவாக இந்தி யாவிலேயே ஒரு சிறந்த நடி கர் என்று சொன்னாலும் மிகையாகாது.

**சார்லஸ் போயர்-கிரேட்டா கார்போ:**

இவர்கள் இருவரும் உலகில் ஈடு இணையற்ற இரண்டு துருவ நட்சத்திரங்கள் அவர் களைப் பார்த்து நடிப்பு என் றால் என்ன என்று தெரிந்து கொள்ளலாம்.

**பத்மினி:**

நினைத்த மாத்திரத்தில் ஆயி ரம் கோணங்களை தனது முக பாவத்தால்,நடிப்பால் செய்து காட்டும் நடிகை. தன்னுடன் நடிக்கும் நடிகர் எப்படி நடிக் கிறார், அவர் நடித்ததைவிட நம்முடைய நடிப்பு இந்தக் கட் டத்திலே, இந்த முறையிலே நன்றாக அமைய வேண்டு மென்ற ஆர்வ எழுச்சி மிக்க அன்பான சகோதரி.

**சாவித்திரி:**

எனது தங்கை. நண்பனின் மனைவி. தான் நடிப்பது மட் டும் போதாது, இன்னும் இதைவிட உயர்வாக எப்படி நடிக்க முடியும், கேட்போர்



பார்ப்போர் வியக்கும் படி யாக வசனங்களை சொற்சிதை வின்றி உணர்ச்சி ததும்பும் ஒப்பற்ற முறையிலே எப்படிப் பேச முடியுமென்று தெரிந்த நடிகர்களைக் கேட்டு புரிந்து கொள்ளும் ஒரு நன்றியுள்ள கலை சகோதரி.

**கலைவாணர்:**

எவருமே மறக்க முடியாத ஒரு கலைஞர். எல்லோரது உள் ளத்திலும் நீங்காது இடம் பெற்று விட்ட ஒரு மூத்தவர். நடிகர்கள் எப்படியெல்லாம் நடந்துக் கொள்ள வேண்டு மென்று வழி காட்டிய ஒரு மாமேதை.



அண்மையில் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடை பெற்ற சட்டமாணவர் முத்தமிழ் விழாவில் செல்வி கௌரி முத்துக்குமாரசாமி நடனவிருந்தளிக்கிறார்.

## திரைவாணன் பதில்கள்

செல்வி. செல்வராணி,
சாவகச்சேரி.

கே: நடிகை தேவிகா திரு மணம் செய்து கொண்டது உண் மையா?

ப: ஊர், உலகம் அறிய இன் னும் அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை.

கே: நடிகர் எஸ். வி. ரங்க ராவ் பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர் என்கிறேன் நான். எனது சிநேகிதி அதை மறுக்கின்றார். இதில் யார் கூறு வது சரி?

ப: வெற்றி உங்கள் சினே கிதிக்குத்தான்!

ஃ

ஆர். ரவீந்திரன்

கே: மக்கள் திலகம் நடித்த படங்கள் எத்தனை?

ப: இதற்கு பலமுறை பதில் சொல்லிவிட்டேன். அரசகட்டளை அவரது 96வது படம்!

ஃ

எஸ். எஸ். நாதன்
ஏறாவூர்-4

கே:' கந்தன் கருணை' படத்தில் முருகனுக்கு கீழ்ப் படிந்து இருக்க, வேண்டிய வீரபாகு, அலட்சியமாக முருகனுக்கு கண்சிமிட்டுவது, சிரிப்பது, கட் டளையிடுவது போன்றவை மூல மாக, முருகனை அலட்சியப் படுத்தியிருப்பது சரியா?

ப: மிகப் பெரிய தவறு. கந்தன் கருணையைத் தயா ரித்த ஏ. பி. என். வீரபாகு வின்பாத்திரத்தன்மைக்கேற்ற படி சிவாஜியை நடிக்க வைக் காமல்,சிவாஜிக்காக'வீரபாகு' பாத்திரத்தை இப்படி [illegible] டபித்ததை ஒரு போதும் சரி யென்று ஒப்புக்கொள்ள முடி யாது.

கே: மேல் நாட்டுப் பாணியை காப்பியடித்து தமிழ் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை களை தனித்தமிழ் படங்கள் என்று கூற முடியுமா?

ப: 'தமிங்கில' படங்கள் என்று, அழையுங்கள்!

ஃ

க. நவரத்தினம்
சோரமோட்டை

கே: சினிமாப் படத்தை எதற் காகத் தயாரிக்கிறார்கள். சிறந்த பொழுது போக்கு, என்றா? அல்லது வேலை இல்லாத் திண் டாட்டமா?

ப: பணம் சம்பாதித்தலே முழு முதல் நோக்கம். மற்ற தெல்லாம் அதன்பின்பே!

ஃ

எஸ். ஏ. மக்கள்தாசன்
உருத்திரபுரம்

கே: கலைக்குரிசில் என்ற பட் டம் சிவாஜிகணேசனுக்கு எவ் விடத்தில் யாரால் எப்பொழுது வழங்கப்பட்டது?

ப: தினகரன் ஏட்டினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தமிழ் விழாவில் நடிகர் திலகத் [illegible]

எஸ். வாசுதேவன்,
அக்கரைப்பற்று

கே: தமிழ் நாட்டில் 'பெற் றால்தான் பிள்ளையா' இப்பொழு தும் ஓடுகின்றதா?

ப: இல்லை!

ஃ

எம். திமுகலன்,
உருத்திரபுரம்

கே: நடிகர் ஆர். முத்துரா மன் எந்தக் கட்சியைச் சேர்ந்த வர்?

ப: அரசியலிலும் சரி சினி மாவிலும் சரி எந்தக் கட்சியை யும் சேராமல் தானுண்டு தன் தொழிலுண்டு என்று இருப்ப வர் முத்துராமன். ஆனால் சம தர்ம நோக்கம் கொண்டவர்.

சு. துவராசா,
காரைநகர்

கே: மக்கள் திலகம் எம். ஜி. ஆரினால் ஒரு நல்ல கதையை எடுத்து படமாக்கி ஜனாதிபதி பரிசைப் பெற முடியாதா?

ப: மக்கள் திலகம் மக்களுக் காக படங்களைத் தயாரிக்கி றாரே தவிர ஜனாதிபதி பரிசை எதிர்பார்த்து அல்ல!

ஃ

திரைவாணன்,
சுதந்திரன் கலைப்பூஞ்சோலை
த. பெ. இல. 1183,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காங்கிரசிலிருந்து விலகிய காரணம் என்ன?

## ‘பப்பி’ அளித்த பதில்கள்

**நடிகை பத்மினி சமீபத்தில் அளித்திருந்த சில பதில்கள் இங்கு இடம் பெற்றுள்ளன.**

கே: நீங்கள் இதுவரையில் நடித்துள்ள படங்களில் எப்படம் தங்களின் வாழ்க்கைக்கு முற்றிலும் தொடர்புள்ளதாக தங்களின் மனதிற்கும் மிகவும் பிடித்ததாக அமைந்தது என்பதைப் பற்றி கூற முடியுமா?

ப: என் வாழ்க்கைக்கு தொடர்புடையதாக ஒரு திரைப்படமும் இதுவரையில் அமைந்ததில்லை. நான் சுமார் 17 வருடங்களுக்கு மேலாக சினிமாத் தொழிலில் ஈடுபட்டு வருகிறேன். இந்தக் காலங்களில் நான் பலருடைய வாழ்க்கையின் முக்கியமானவளாகத்தான் பாகமேற்று நடித்து வந்துள்ளேன். பண்புள்ள குடும்பப் பெண் பாகம் எனக்கு மிகவும் பிடித்தது.

கே: உங்களுக்கு அழியாப் புகழை அளித்தது நடனக் கலையா? அல்லது நடிப்புக் கலையா?

ப: நடனக்கலையில் ஆரம்பித்து நடிப்புக்கலைக்கு வந்தேன். இரண்டும் எங்களுக்கு அழியாப் புகழை அளித்தன.

கே: சினிமாத் தொழிலில் நீங்கள் விரும்பாத நிகழ்ச்சிகள் ஏதேனும் உண்டா?

ப: ‘அட்ஜஸ்மெண்ட்’ என்கிற அர்த்தமற்ற வார்த்தை நம் சினிமா உலகிலிருந்து சென்றால் மிக நன்றாக இருக்கும்.

கே: உங்கள் திரைவாழ்வில் உங்களுக்கே பிடித்த ஒரு நடிகரைப் பற்றி ஏதேனும் கூற முடியுமா?

ப: எல்லா நடிகர்களையுமே எனக்குப் பிடிக்குமென்றாலும் நடிகர் திலகம் சிவாஜி அண்ணாவுடன் தான் நான் சுமார் 16 படங்களில் பாகமேற்றுள்ளேன். ஆகவே அவரைப்பற்றித் தான் எனக்கும் அதிகமாகத் தெரியும். அந்த ஒப்பற்ற நடிகருடன் சேர்ந்து நடிப்பதில் நான் என்றுமே பெருமையும் கொண்டவள். சகோதரர் சிவாஜி ஒரு சிறந்த நடிகமேதை. எப்பாகத்திலும், அப்பாகமாகவே தன்னை மாற்றிக் கொள்ளும் திறமைபடைத்தவர். அவருக்கு இணை அவரே தான்.



கே: வெற்றிப்படங்களை உருவாக்கும் முறையைப் பற்றி தாங்கள் பெற்ற அனுபவத்திலிருந்து ஏதேனும் கூற முடியுமா?

ப: திரைப்படம் தயாரிக்க முற்படும் ஒவ்வொருவருடைய நினைவும் தாங்கள் வெற்றிப்படங்களை தயாரிக்கிறோம் என்பது தானே! ஆனால் வெற்றி என்பது அவரவர்களின் திறமைக்கேற்ற முறையில் சந்தர்ப்ப சூழ்நிலையில் அமைகின்றது. இருப்பினும் வெற்றிப்படத்தை தயாரிக்க முதலில் சிறந்த கதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கே: நீங்கள் ஒப்பற்ற புகழைப் பெற யார் ஆரம்பத்தில் முக்கிய காரணமாய் விளங்கியவர் என்பதைக் கூற முடியுமா?

ப: எங்கள் அன்புக்குரிய தாயாரின் தமக்கை திருமதி பி. கே. பிள்ளை அவர்கள் தான் ஆரம்பத்தில் எங்களுக்கு நடனம் கற்றுக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்து வைத்தார்கள். அவர்களின் முயற்சி தான் எங்களை முன்னுக்குக் கொண்டு வந்தது.

கே: சினிமாவுலகம் எந்த வித முன்னேற்றத்தில் அக்கறை செலுத்தினால் அதற்குள்ள கெட்ட பெயர்கள் மறையும்?

ப: கெட்ட பெயர்கள் இருந்தது என்னவோ உண்மை தான். அவை இப்பொழுது மெள்ளமெள்ள மறைந்து கொண்டே வருகிறது. நம் தமிழ் நாட்டில் தான் இவ்வாறெல்லாம் கருதப் படுகின்றது என்றும் கூறுவேன். ஆனால் மற்ற நகரங்களில் எல்லாம் சினிமாத தொழில் ஒரு பெரும் நாகரிகமாகவும் சிறந்த கலையாகவும் கருதப்பட்டுவருகிறது.

கே: அரசாங்கம் சினிமாத் தொழிலுடன் எந்த விதத்தில் ஒத்துழைக்க வேண்டுமெனத், தாங்கள் கருதுகிறீர்கள்?

ப: சினிமா நட்சத்திரங்களையும் சினிமாத் தொழிலில் உள்ளவர்களையும் அரசாங்கம் எந்த விதத்தில் பயன்படுத்திக் கொள்ளுகிறதோ...? (அதாவது நிதி திரட்டவும், நிதி கேட்கவும், தேர்தல் காலம் போன்ற இன்னும் பல வகைகளிலும்) அதே மாதிரி சினிமா சம்பந்தப்பட்டவர்களுடன் அரசாங்கமும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்.

கே: உங்களின் திருமணத்துக்குப் பின்பு, அதாவது இப்பொழுது சினிமா உலகைப்பற்றி எவ்வித அபிப்பிராயம் கொண்டுள்ளீர்கள்?

ப: அன்றும் இன்றும் என்றும் சினிமாக் கலையை ஒரு கலைக் கோயிலாகத் தான் கருதுகிறேன்.

கே: இந்திப்படங்களின் கதை சங்கீதம் போன்ற முறைகளைப் பின்பற்றுவதினால் தமிழ்ப் படங்களின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என்பது உண்மையா?

ப: முன்பெல்லாம் தான் அப்படியிருந்தது. ஆனால் இப்பொழுது தமிழில் வெற்றி பெற்ற படங்கள் தான் இந்திப்படங்களாகத் தயாராகி வெற்றியையும் பெறுகின்றன.

கே: படத் தயாரிப்பாளர்கள் நட்சத்திரங்களுடன் எந்த அளவு ஒத்துழைத்தால் நட்சத்திரங்களின் ஒத்துழைப்பும் அவர்களுக்கு கிடைக்கும்?

ப: நட்சத்திரங்களும் படத் தயாரிப்பாளர்களும் ஒற்றுமையுடன் ஒரேமாதிரியாக ஒத்துழைத்தால் எல்லாமே சிறந்த முறையில் முடியும்!

கே: காங்கிரஸில் இருந்து தாங்கள் வெளியேறக் காரணமென்ன?

ப: காங்கிரஸில் உள் கட்சி ஜனநாயகம் கிடையாது. சர்வாதிகார மனப்பான்மையில் நடந்து கொள்ளுகிறது. அதனால் தான் விலகினேன்.



‘அன்பேவா’ படத்தில் புரட்சி நடிகரும் கன்னடத்துப் பைங்கிளியும் இப்படி ஆட்டம் போடுகிறார்கள்.

### ஆலங்குடியின் அத்திப் பூ

பாடலாசிரியர் ஆலங்குடி சோமு தயாரிக்கும் ‘அத்திப்பூ’ விற்கான படப்பிடிப்பு அண்மையில் கோல்டன் ஸ்டூடியோவில் நடைபெற்றது.

இரண்டுநாள் படப்பிடிப்பிலும் நாகேஷ் கலந்து கொண்டார்.

கதை-உரையாடலை எழுதியுள்ள கே. பாலசந்தர் [illegible] மற்றும் ஜெமினி கணேசன், [illegible] ராஜி ஆகியோரும் நடிக்கின்றனர்.



காதல் வேகம் கையைப் பிடித்து முறுக்கச் சொல்கிறதோ? — செல்வம் படத்தில் சிவாஜி, விஜயா.

## ஜெயலலிதா விரும்பும் ஹாலிவூட் நடிகை

இத்தாலியில் பிறந்தாலும், சிறந்த நடிகைக்கான அமெரிக்க ‘ஆஸ்கார்’ பரிசைத் தட்டிக்கொண்டு போய் இருக்கும், சோபியா லோரனையே நான் பார்க்க விரும்புகிறேன்.



காரணம்: என்னைப்பொறுத்த வரை எனக்கு அவர் ஒரு சவாலாகவே இருந்து வந்திருக்கிறார். படங்களில் நடிக்க அவர் முயற்சித்து, பல கம்பெனிகளின் படிகளில்ஏறி சந்தர்ப்பம் கேட்ட போதெல்லாம் அவருக்குச் சரியான பதில் கிடைக்கவில்லை; போதுமான ஆறுதலும் சொல்லப்படவில்லை. துணை நடிகையாகவே சிலசில படங்களில் நடித்து, தன் கலை ஆர்வத்தைத் தணித்துக் கொண்ட அவருக்கு, இத்தாலியின் முன்வணி டைரக்டர் கார்லோ பாண்டியின் தொடர்பு கிடைத்தது. அவரது முயற்சியால் பலபடங்களில் நடிக்கும் வாய்ப்புப் பெற்று, இன்று அவர் பிறந்த இதாலியில் மட்டும் அல்ல, உலகிலேயே சிறந்த நடிகைகளில் ஒருவர் என்று புகழப்பட்டு வருகிறார்.

அவரது முயற்சிக்கு தகுந்த பலனும் கிடைத்து விட்டது. அவரைப் போல் நானும் முன்னேறத் துடிக்கிறேன். அதனாலேயே அவரது வாழ்க்கையை எனக்கு ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

சோபியாவை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தால், “ஆரம்ப காலத்தில் நீங்கள் பல படக்கம்பெனிகளுக்குச் சென்று சந்தர்ப்பம் கேட்ட போது, தர மறுத்து விட்டார்களே, அப்போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?” என்று கேட்டுத் தெரிந்து கொள்ளவே ஆசைப்படுகிறேன்.

## ஆறு நாய்கள் வளர்க்கும் நடிகை இவர்

ரூபி, சாம்சன, டிலேவா, ப்ளப்பி, பேபி, டாமி என்ற பெயர்களில் ஆறு நாய்க்குட்டிகள் பிரசன்னாவின் வீட்டில் இருக்கின்றன. அந்த நாய்களிடம் இருக்கும் ஒரு விசேஷ குணம் என்னவென்றால், பிரசன்னா கோபமாக இருக்கும் போது, ஒன்று கூட, அருகில் வராது. அவர் வெளியே புறப்படும் போது ஒன்று கூட, குறுக்கே வராது.



‘பிரைட்ரோஸ்’ என்ற பெயருடைய ஜப்பான் தயாரிப்பு டிரான்ஸிஸ்டர் ஒன்று பிரசன்னாவிடம் இருக்கிறது. அதன் அமைப்பு ‘குரோப்’ போல இருக்கும். அதை பிரசன்னா கையில் எடுத்துக்கொண்டால், படப்பிடிப்புக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். படப்பிடிப்புக்குப் புறப்படும் போது எதை மறந்தாலும் மறக்காவிட்டாலும், இந்த டிரான்சிஸ்டரை மட்டும் மறக்க மாட்டார் பிரசன்னா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகப்பருக்கள் மறைய சில இயற்கை மருந்துகள்

முகப்பருவுக்கு முக்கிய காரணம் பருவ மலர்ச்சி என்றாலும் மலச் சிக்கலும் காரணமாகின்றது. நமது தோலில் வியர்வை சுரப்பிகளில் உள்ள இயல்பான எண்ணெய்ப் பசையும் காரணமாகின்றது. மலச்சிக்கலேஇல்லாது கவனித்துக்கொள்ள வேண்டும். காலே மாலே இரு வேளை மலங் கழித்தல் நலம். தண்ணீர் அடிக்கடி குடிக்க வேண்டும். காபி, டீ அடிக்கடி குடித்தலே நிறுத்த வேண்டும். குளிர்ந்த நீரில் முகத்தை அடிக்கடி கழுவவேண்டும். ஈரத்துணியால் தேய்த்துத் துடைக்க வேண்டும்.

பழம், காய்கறி, கீரை நிறைய உண்ண வேண்டும். பொரித்த பண்டங்களேயும், இனிய பண்டங்களேயும் மிகையாகச் சாப்பிடக் கூடாது.

(1) முள்ளுக்கீரைத்தண்டின் இலே அல்லது நீர்முள்ளி இலேயை உலர்த்தி எரித்த சாம்பலே ஆமணக்கெண்ணெயில் குழைத்துத் தடவலாம்.

(2) தேங்காய் எண்ணெயை முகத்தில் நன்றாகப் பூசித் தேய்க்க வேண்டும். 5 அல்லது 6 நிமிடம் சென்று பச்சைப் பயறு மாவு, அல்லது கடலே மாவு போட்டு நன்றாகத் தேய்த்துக் கழுவ வேண்டும். நாளும் காலே மாலே இவ்வாறு செய்தால் முகப்பரு வராது. வந்ததும் மறையும். முகம் பொலிவுற்றுத் திகழும். நாளும் தவருது மேற்கொண்டால் முகம் அழகுக்களே வீசும். ஆனல் பவுடர், ஸ்னே பயன் பயன்படுத்தக்கூடாது.

(3) எலுமிச்சம்பழச் சாற்றை நாளும் காலே மாலே முகத்தில் தேய்த்து 15 நிமிடம் சென்று கழுவிவர முகப்பரு வராது. வந்ததும் மறையும். எலுமிச்சம்பழத் தோலே எடுத்து உலர்த்தித் தூள் செய்து கடலே மாவில் அல்லது பச்சைப்பயற்று மாவில் கலந்து முகம் கழுவலாம்,

(4) அதிமதுரத்தைச் சந்தனக் கல்லில் இழைத்துப் பூசுவதால் முகப்பரு மறையும்.

(5) கர்ப்பூர எண்ணெய் அல்லது புனுகு தடவுவதால் முகப்பரு மறையும்.

(6) கண்டங்கத்தரி வேர், எள், மரமஞ்சள் வேர்ப் பட்டை, பார்லி ஆகியவற்றைச் சம அளவில் சேர்த்து அரைத்துப் பூசுவதால் முகப்பரு மறையும்.

(7) வெண்கடுகு, சந்தனம், அதிமதுரம், தாமரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு அகில், வெட்டி வேர், மரமஞ்சள், ஆகிய வற்றைச் சம அளவில் சேர்த்துத் தூள் செய்து வைத்துக் கொண்டு நாளும் தேய்த்துக் கழுவ முகப்பரு வராது. முகமும் அழகு பெறும்.

(8) வேப்பம் பருப்பு, புங்கம் பருப்பு ஆகியவற்றை உலர்த்தி சமஅளவில் எடுத்துத் தூள் செய்த பவுடரை நாளும் தேய்த்துக் கழுவுதலும் நலம்.

(9) பெண்கள் குறிப்பாக பருவ மகளிர் நாளும் தவருது மஞ்சள் பூசிக் குளித்தல் வேண்டும். மஞ்சள் துண்டுகளேச் சுண்ணும்பு நீரில் ஊறவைத்து (தெளிந்த நீர்) எடுத்து உலர்த்தி இடித்துத் தூள் செய்யவும். அத்துடன் பச்சைப் பயறு மாவு, அல்லது கடலே மாவு கலந்துகொள்ளவும். இதனே நாளும் தவருது பெண்கள் முகத்தில் பூசி முகம் கழுவ வேண்டும். தவருது மேற்கொள்வதால் முகப்பரு வராது. முகம் பொலிவு பெற்று அழகோடு திகழும்.

ஆனல், போலிமயமான நவ நாகரிக அழகு சாதனங்கள் எனப்படும் பவுடர், ஸ்னே, கிரீம், தைலம் ஆகிய நச்சுப் பொருட்கள் உடனே நீக்க வேண்டும். அவைகள் இயல்பான தோலின் பொலிவைக் கெடுத்து இளமை முகத்தில் கிழட்டுக்களே வடியச் செய்கின்றன!

# பெற்றமனம்

(0-ம் பக்கத் தொடர்ச்சி)

வோம் என்று ஒப்பந்தமும் பேசிவிட்டு, உத்தியோகத்திற்கு வந்தான். கடிதத் தொடர்பு இருந்தது. லீவில் போகும் போது கண்டு கதைத்து நம்பிக்கையைப் புதுப்பித்து வந்தான். ஆனல் கடந்த பன்னிரண்டு மாதங்களாக மறந்திருந்தானே ஏன்? என்ன நடந்தது?

தருணத்தைப் பயன்படுத்தி, ஒரே கல்லில் வேண்டிய மாங்காய் அத்தனேயையும் வீழ்த்தி விடத் திட்டமிட்டான் சுந்தரம். செயலில் இறங்கினன்.

சரளாவைக் கலியாணம் செய்து கொள்ள உடன்பட்டு நாள் குறிப்பிட்டு எழுதும்படி கடிதம் எழுதினன் வளர்த்தவளுக்கு. செய்தியறிந்த சரளா துள்ளிக் குதித்தாள். லீவு கிடையாது என்று ஓராண்டுக்கு மேலாக ஊருக்குப் போகாமல் தட்டிக்கழித்தவனல்லவா சுந்தரம்?

பெற்றவளின் பதில் கடிதம் வந்தது. கடிதம் வந்த ஐந்தாம் நாள் கலியாணத்திற்கு னாள் என்று கண்ட சுந்தரம் உடனேயே பெற்றவளுக்கு கடிதம் எழுதினன். பிரயாணச் செலவிற்கு பணமும், ஊர்விலாசமும், அனுப்பினன்.

'எப்பாடு பட்டாகிலும் வந்து சேர், அதன் பின் உன்னே என்னுடனேயே வைத்திருக்கிறேன்' என்று எழுதினன்.

யாழ்ப்பாணத்து கீழ்த்திசையில் சந்திரபுரம் பழம் பெருமைவாய்ந்த சிறு கிராமம். அக் கிராமத்தில் பணக்காரச் சின்னேயா என்று அழைக்கப்படும் சிறு செல்வந்தர்தான் டாக்டர் சின்னேயா. அவர் மறைந்த பின்னும் அந்தப் பெயரும் பணமும் இவர் மனேவி பொன்னம்மாளே அக் கிராமத்திலேயே பெரிய மனுசியாக்கிக் காத்து வந்தன. சுந்தரத்தின் கலியாணத்தை ஊர் கதைக்கும் வகையில் ......... செய்ய திட்டமிட்டாள் பொன்னம்மாள். அலுவல்களும் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

டாக்டர் சின்னேயாவின் மாடிவீடு, தோட்டம், தெரு எல்லாம் மாவிலே மலர் மாலே தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேள நாத சுர வாத்தியங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. நண்பர்களும் சுற்றத்தவரும் அலுவல்களே துரிதமாக கவனித்து செய்து கொண்டிருந்தனர்.

முகூர்த்த நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. 'மாப்பிள்ளேக்கு தண்ணீர் வார்க்க நேரமாகிறது' ஒரு பெரியவரின் குரல். நண்பர்கள் மணமகனே அழைக்கிருர்கள். தொடர்ந்து பல கிரிகைகள்.

மணமகனே பெண் வீட்டிற்கு அழைத்துப் போகிருர்கள். அப்போதிருந்தே சுந்தரத்தின் கண்கள் எதையோ யாரையோ தேடிக்கொண்டிருந்தன.

சரியாக மாலே ஐந்து மணிக்கு கொட்டு மேளம் கொட்ட பெற்றவள் ஆனந்தக் கண்ணீர் உகுத்த, வளர்த்தவள் மகிழ, நண்பரும் மற்றவரும் வாழ்த்த, சரளாவின் கழுத்திலே தாலியைக் கட்டினன் சுந்தரம். திருமணம் முடிந்தது. வந்தவர்கள் மணமக்களே வாழ்த்தி பரிசளித்து விடை பெற்று போகிருர்கள்.

சுந்தரத்தின் கண்கள் அந்த பரந்த நெடும் பந்தலின் எல்லேவரை இருக்கும் எல்லோரையும் அலசுகின்றன.

என்ன அநியாயத்தைக் கண்டானே? எழுந்து விரைந்து நடந்தான். தூரத்தே வெகுவிரைவாக நடந்து கொண்டிருந்த சிங்கள உடை யணிந்த ஒரு பெண்ணேப் புரிந்துகொண்ட சுந்தரம் அவளேத் தடுத்து நிறுத்தி. நீங்கள்...... நீங்கள்...... என்று அவனின் சொற்கள் தடுமாறின, கண்கள் கலங்கின.

மகனே! என் ஆசை நிறைவேறிவிட்டது. உன்னே மணக் கோலத்தில் பார்க்கக் கிடைத்தது பெறுதற்கரிய பேறு. பெற்ற கடனே செய்துவிட்டாய். என்னே நீயன்றி வேறெருவரும் தெரிந்து கொள்ள வேண்டாம். அதனல் உனக்கு கறை ஏற்படலாம். என்னே தடுக்காதே. நான் வருகின்றேன்...'

சுந்தரத்தை கட்டித்தழுவி ஒரு முத்தமளித்துவிட்டு விரைந்து போய்க்கொண்டிருந்தாள் அவனேப் பெற்றவள்.

இரு தெய்வங்களே வணங்க வென்று அவன் கட்டிய கோவிலில் ஒரு தெய்வம்— அவனேப் பேணி வளர்த்த தெய்வம்—மாத்திரம் இருந்தது. தன் பிள்ளே பிற அன்னேயின் அணேப்பில் செல்வச் சிறப்போடு வாழ்கிறது என்ற திருப்தியோடு வலிய வந்து காட்சியளித்த தெய்வம் போய்விட்டது. இனி என்றுமே அவன் கண்களில் பட மாட்டாள் மல்லிகா, ஆனல் அவன் நெஞ்சில் இன்னும் ஓவியமாக திகழ்கிருள்.

(யாவும் கற்பனே)

—

# இஸ்லாமிய...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் போன்ற விளேயாட்டுக் கலேயம்சங்களே வளர்ப்பதற்காக கலேக்கழகம் வகுப்புக்களே நடத்த ஒழுங்கு செய்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க நுண்கலேக் கல்லூரியில் இதற்கான பயிற்சி அளிக்க விசேட பிரிவு ஒன்றை ஏற்படுத்தச் செய்தல் அவசியம்.

மற்றும் இஸ்லாமியக் கலேயார்வமுள்ள இளேஞர்களே முஸ்லிம் நாடுகளுக்கு அனுப்பி இஸ்லாமியக்கலே பற்றிய அறிவும், பயிற்சியும் பெற வசதி செய்தல் வேண்டும்.

ஜனப். எம். டி. எம். அனு ஹார்தீன் இக்குழுவின் உறுப்பினராவார்.

# போப் துரை....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகக் குழுவில் ஓர் அங்கத்தினராக இருந்தார்.

(மெய்யப்பன், வீராசாமி ஆகியோர் சம்பந்தமாக போப்துரைக்கு சங்கத்திலிருந்து கடிதங்கள் எழுதப்பட்டதாகவும் அவற்றில்தான் கையெழுத்திட்டதாகவும் சாட்சி கூறினர்.)

வேலுச்சாமி தொடர்ந்து கூறியதாவது:-

'மெய்யப்பன், வீராசாமி ஆகியோர் சம்பந்தமாக நான் எனது பிரதிநிதி திரு. சிற்றம்பலத்துடன் போப்துரையைச் சந்தித்துப் பேசினேன்.

மெய்யப்பன் மீது துரை வழக்கு தொடர்ந்திருந்ததாக அறிந்தேன். நான்மே 8ந்திகதி சில தொழிலாளர்களே கண்டியில் எனது காரியாலயத்தில் சந்தித்தேன். மெய்யப்பன் மீது வாரந்து பிறப்பித்திருப்பதைக் கூறுவதற்கே அவர்கள் வந்திருந்தனர். அவர்களிடையே முதலாவது இரண்டாவது எதிரிகளும் இருந்தார்கள்.

## குறுக்கு விசாரணே

பின்னர் திரு. ஆர். எல் பெரேரா சாட்சியைக் குறுக்கு விசாரணே செய்தார்.

அவரது கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது வேலுச்சாமி கூறியதாவது:-

தோட்டத் தொழிலாளர்களின் முகங்களெல்லாம் ஒரே மாதிரி இருப்பதால், வந்தவர் முதலாவது எதிரியா அல்லது இரண்டாவது எதிரியா என்பது எனக்கு ஞாபகமில்லே. முதலாவது எதிரிவந்திருந்தார் என்பது எனக்கு நிச்சயமே.

## தொழிலாளர் புகார்

எங்கள் சங்கத்தின் தலேவர் திரு. எஸ். என். பொன்னேயா அட்வகேட் திரு. சிற்றம்பலம் உப தலேவராக இருக்கிருர்.

நாங்கள் தகராறில் தலேயிட்டதின் மீதே வீராசாமிக்கும் மெய்யப்பனுக்கும் மீண்டும் வேலே கொடுக்கப்பட்டது.

1941 ஜனவரி 19ந் திகதி பெரிய கங்காணிக்கும் செல்லேயா கணக்கப் பிள்ளேக்கும் எதிராக ஏராளமான தொழிலாளர்கள் கையெழுத்திட்ட ஒரு புகார் எனக்குக் கிடைத்தது.

## கணக்கபிள்ளே வாக்குமூலம்

ஸ்டெலன்பர்க் தோட்டத்தில் பணியக் கணக்கில் கணக்கப்பிள்ளேயாக இருந்து வந்த அழகன் சுப்பையா அடுத்தபடியாக சாட்சியமளித்தார்.

அவர் தனது வாக்கு மூலத்தில் கூறியதாவது:-

1வது, 4வது, 6வது எதிரிகள் தேயிலேத் தொழிற்சாலேக்குஅண்மையிலுள்ள ஒரு லயின் வரிசை வீடுகளில் வசித்தார்கள். பாலத்துக்கு வடக்கே ஒரே லயின் வரிசையிலுள்ள வீடுகளில் 3வது, 4வது எதிரிகள் வசித்தனர். 2வது எதிரி மற்ருெரு லயினில் வசித்தார்.

மெய்யப்பன் தோட்டத்தில் ஒரு செல்வாக்குள்ள தொழிலாளி அவர் புல்லு வெட்டுகிறவர்களுக்குக் கங்காணியாகவும் இருந்தார். இவ்வருட ஆரம்பத்தில் அவரை துரை வேலே நீக்கம் செய்தார்.

முதலாவது எதிரி தோட்டத்தில் இருக்கும் போது தலே முடியை முடிச்சுப் போட்டிருந்தார். நெற்றிக்கு கால் அங்குலத்துக்குமேலே ஒரு பகுதி முடியைச் சவரம் செய்திருந்தார்.

## தலேயிற் கைக்குட்டை

முதலாவது எதிரி ஒரு கைக்குட்டையைத் தலேயில் கட்டியிருப்பது வழக்கம். அவர் தலேயில் கைக்குட்டையைக் கட்டியிருந்ததைப் பலதடவை நான் பார்த்திருக்கிறேன். கைக்குட்டையின் ஒரு மூலேயில் ஒரு சாவி முடியப்பட்டிருந்ததையும் நான் பார்த்திருக்கிறேன். அது என்ன சாவி என்பது எனக்குத் தெரியாது.

போப்துரை கொல்லப்பட்ட மே 9ந் திகதி மாலே சுமார் 4அல்லது 4.30 மணிக்கு அரிசி ஸ்டோரில் நான் முதலாவது எதிரியைக் கண்டேன். நான் அரிசி ஸ்டோருக்குப் போகும் போது, முதலாவது எதிரி ஸ்டோருக்கு வெளியே நின்று கொண்டிருந்தார். என்னேக் கண்டதும் அவர் தன்லயினே நோக்கி பாதை வழியே சென்ருர். அரிசி வாங்குவதற்காக அன்று அவர் அங்கே வரவில்லே.

பங்களாவிலிருந்து 3சங்கிலி தூரத்துக்கு அப்பால் அவர் தனியாக நிற்பதை நான் கண்டேன். அன்று அவர் இந்தக் கைக்குட்டையை வைத்திருந்தாரா என்பதை நான் கவனிக்கவில்லே.

துரைதாக்கப்பட்டதாக கேள்விப்பட்டு நான் பங்களாவுக்குச் சென்றேன். அப்பொழுது துரை அங்கே கொண்டு வரப் பட்டிருந்தார். நான் இரவு 2மணிவரை பங்களாவில் தங்கியிருந்து, பின்னர் எனது லயினுக்குச் சென்றேன். அதிகாலே 5மணிக்குப் பங்களாவுக்கு மீண்டும் சென்றேன். அப்பொழுது போலிஸார் வந்திருந்தனர்.

இன்ஸ்பெக்டர் தோர தெனியாவை எனக்குத் தெரியும். அவர் மெய்யப்பனின் லயினேக் காட்டும்படி என்னிடம் கேட்டார். அப்பொழுது அவர் இந்தக் கைக்குட்டையையோ சாவியையோ எனக்குக் காட்டவில்லே.

நான் அவரை அழைத்துச் சென்று மெய்யப்பனின் லயின் அறையைக் காட்டினேன். பின்னர் 2வது எதிரி வசித்த லயினுக்கு இன்ஸ்பெக்டரை அழைத்துச் சென்றேன்.

காலே சுமார் 6மணிக்கு பங்களாவில் ஒரு மேசை மீது இக் கைக்குட்டைஇருப்பதைக் கண்டேன். பின்னர் அது இன்ஸ்பெக்டரின் கையிலிருந்தது. அது யாருடையது என்று அவர் என்னேக் கேட்டார் நிச்சயமாக எனக்குத் தெரியாதென்றும், இது மாதிரி ஒரு கைக்குட்டையை முதலாவது எதிரி அணிந்திருப்பதைக் கண்டிருக்கிறேனென்றும் கூறினேன்.

பின்னர் நானும் இன்ஸ்பெக்டரும் வீரசாமி வசித்த லயின் அறைக்குச் சென்ருேம். அப்போழுது காலே 6.30 மணி இருக்கும். இன்ஸ்பெக்டர் கைக்குட்டையையும் கொண்டு வந்தார்.

வீராசாமியின் அறைக் கதவு மூடப்பட்டு பூட்டு போடப்பட்டிருந்து இன்ஸ்பெக்டர் கைக்குட்டையில் முடிந்திருந்த சாவியை அந்தப் பூட்டுத் துவாரத்தில் நுழைத்துத் திருகினர்.

(வளரும்)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பலவருடகாலத்திற்கு அலுக்க வைத்து அவர்களுடைய குடும்பங்களேப் பட்டினிபோட்டு, வழக்கிலிருந்துதாங்களாகவே வாபஸ் வாங்கிக் கொண்டு ஓடக்கூடியநிலேக்கு அவர்களேக் கொண்டுவந்து விடுகின்றன.

இந்தப்பிரேரணேயைப்பற்றி நான் கூறக்கூடியது என்னவென்ருல், இன்று நடைமுறையில் இருக்கும் சட்டங்களில் மாற்றங்களேக் கொண்டுவந்து தொழிலாளர்களுக்கு உண்மையான பாதுகாப்பு அளிக்கவும், அவர்களுடைய குறைகள் குறைந்த காலத்துக்குள் விசாரிக்கப்பட்டு அவர்களுக்குத் தீர்ப்பு வழங்கத்தக்கதாக இம் மன்றங்களின் சட்டங்களில் மாற்றங்களேக் கொண்டு வரவும் வேண்டும் என்பதுதான். இந்தப் பிரேரணேயை நான் ஆதரிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மாணவர் சிறுகதை

# பாலன் திருந்தினன்

பாலன் அவ்வழியால் தான் பாடசாலைக்குப்போவது வழக்கம். போகும் பொழுதும் வரும் பொழுதும் பனைகளின் கீழே உள்ள புல் தரையில் இரைத் தேடிக் கொண்டு நிற்கும் அந்தக் குருவியை அவன் பார்க்கத் தவறுவதில்லை. யாரோ அதைப் பிடித்து அதன் காலில் வெள்ளைத் துணியைச் சுற்றியிருந்ததால் அதை அடையாளம் கண்டு கொள்வது அவனுக்கு இலகுவாக இருந்தது.

பாலன் அக்குருவியைக் கண்டதும், மெதுவாக நடந்து பனையொன்றின் பின்னல் மறைந்தபடி தனது காற்சட்டைப் பையில் இருக்கும் சுண்டு வில்லை எடுத்து இலக்குப்பார்த்து எய்வான். ஆனல் குருவியோ, பாலனைப்பார்த்துச் சிரிப்பதுபோல் 'கீ...கீ...கீ' என்று கத்தியபடி தன் சிறு இறக்கைகளை அடித்துப்பறந்து சென்று மாமரத்தில் அமரும். பாலன் பலமுறை முயற்சி செய்தும் அக்குருவியை அவனல் அடித்து வீழ்த்த முடியவில்லை. அவனுக்குக் குருவிமேல் தீராத ஆத்திரம் ஏற்பட்டது. தனது சுண்டு வில்லால் அந்தக்குருவியை அடித்து வீழ்த்த வேண்டுமென்பதே அவனது இலட்சியமாகியது.

நாட்கள் சென்றனவேயொழிய அவனது இலட்சியம் நிறைவேறவில்லை.

வசந்தம் வந்தது. நிலத்தில் எங்கும் பசும்புற்கள் தோன்றின. மாமரங்கள் பூத்துக் காய்க்கத்தொடங்கின. பொன்நொச்சிச் செடிகளில் கொத்துக் கொத்தாக மலர்கள் மலர்ந்து குலுங்கின. ஈச்சமரங்களின் செந்நிறக் காய்கள் பழுக்கத் தொடங்கின.

குருவி தனது சின்னஞ் சிறு சொண்டுகளால் சிறு சிறு குச்சிகளை ஒவ்வொன்ருகத் தேடி எடுத்துச் சென்று மாமரத்தில் ஓர் கூடு கட்டத் தொடங்கியது. அக் குச்சிகளுக்கு மேலே தும்புகளைப் போட்டு தனது மென்மையான பாதங்களால் மிதித்து மிதித்து அக்கூட்டை மென்மையாக்கியது. பலநாட்களாகப் பாடுபட்டுக்கட்டிய தனது கூடு விழுந்து விடாத வண்ணம் சில மொத்தமான

—சிங்காரம்—

குச்சிகளை, மிகச் சிரமப்பட்டுத் தூக்கிச் சென்று கூட்டுக்கு அரணக அணைத்து வைத்தது. அதனுள் முட்டைகள் பல இட்டு நான்கு குஞ்சுகள் பொரித்தது.

இவற்றை யெல்லாம் கவனித்து வந்த பாலன், தனது இலட்சியம் நிறைவேறும் நாள் கிடடிவிட்டது என்று மகிழ்ந்திருந்தான்.

அன்று, பாலன் அவ்வழியே பாடசாலைக்குச்சென்றுகொண்டிருந்தான். குருவி கட்டிய அக்கூட்டை நிமிர்ந்து பார்த்தான். குருவி, தான் பல இடங்களில் கொஞ்சம் கொஞ்சமாகத் தேடிக் கொண்டு சென்ற இரையைத் தனது குஞ்சுகளுக்கு ஊட்டிக்கொண்டிருந்தது. இதுதான் தருணம் என்று எண்ணிய பாலன் சத்தமிடாமல் புத்தகங்களைக் கீழே வைத்து விட்டு, சுண்டுவில்லை வெளியே எடுத்தான். ஓர் உருண்டைக் கல்லை சுண்டுவில்லில் வைத்து எய்ய இலக்குப் பார்த்தான்.

ஒன்றும் அறியாத குருவியோ, தனது குஞ்சுகளிலேயே முழுக்கவனமும் செலுத்தி இரையை ஆவலுடன் ஊட்டிக் கொண்டிருந்தது,

பாலன் இலக்குத் தவருதவாறு எய்தான். கல்லு கூட்டைப் பிய்த்துத் தள்ளிவிட இரை தின்று கொண்டிருந்த நான்கு குஞ்சுகளும், கூடும் தரையில் 'தொப்' பென்று விழுந்தன. விழுந்த உடனேயே பிறந்து இரண்டுநாட்கள் கூட ஆகாத அக்குஞ்சுகள் துடித்துத் துடித்து இறந்தன. குருவி அந்தரித்து அலறியவாறு குஞ்சுகளைச் சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தது.

பாலன் திகைத்துப் போய் விட்டான். ஏதோ செய்யத் தகாததைச் செய்து விட்டது போல் உணர்வு உந்த உடம்பு நடுங்கியது. புத்தகங்களை எடுத்துக் கொண்டு, குற்ற உணர்வுடன் பாடசாலைக்குச் சென்ருன். அன்று அவனல் எதிலும் கவனம் செலுத்திப் படிக்கவே முடியவில்லை.

பாடசாலை விட்டதும், அந்த மாமரத்தடிக்கு ஓட்டமாக ஓடிச் சென்ருன். அங்கு அவன் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்தது. அவனது சுண்டு வில்லுக்குத் தப்பித் தப்பி ஏமாற்றிய அந்தக்குருவி தன் குஞ்சுகளை அணைத்தபடி அங்கே இறந்து கிடந்தது.

பாலனுக்கு அழுகையே வந்து விட்டது. சுண்டுவில்லை வெளியே எடுத்தான்; அதன் கெவர் தடியை இரண்டாக முறித்தான்; அதை ஈச்சம் பற்றைக்கு அப்பால் வீசி எறிந்தான்.

அவன் அன்று முழுவதும் எதற்காக அழுதான் என்பது ஒருவருக்குமே தெரியவில்லை.

# மாணவர் அரங்கு

அன்புள்ள தம்பி, தங்கைகளே!

இவ்வார மாணவர் அரங்கில் பாலன்திருந்தினன்" என்னும் சிறுகதை- "சின்னக்குருவி பறக்கிறது" என்னும் கவிதை - வேறு சுவை மிகுந்த அம்சங்கள் இடம் பெறுகின்றன.

மாணவர் அரங்கம் உங்கள் பகுதி ஆதலால் நீங்கள் படித்துச் சுவைத்தவை பற்றி அபிப்பிராயங்கள் எழுதி அனுப்புங்கள் உங்கள் அபிப்பிராயங்களும் மாணவர் அரங்கில் இடம் பெறும்.

அன்புள்ள
கோபு அண்ண


# விஞ்ஞானப் புதுமை

## உலகிலேயே வேகமான ரயில்

'ஜப்பான் சுப்பர் எக்ஸ்பிரஸ்'ரயில் வண்டி மணிக்கு 150 மைல் செல்கிறது. இது டோக்கியோவுக்கும், ஒசேகோவுக்கும்இடையே உள்ள 340 மைலை $4\frac{1}{2}$ மணிக்குள் கடந்து செல்கிறது. இந்த வண்டி இரண்டு இடங்களில் மட்டுந்தான் நிற்கிறது. 960 பிரயாணிகள் செல்வதற்கான வசதிகள் செய்யப்பட்டன; விபத்தைத் தடுப்பதற்குத் தானுக இயங்கும் லெவல் கிராஸிங்கும், தடையாக உள்ள பொருட்களை விலக்குவதற்கு இயந்திரங்களும்பொருத்தப்பட்டுள்ளன. இப்படியான 30 எக்ஸ்பிரஸ் வண்டிகள் டோக்கியோவிலிருந்து தானுகவே இயக்கப்படுகின்றன. பாலம் அமைப்பதற்கு 6 வருடங்களும், 80 கோடி ரூபாயும் செலவாயின.

—ஆர். வடிவேல்

## இவர் யார்?



உங்கள் திறமையை சோதித்துப் பார்ப்பதற்காகவே இப் போட்டி நடத்தப்படுகிறது.

இங்கு துண்டு துண்டாகக் காணப்படும் பகுதிகளை சரியான முறையில் சேர்த்துப் பார்த்தால், தமிழகம் செய்த தவப் பயனுகத் தோன்றிய பெருமகன் ஒருவருடைய உருவம் தோன்றும்.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம், இத்துண்டுகளைச் சேர்த்து முறைப்படி ஒழுங்காக அப்பெரியாரின் உருவந் தோன்றுமாறு ஒட்டி, அதன் கீழ் அந்த அறிஞரின் பெயரையும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவேண்டியதே.

இப் போட்டியில் வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலியான மாணவருக்கு ரூபா 10-00 பெறுமதியுள்ள புத்தகப் பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

போட்டி முடிவு திகதி 30-6-67.

எங்கே, உங்கள் திறமையைப் பார்ப்போமே!

# கடற் குதிரை

## சின்னக்குருவி பறக்கிறது.

"மஹாகவி,,

சின்னக் குருவி பறக்கிறது.
சிறகைக் காற்றில் உதைக்கிறது.
திண்ணைக் குந்தில் இருக்கின்றேன்.
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறது.

வெய்யில் நன்ருய் எறிக்கிறது.
வெளியிற் பயறு காய்கிறது.
பையக் குருவி வருகிறது.
பயற்றுப் பாயை அடைகிறது.

என்னைப் பார்த்துக் கதைக்கிறதே.
ஏதோ கேள்வி கேட்கிறதே.
இன்னும் நாங்கள் பழகாத.
இனிய சொற்கள் சொல்கிறதே.

"பயறு வேண்டும்" என்கிறதோ?
"பசிக்கின்றது, பார்" என்கின்றதோ?
"வயிறு சிறிய தானலும்
வருத்தம் பெரிதே" என்கிறதோ?

பஞ்சம் வந்து சேர்ந்திடுமோ,
பத்துப் பயறு விசுவதால்?
கொஞ்சம் கிள்ளி எறிகின்றேன்.
கொத்திக் கொத்தித் தின்கிறது.

பிறகு நிமிர்ந்து சிரிக்கிறது.
பின்னற் திரும்பிப் பார்க்கிறது.
சிறகைக் காற்றில் உதைக்கிறது.
சின்னக் குருவி பறக்கிறது.

கடல் குதிரை எனப்படுவது விசித்திரமான அமைப்பைக் கொண்ட சிறிய கடல்மீன் ஆகும் அதன் விஞ்ஞானப் பெயர் 'ஹிப்போகாம்பஸ்' என்பது. குதிரை வளைவு என்னும் பொருள்படும் இரண்டு கிரேக்க மொழிகளானது இது. 'பைப்பிஸ்'என்னும் குழல்மீன் வர்த்தகத்தைச் சார்ந்தது. வர்க்கப்பண்புகளில் சில, உடலானது எலும்பு வளையங்களால் மூடியிருத்தல், முகமானது குழாய் போன்று நீண்டு அதன் முனையில் சிறிய வாய் இருத்தல், செவுள்கள் இதழ் போன்ற பிரிவுகளுள்ளவையாய் இருத்தல் போன்றவையாம்.

எவையெல்லாம் கடற் குதிரையின் உடலில் காணப்படுகின்றன. இந்தப் பிராணியில் சுமார் ஐம்பது இனங்களுண்டு. சில இனங்கள் ஒன்று அல்லது இரண்டு அங்குலம் வரையே வளரும். சில ஓரடி நீளமிருக்கும். இவை அயனமண்டலக் கடல்களிலும் சம தட்பவெப்ப வலயத்துச் சற்று வெப்பமான கடல்களிலும் இருக்கின்றன. இதன் தலை குதிரையின் தலையை ஒருவாறு ஒத்து இருக்கும். தலையானது உடலுக்கு ஒரு கோணத்தில் பொருந்தி தலையைத் தனியே நன்ருகத் திருப்பக் கூடியவாறு அமைந்துள்ளது. வால் நீண்டு குறுகிச்சென்று முடிகின்றது. இதன் முனையில் மீன்களுக்கு [illegible] புக் கிடையாது. இதன் வால் பகுதி முதலியவற்றைச் சுருள் போலச் சுற்றிக் கொண்டு கெட்டியாகப் பற்றிக் கொள்ளக் கூடியது.

இவ்வாறு பற்றிக்கொள்ளக் கூடிய வாலுடைய மீன் இது ஒன்றுதான். இந்த மீன்பெரும்பாலும் சற்றுச் செங்குத்தான நிலையிலேயேநிமிர்ந்து நீந்தும். நீந்தும் போது முதுகின் நடுவிலுள்ள துடுப்பையும் தோள் துடுப்புக்களையும் விசிறிபோல அசைத்துக் கொண்டு நிமிர்ந்தபடியே மெல்ல நீந்திச் செல்லும்.

ஆண் கடல்குதிரைக்குவாலில் கீழ் புறத்தில், அதன் தொடக்கத்திலே ஒரு பைஉண்டு. பெண் அதில் முட்டைகளை இடும். அவற்றை ஆண் பத்திரமாக வைத்துக் கொண்டு காக்கும். அப்பைக்குள் குஞ்சுகள் பொரித்து கேள்விக்குறி போன்ற அமைப்பில் வெளி வரும். அவை திரும்பவும் அப் பைக்குள் புகுந்துக்கொள்வதும் உண்டு. இவைகளே புதுமையான அமைப்பைக் கொண்ட கடற் குதிரையைப் பற்றிய விபரங்களாகும்.

—ஐவகர்ஷா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)

விஜிதா (அட்டன்) திவொளி (நூரளை) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேன் (பதுளை) வெம்பிளி (கண்டி)

★ சிவாஜி கணேசன் ★ கே. ஆர், விஜயா

எஸ். வி. சகஸ்ரநாமம், எம். வி. ராஜம்மா,

ரங்கராவ், நாகையா, சுந்தரிபாய்

நடிக்கும்

வி. கே. ஆர். பிக்சர்ஸ்





# செல்வம்

கதை, வசனம், டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

## 19ந் திகதி முதல்

சப்பயர் (வெள்ளவத்தை) கெப்பிட்டல் (கொழும்பு)

மொடேன் (பண்டாரவளை) லஷ்சுமி (இரத்தினபுரி)

பிறின்ஸ் (காலி) அசோகா (புத்தளம்)

ஜெய்சங்கர் ஜெயலலிதா

நடிக்கும்

# நீ

ஜூன் 16 வெள்ளி முதல்: வின்சர் (யாழ்ப்பாணம்)

ஜூன் 19 திங்கள் முதல்: செல்லமகால் (கொட்டாஞ்சேனை)

நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டுநகர்) மற்றும் திரைகளில்

ஜெமினி கணேசன், சாவித்திரி, பாலாஜி, கே. ஆர். விஜயா

நாகேஷ் நடித்த



# அண்ணாவின் ஆசை

செல்லமகால் 3 வது வாரம்
ரவிச்சந்தர், பாரதி, தங்கவேலு, நாகேஷ் நடித்த

## எங்க பாப்பா

கெயிட்டி 6 வது வாரம்
எம். ஜி. ஆர். சரோஜாதேவி

## நாடோடி

# சிலோன்எண்டடெயின்மன்ட்ஸ் நிருவகத்தார்

தம் இரசிகப் பெருமக்களுக்கு அளிக்கவிருக்கும் சில தித்திக்கும் திரைவருந்துகள்!

வீனஸ் பிக்சர்ஸ் அளிக்கும் சாரதா புரொடக்ஷன்ஸ்

# பட்டணத்தில் பூதம்

★ ஜெய்சங்கர் ★ கே. ஆர். விஜயா ★ பாலாஜி ★ மனோகர் ★ நாகேஷ் இன்னும் பலர் நடித்த

டைரெக்ஷன்: எம். வி. ராமன் தயாரிப்பு: ரி. கோவிந்தராஜன்

ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிடோன் அளிக்கும்
சன்பீம் - ஜி. கே. கம்பைன்ஸாரின்

## பட்டத்து ராணி

ஜெமினி கணேஷன் பானுமதி கல்பனா தேவர் நடித்தது
மேற்பார்வை: ஏ. பீம்சிங் டைரெக்ஷன்: எஸ். ராமநாதன்

நவசக்தி பிலிம்ஸ்

## நான் யார் தெரியுமா?

ஜெய்சங்கர் பாரதி
விஜயஸ்ரீ ராதிகா ஓ. ஏ. கே. தேவர் சோ நடித்தது
கதை: சின்ன அண்ணாமலை டைரெக்ஷன்: எம். வி. ராமன்

அண்ணா புரொடக்ஷன்ஸ்

## பவானி

ஜெய்சங்கர், எல். விஜயலட்சுமி,
அசோகன் சுந்தரராஜன் விஜயகுமாரி நடித்தது
கதை-வசனம்: கே.எஸ். கோபாலகிருஷ்ணன் டைரெக்ஷன்ஸ்: ராமண்ணா

தெண்டாயுதபாணி பிலிம்ஸ்

## "தெய்வச் செயல்"

முத்துராமன், பாரதி, சுந்தரராஜன் நடித்தது
கதை: எம். எம். ஏ. சின்னப்பாதேவர் டைரக்ஷன்: எம். ஜி.


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில்
1967-ம் வருடம் ஜூன் மாதம் 15-ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org